Sangathamil
# சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
குரல் – 77 | சர்வதேச மின் செய்தித்தாள் | யூலை 15 2024

## இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை தொடர்கிறது...
## STRUCTURAL GENOCIDE AGAINST THAMILS CONTINUES IN SRILANKA





தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

























விளம்பரத் தொடர்புக்கு அழையுங்கள்: 437.345.4203


Sangathamil
# சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
சர்வதேச மின் செய்தித்தாள்

www.sangathamil.ca




## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**ஒரு பலம் வாய்ந்த சர்வதேச சக்தியாக அணிதிரண்டு, எமது மக்களின் விடிவுக்காக உலகத் தமிழினம் உரிமைக்குரல் எழுப்பவேண்டும்.**






# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

437 345 4203

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# விழுதெறிந்த விருட்சத்தின் வெளித்தெரியா வேர்கள்

## கரும்புலி லெப். கேணல்

## சுபேசன் / கிள்ளிவளவன்




கரும்புலி லெப். கேணல் சுபேசன்!

இவனின் குடும்ப விருட்சம் ஒரு அண்ணனும் மூன்று அக்காவும் , நான்கு தம்பியும் , ஒரு தங்கையும்.

நேரம் நள்ளிரவை நெருங்கிக்கொண்டிருந்தது. அந்த இரவின் அமைதி குலைந்து நீண்ட நேரமாகிவிட்டது. கருமை பூசியிருந்த இருளினை இடையிடை முழங்கிய துப்பாக்கி, குண்டுகளின் வெளிச்சம் சீர்குலைத்துக்கொண்டிருந்தது.

எதிரியின் பலமான தடைகளை உடைத்துக்கொண்டு உள்நுழைந்த எமது கரும்புலி அணிகள் தாக்குதல்களை வேகப்படுத்தின. நாங்கள் தேடிச்சென்ற இலக்குகள் குறித்த நேரத்திற்குள் தகர்த்தெறியப்பட்டன. இலக்குகளை அழித்தும் கரும்புலி மேஜர் குமுதனிடம் இருந்து பின்வாங்கும்படி கட்டளை கிடைத்தது.

நாங்கள் பின்வாங்குவதர்க்கான வியூகங்களை ஏற்படுத்தி வேகமாகப் பின்வாங்கத் தயாரானோம். ஆனால் எங்கள் அணியினைப் பொறுப்பேற்று வந்திருந்த சுபேசனிற்க்கு காலிலும், நெஞ்சிலும் குண்டு பாய்ந்திருந்தது. எங்களுடன் சேர்ந்து சுபேசனால் பின்வாங்க முடியவில்லை. தூக்கிக்கொண்டு வந்தாவது அவனைக் காப்பாற்றுவோம் என முயற்சித்தோம். அந்த நிலையில் அது சாத்தியப்படாத காரியம்.

“என்னைப் பார்த்து நிற்காதீர்கள். என்னைத் தூக்கிக்கொண்டு பின் வாங்க இயலாது. நீங்கள் போங்கோ”

சுபேசன் எங்கள் எல்லோரையும், பார்த்து எதுவித கலக்கமும் இல்லாது உறுதியாக இறுதி விடை தந்தான்.

எப்படி அவனைப் பிரிந்து போவது, எங்களுக்கு அது கஸ்ரமாக இருந்தது.

“நீங்கள் நிறையச் சாதிக்க வேண்டியனீங்கள். என்னைப் பார்த்து நின்று வீணாய் காயப்படாதீர்கள் தயவுசெய்து போங்கோ … நான் சாஜ்சரை இழுக்கப்போறேன்…”

இப்பொழுது நாங்கள் அவனைப் பிரிந்து போனால் இன்னும் ஒருசில வினாடிகளுக்குள் அங்கே சம்பவிக்கப்போகும் அந்த நிகழ்வு நினைத்துப்பார்க்கவே உயிரைப் பிளிந்தது. இனி என்றுமே, எப்பவுமே அவனைப் பார்க்கவோ அவனோடு பேசவோ முடியாது.

அப்படி ஒரு நிகழ்வு இங்கே நடக்குமானால்… எண்ணிக் கொள்ளவே நெஞ்சு கனத்தது. “சுபேசன் வீரச்சாவடைந்து விட்டான்” என்று எப்படி அவன் தங்கையிடம் போய்ச்சொல்வது. அதை அவள் எப்படித் தாங்கிக்கொள்ளப்போகிறாள்…?

“சுபேசன் தங்கை மீது எவ்வளவு பாசம் வைத்திருந்தான். என்னமாதிரி எல்லாம் நேசித்தான். சின்ன வயதில் இருந்து ஒருவர் மேல் ஒருவர் அளவில்லாத பாசம் வைத்து வளர்ந்தவர்கள். தாய் - தந்தையிலோ, மற்ற சகோதரர்களிலோ வைத்த பாசத்தை விட சுபேசன் மீது அதிக பாசம் வைத்திருந்தாள் அவள்.

நாங்கள் சீனன்குடாத் தாக்குதலுக்காக பயிற்சி எடுத்துக்கொண்டிருந்த வேளை…

சுபேசனின் தங்கையை யாரோ ஒருவன் கடத்திச் சென்றான். சுபேசன் துடித்துப்போய் ஓடிச்சென்று தங்கையைக் காப்பாற்றுகின்றான். இருந்தாலும் தலையில் பலமாக அடிபட்டு மயங்கி விடுகிறாள். மயங்கிய தங்கையை கைகளில் சுமந்து, பின் ஓரிடத்தில் தண்ணீர் தெளிக்கவே அவள் மயக்கம் தெளிந்தாள்.

இப்படி ஒரு கனவினைக் கண்டுவிட்டு அவன் நிஜமாகவே துடித்துப்போய் விட்டான். நித்திரையில் திடுக்கிட்டு விழித்தவனுக்கு மறுபடியும் தூக்கம் வரவில்லை. தங்கையின் நினைவுகளே சுற்றி சுற்றி அவன் கண்களுக்குள் நுழைந்தன.

விடிந்ததும் தங்கையிடம் சென்று அவளைப் பார்த்து தான் கண்ட கனவினை அவளோடு கதைத்த பின்னர்தான் அவனின் மனம் ஆறுதலானது. இரவு கனவு கண்டுவிட்டு எழுந்து போராளிகளிடம் கூறும்போது எவ்வளது துடித்தான். கனவிலேயே தங்கை படும் கஸ்ரத்தைக் கண்டுவிட்டு தங்கைக்கு என்னவோ - ஏதுவோ என ஏங்கிய அவனது உணர்வுகள் தங்கையை இறுதியாய் பிரிகின்றவேளை எப்படி இருந்திருக்கும் , அவனின் மனம் என்ன பாடுபட்டிருக்கும்…!

ஆனையிறவுப் படைத்தளமே எமது இலக்கிற்கான இடம். எமது முகாமில் இருந்து நாங்கள் புறப்பட்ட அந்த இறுதி நேரம்….

நாங்கள் எல்லோரும் வாகனத்தில் ஏறி அமர்ந்து விட்டோம். இன்னும் சில வினாடிகளில் வாகனம் புறப்பட்டுவிடும். இறுதியாய்ப் பிரிகின்ற அந்தக்கணம் - எல்லோரும் மாறி மாறி விடை கொடுத்துக் கொள்கின்றோம். இந்த இருதியான் விடைகொடுப்பு யார்யாருக்கு நிரந்தரமாய் போகும் சர்ந்தப்பம் கிடைக்குமோ தெரியாது. என்றுமே, எப்பவுமே இனிக்கான முடியாத அந்தப் பிரிவு நிகழ்ந்த வேளை…

சுபேசனை விட்டு பிரிந்திருக்க முடியாது இயக்கத்திற்கு வந்த அவனது பாசத்தங்கையும் அங்கே நிற்கின்றாள். இன்னும் ஒன்றோ - இரண்டோ வினாடிகளில் அவன் புறப்படப்போகின்றான். அந்த ஒரு சில வினாடிகளைக் கூட தங்கையுடனேயே பேசிக்கழித்தான்.

இரண்டு பெருநதிகள் ஓடிவந்து கலக்குமே ஓர் இடம்… அங்கு எழுகின்ற ஆர்பரிப்பினைப் போன்று இரண்டு பேர் மனதிற்குள்ளும் எத்தனையோ மனக்குமுறல்கள், என்னால் சொல்ல முடியவில்லை.

போராளிகளுடன் சிறிதுகாலம் பழகிப் பிரியும்போது கூட தாங்கிக்கொள்ள முடியாத சுபேசன் , நினைவு வந்த நாளில் இருந்து உயிராய் நேசித்த தங்கையின் பிரிவை எப்படித்தான் தாங்கிக் கொள்ளப்போகின்றான்.

தங்கைக்கு தெரியும் அண்ணன் கரும்புலி என்று. இப்பவும் கரும்புலித் தாக்குதல் ஒன்றிற்குத்தான் போகின்றான்… போனான்…

சீனன்குடாவில் இலக்குகளை அழித்துவிட்டு வந்தமாதிரி இந்தச் சண்டையிலும் இலக்கு அழித்துவிட்டு அண்ணான் திரும்பி வரமாட்டானா?…! அவளது மனம் பிராத்தித்தது.

உயிரோடு ஒட்டிய உறவல்லோ. சுபேசனிற்க்கும் வேதனையாகத்தான் இருந்தது. தங்கையின் கண்ணீரத்துடைத்து “அழக்கூடாது! தலைவர் இருக்கிறார். கவலைபடக்கூடாது” தங்கையிற்கு அறிவுரை சொல்லி, ஆறுதல் வார்த்தைகள் கூறி எவ்வளவோ மனப்போராட்டத்தின் மத்தியில் பிரிக்க முடியாத பின்னிப்போன உறவைப் பிரித்துக்கொண்டு வாகனத்தில் ஏறி அமர்ந்துகொள்கிறான்.

அவன் அண்ணனுக்கு கையசைத்தாள். அவனும் கையசைத்தான். வினாடியாகளிக் காலம் மிக வேகமாக விழுங்கிக் கொண்டது. தங்கையின் விசும்பல் காதில் கேட்கிறது. தங்கையின் சிறு கலக்கத்தைக் கண்டு தாங்கிக்கொள்ள முடியாத சுபேசனிற்கு எப்படி இருந்ததோ.

வாகனம் மெல்ல மெல்ல நகரத்தொடங்குகின்றது. மீண்டும் ஒரு தடவை தங்கையைப் பார்த்துவிட வேண்டுமென ரோச்சடித்துத் தங்கையைப் பார்க்கிறான். தங்கையின் முகம் தெரிகின்றது. அவளின் வாட்டத்தைக் கண்டது , அவளிற்கு ஆறுதல் சொல்லவேண்டும் போல துடித்தது அவன் மனம். வாகனம் மெல்ல மெல்ல வேகம் கூடியது. பிரிவைத் தாங்க முடியாத சுபேசன் தலைகவிழ்ந்துகொள்கிறான்.

இந்த இறுதி நேரம் அவன் உணர்வுகள் எத்தனை தடவை சிலிர்த்திருக்கும் இவ்வளவு பாசமான் உறவினைவிட இந்தத் தேசத்தின் மீதும் மக்களின் மீதும் எவ்வளவு உன்னதமான பற்று வைத்திருக்கின்றான். அவனது இலட்சியம் எவ்வளவு புனிதமானது. அவன் தன் தேசத்தில் எல்லோரையும் ஆழமாக நேசித்தான். அதனால்த்தான் அவர்களின் துயரத்தைக்கண்டு தாங்கிக்கொள்ள முடியாமல் கரும்புலியானான். அடுத்தவர் துயரத்திற்கு தோள்கொடுக்கவும், மற்றவர்களின் வேதனைக்காக கண்ணீர் சிந்தவும் பழகிய இதயம் அவனது இதயம்.



தலைவர் ஒரு போராளியை எப்படியெல்லாம் எதிர்பார்த்தாரோ அத்தனியும் பிரதிபலிப்பதாகத் திகழ்ந்தான்.

1993ம் ஆண்டு தன்னைக் கரும்புலிகள் அணியில் இணைத்துக் கொண்டவன் சுபேசன். இன்றுவரை எத்தனை ஆண்டுகள் மனம் சலிக்காது கொள்கை ஒன்றையே நெஞ்சில் சுமந்து எவ்வளவு கடுமையான பயிற்சிகளை எல்லாம் எடுத்திருப்பான். இறுதி மூச்சிலே பகை எரிக்க அந்த இலக்கு கிடைக்கும் வரை இத்தனை வருடங்கள் காத்திருந்தானே...! அவனது இலட்சியம் எத்தனை பெரியது.

அவனிற்கு உடம்பில் ஏராளமான காயங்கள். 1994ம் ஆண்டு காலப்பகுதியில் ஆனையிறவுப்படைத்தளம் மீதான் கரும்புலித் தாக்குதல் ஒன்று செய்வதற்கான இறுதி வேவிற்கு சுபேசன் சென்றிருந்தான். அன்று எதிரியுடன் மோத நேர்ந்தது. சுபேசனிற்கு கையில் பெரிய காயம். அன்று ஏற்பட்ட காயத்தினால் இன்றும் பெரிய வேலைகள் செய்தால் கைமூட்டுக்கள் கழன்று விடும். பின் அவன் தானே கைமூட்டைக்கொழுவி தன் பணிகளை செய்துகொள்வான். எல்லா ஆயுதங்களையும் சிறப்புற இயக்கம் தேர்ச்சி பெற்றதோடு சிறந்த சூட்டு வல்லமையும் கொண்டவன். எந்த ஒரு இருக்கானாம சூழ்நிலையிலும் நன்கு திட்டமிட்டு அணிகளை சிறந்தமுறையில் வழிநடத்தக் கூடியவன். சீனன்குடாவில் எதிரி வானூர்திகளையும், கனரக ஆயுதங்களையும் அழித்த கரும்புலி அணிகளுக்கு சுபேசனே தலைமையேற்றுச் சென்றிருந்தான்.

அன்றொருநாள் ஆகாயக் கடல்வெளித் தாக்குதலை முறியடிப்பதற்காக வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவுக்கு சிங்கள இராணுவம் பெரிய நகர்வு ஒன்றினை மேற்கொண்டது. அதற்க்கு ஊடறுப்புத்தாக்குதல் மேற்கொள்ள நின்ற எமது அணிகளுடன் ஒன்றாக சுபேசனும் 05 பேர் கொண்ட வேவு அணியுடன் நின்றான். முதல் நாள் சுபேசனும் சென்று வேவு பார்த்துவிட்டு வந்திருந்தான்.

அடுத்தநாள் ஊடறுப்புத் தாக்குதலுக்குத் திட்டமிடும் வேலை இருந்தமையால் சுபேசன் வேவுக்குச் செல்லாது முகாமில் தங்கிக்கொள்கிறான். சண்டைச் சூழ்நிலை காரணமாக உணவு விநியோகம் பெரிது சீர்குலைந்திருந்தது. எப்போதாவது வரும் சாப்பாட்டை சாப்பிடுவது, சாப்பாடு வராவிட்டால் சாப்பாட்டை எதிர்பார்க்காது தத்தமது கடமைகளை செய்யவேண்டிய ஒரு சூழ்நிலையே இருந்தது. அன்று சாப்பாடு வந்திருந்தது ஆனால், அங்கே நின்ற ஆட்களை விட வந்திருந்த சாப்பாடுப் பொட்டலங்கள் குறைவானதாக இருந்தது. 05 பேர் கொண்ட சுபேசனின் அணிக்கு இரண்டு சாப்படுப் பொட்டலங்கள் கிடைத்தன.

தனது தோழர்கள் வேவு பார்த்துவிட்டு களைத்துப்போய் வருவார்களே அவர்களுடன் சேர்ந்து சாப்பிடுவோம் என எண்ணியவன் அந்த உணவுப்பொட்டலங்களை துணி ஒன்றினால் சுற்றி கவனமாக வைத்துவிட்டு படுத்துவிடுகின்றான்... அவன் முதல்நாள் சாப்பிட்ட சாப்பாடுதான்... அன்று மதியம் கழிந்து கொண்டிருந்தது. இந்தளவு நேர இடையிர்க்குள் ஒன்றோ இரண்டு இளநீர் குடித்துவிட்டான். படுத்திருந்த சுபேசனிற்கு வேவு பார்க்கச் சென்ற தோழர்கள் வருகின்றார்கள் என்ற செய்தி காதில் எட்ட, நித்திரை விட்டு எழுகின்றான். எழுந்திருந்தவன் உடனே தான் எடுத்துவைத்திருந்த சாப்பாட்டுப் பொட்டலங்களைப் பார்க்கின்றான். பொட்டலங்களைக் காணவில்லை... யாரோ அந்தச் சாப்பாட்டுப் பொட்டலங்களை எடுத்து சாப்பிட்டுவிட்டார்கள் பொங்கி வந்த அழுகையினை சுபேசனால் அடக்கிக்கொள்ள முடியவில்லை. உணவிருக்கும் என்ற நம்பிக் கையோடு வருவார்களே தன் தோழர்கள் அவர்களுக்கு எனன்வேன்று சாப்பாடு இல்லை எனச்சொல்வது... அவன் துடித்துப் போனான்.



முதல் நாள் மதியம் சாப்பிட்ட சாப்பாட்டுடன் சென்று களைத்துப் போய் வருகிறார்களே எப்படி பசியைத் தாங்கிக்கொள்ளப் போகிறார்கள். அவர்களிற்கு ஒருவேளை உணவு கூட கொடுக்கமுடியவில்லையே என கலங்கினான். அவனது மனவேதனை கண்களால் வெளியேறிக்கொண்டிருந்தது. பெற்ற பிள்ளைகள் பசியில் துடிப்பதைப் பார்த்து ஒரு தாள் அழுவாளே அதே மாதிரி அழுதான் எங்கள் சுபேசன். அவன் தோழர்கள் எவ்வளவு சமாதானப் படுத்தியும் சுபேசனின் அழுகை தீருவதாக இல்லை. நின்ற வேறு தோழர்கள் அங்கு தேடி, இளநீர்களைப் பிடுங்கிக் கொண்டு வந்து எல்லோருக்கும் கொடுத்து சுபேசனிற்கு கொடுத்தபோதும் அவன் குடிப்பதாக இல்லை.

“என்ர பெடியள் சரியான பசியாய் இருப்பாங்கள் அவர்களுக்குக் கொடுங்கோ எனக்கு வேண்டாம்” அவன் மறுத்தே விட்டான். இப்படித்தான் என்றும் தன்னைவிட பிறரை நேசிக்கும் மனம் அவனிற்கு...

நான் கடைசியாகச் சிரித்து அவனோடு பேசிய அந்த இறுதியான அந்த நேரமே இவனது உணர்வுகள் எவ்வளவு புனிதமாக இருந்தது.

ஆனையிறவு படைத்தளத்திற்குள் ஊடுருவி முதலாவது தடை தாண்டியாகிவிட்டது. தாக்குதல் ஆரம்பிக்க இன்னும் ஒரு சில மணித்தியாலங்கள் இருந்தது. இறுதியாக நாங்கள் பழரின்களையும், உளர் உணவுகளையும் சிரித்து கலகலப்பாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். சுபேசன் மட்டும் ஒவ்வொரு போராளியின் மனத்தையும் பாசமாய்ப் பார்த்தான். அவனது முகத்தில் லேசாக சோகம் படர்ந்திருந்தது. இன்னும் ஒரு சில மணித்தியாலத்திற்குள் வெடிக்கப் போகும் அந்த சுபேசன் என்ன சொன்னான் தெரியுமா...?

“பார் மச்சான் எவ்வளவு சிரிப்பு கலகலப்பாக இருக்கிறார்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில்... ...” அவனால் அதற்குமேல் எதுவும் பேசமுடியவில்லை. தீயிர்க்குள் இருந்து நீர் வடியும் உணர்வு அவனுக்கு. அவன் தனியாக இலக்கை அழிக்க சென்றிருந்தால் கவலைப்படட்டிருக்கமாட்டான். தன்னுடன் சேர்ந்து கூடிக் கும்மாளம் போட்டுப்பழகிய இந்த வீரர்கள் இன்னும் சில மணி நேரத்தில் காவியங்களாகப் போகின்றார்களே...! என்ற ஏக்கம் தான் அவனுக்கு. தன்னை அழிக்கத் துணிந்த அந்த வீரன் இறுதி நேரத்தில் இப்படி ஏங்கினான் என்றால், அவன் மற்றவர்களின் வாழ்வை, மற்றவர்களை எப்படி உன்னதமாக நேசிக்கின்றான். இப்படி எல்லோரிலும் பாசம் வைக்கும் சுபேசன் இயக்கத்திற்கு வந்ததும், அண்ணனைப் பிரிந்து வாழ முடியாது என்று அண்ணனுடன் கூட இருப்பதற்காக இயக்கத்திற்கு வந்தாலே அவன் தங்கை. அவள் மீது எவ்வளவு பாசம் வைத்திருப்பான்.

தன் தங்கை மீதும், எம் தேசம் மீதும் ஒவ்வொரு மக்கள் மீதும், எங்கள் தலைவன் மீதும் எவ்வளவு பாசம் வைத்திருந்தானோ அதுதான் அவனை ஒரு உன்னத கரும்புலி வீரனாக்கியது.

சண்டைகளின் சீறல் இன்னும் அடங்கியதாய் இல்லை. தொடர்ந்து வெடிமுழக்கம்.

“புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்” சுபேசன் அழுத்தமாக உரைத்தது வானில் எதிரொலித்தது. எப்போதுமே மற்றவர்களிற்க்காக சுவாசித்துப் பழகிப்போன அவனது மூச்சு நிட்சயம் எம் தேசத்தை வாழவைக்கும்.

**கரும்புலியாய் இணைந்து கொள்ள முன் பங்குபற்றிய தாக்குதல்கள்...**

* ஆகாய கடல்வெளிப் பெருஞ்சமர்.

* மின்னல் இராணுவ நடவடிக்கைக்கு எதிரான சண்டை, கொக்குத்தொடுவாயில் மேற்கொள்ளப்பட்ட பதுங்கித் தாக்குதல்.

* சின்னமண்டலாய்ப் பகுதியில் மேற்கொண்ட காவலரண் அழிப்புச்சண்டை.

* கட்டுப்பத்தை இராணுவ முகாம் தாக்குதல்

விடுதலைபுலிகள் இதழிலிருந்து

www.sangathamil.ca




# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் யாழில் போராட்டம்!

யூலை 01, 2024

வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் ஏற்பாட்டில் யாழில் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

யாழ் மாவட்ட செயலகம் முன்பாக இன்றைய தினம் திங்கட் கிழமை காலை 10 மணியளவில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், பெற்றோர் என பலரும் கொண்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.
















# திருகோணமலையில் பட்டதாரிகள் போராட்டம்!

யூலை 02, 2024

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச துறையில் நியமனம் வழங்க கோரி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை இன்று திருகோணமலையில் ஏற்பாடு செய்திருந்தனர்.

இதனை திருகோணமலை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தது. திருகோணமலை உட்துறை முக வீதியில் உள்ள கிழக்கு மாகாண சபை வீதியில் இருந்து கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் வரை நடை பவணியாக பதாகைகளை ஏந்தியவாறு கடும் வெயிலில் பலர் குழந்தைகளுடன் நடந்து சென்றனர்.

பேச்சு வார்த்தை போதும் இனி நியமனத்தை வழங்கு உள்ளிட்ட பல வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் ஏந்திய வாறும் கோசங்களை எழுப்பியும் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். அனைத்து பட்டதாரிகளுக்கும் பாரபட்சம் இன்றி தொழிலை வழங்கு என்ற பிரதான வாசகம் ஊடான கோசங்களை இதன் போது எழுப்பினர்.

இதன் போது கிழக்கு ஆளுனர் செயலக முன்றலில் பொலிசார் குவிக்கப்பட்டிருந்தனர் அத்துடன் ஆளுநர் செயலகத்தில் மஹஜரும் கையளித்தனர். இதில் நூற்றுக்கணக்கான வேலையற்ற பட்டதாரிகள் கலந்து கொண்டனர்.







# எங்கள் தேசத்தின் ஒரு பகுதியை இந்தியாவுக்குத் தாரை வார்த்துக் கொடுப்பதற்கு ஒருபோதும் இணங்க முடியாது!

## நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்

யூலை 02, 2024

கச்சதீவை மீள இந்தியா பெற்றுக் கொள்தல் என்ற அடிப்படையில் அல்லாமல் எல்லைகளைப் புதிதாக அமைத்துக் கொள்தல் என்ற அடிப்படையில் இந்தியா - இலங்கை இடையில் இரகசியமான முறையில் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டு உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளதாக அறியக் கூடியதாகவுள்ளது. அவ்வாறானதொரு முயற்சி இடம்பெற்றிருந்தால் அது இந்த நாட்டுக்கு ரணில் அரசு செய்கின்ற மிகப் பெரும் துரோகமாக அமையும். தமிழ்த்தேசமும் இலங்கையின் ஒரு பகுதியாகக் காணப்படும் நிலையில் எங்கள் தேசத்தின் ஒரு பகுதியை இந்தியாவுக்குத் தாரை வார்த்துக் கொடுப்பதற்கு ஒருபோதும் இணங்க முடியாது. இவ்வாறான செயற்பாடு நடந்திருந்தால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதற்காக மக்களிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு உடனடியாகப் பதவியிலிருந்து விலக வேண்டும் எனத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (30.06.2024) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய- இலங்கை மீனவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இவ்வாறான உடன்பாடுகள் அணுகுமுறை கிடையாது. கச்சதீவு தமிழ்த்தேசத்தின் கடற்பகுதியாகக் காணப்படும் நிலையில் இந்தப் பகுதிக்குள் இந்திய மீனவர்கள் நுழைவதும் ஒரு அத்துமீறிய செயற்பாடு. வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் வகையில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் செயற்பாடுகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பது எங்களின் நிலைப்பாடு.

தமிழ்த் தேசத்துக்குச் சொந்தமான கடல் எல்லைகளை எங்கள் அனுமதி இல்லாமல் பெற்றுக் கொள்வது தமிழ்மக்களுக்குச் செய்கின்ற மிகப் பெரும் துரோகம் என்பதை இந்திய அரசு உணர்ந்து கொள்ள வேண்டும். 1980 ஆம் ஆண்டில் தமிழ் மக்களுக்குத் தமிழ் ஈழம் பெற்றுத் தருவோம் என்று கூறித் தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்து விட்டு இலங்கையை அடிபணிய வைத்து உங்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டு எங்களை முற்றுமுழுதாக கைவிட்டுள்ள நிலையில் தொடர்ந்தும் தமிழ் மக்களின் நலன்களைப் பலியிட்டுத் தங்கள் நலன்களை அடையும் எண்ணத்தை இந்தியா கைவிட வேண்டும். இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக இதனை ஒரு அணுகுமுறையாக இந்தியா கைக்கொள்ளுமாகவிருந்தால் அது ஒரு அடிமுட்டாள்தனமான செயற்பாடாகத் தான் அமையும்.

இதற்கு மாறாக இலங்கை அரசியல் அமைப்பில் ஒரு முழுமையான மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும். தமிழ்த்தேசமும், சிங்கள தேசமும் சமத்துவம் என்ற அடிப்படையிலான சமஷ்டி



அரசியல் கட்டமைப்பு முறைமை கொண்டு வரப்பட வேண்டும். அந்தச் சமஷ்டி அரசியல் கட்டமைப்பில் வெளிவிவகாரக் கொள்கைகளைத் தீர்மானிக்கின்ற போது தமிழ்த்தேசத்தின் அனுமதி இல்லாமல் தென்பகுதி ஒரு வெளிவிவகாரக் கொள்கையைத் தீர்மானிக்க முடியாதவாறான ஒரு நிலைமையை உருவாக்க வேண்டும். இதனை விடுத்து வெறுமனே எல்லைகளை மாத்திரம் மாற்றியமைப்பதன் மூலம் இந்தியா தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது என்பதை நாம் பொறுப்புணர்வுடன் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம் எனவும் தெரிவித்தார்.

# திருக்கோணேசுவரர் ஆலயம் நெருக்கடிகளை சந்தித்து வருகிறது!

யூலை 03, 2024

திருக்கோணேஸ்வரர் ஆலயம் நெருக்கடிகளை சந்தித்து வருகிறது. மேற்படி ஆலய சூழலில் இரத்தினபுரி, மாத்தறை போன்ற தென்பகுதியிலிருந்து அரசியல் பரப்புரைகளுக்காக அழைத்து வரப்பட்ட சிங்கள மக்கள் 58 வர்த்தக நிலையங்களை அமைத்து பல ஆண்டுகளாக வியாபாரம் செய்து வருகின்றார்கள்.



நல்லாட்சி அரசு பதவியிலிருந்த 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போது ஆலயம் ஊடாக செல்லும் கடைகளை அகற்றி வேறொரு இடத்தில் அமைக்க தீர்மானிக்கப்பட்ட போதும் அவர்களை அகற்ற முடியவில்லை.

கோத்தபாயா ராஜபக்சே காலத்தில் நிரந்த கடைகளை வீடு களுடன் இணைத்து அமைத்து அங்கு அவர்களை நிரந்தர மாக குடியேற்றும் செயற்பாடுகள் நடந்தன. ஆனால் பொருளா தார நெருக்கடிகள் காரணமாக அந்த முயற்சிகள் முழுமை பெறவில்லை.

ரணில் விக்ரமசிங்கே அதிகாரத்திற்கு பின்னர் 2022 ஆம் ஆண்டிலும் மேற்படி கடை உரிமையாளர்களுடன் கலந்துரை யாடி கடைகளை இடமாற்ற எடுக்கப்பட்ட முயற்சிகளும் தோல்வியடைந்தன.

தற்போது ஆலய சூழலில் சக்திமிக்க வர்த்தகர்களாக உரு வாகியுள்ளார்கள்.


அவர்கள் தங்கள் வணிக முயற்சிகளுக்கு மேலாக சட்டவிரோத செயல்களிலும் கூட ஈடுபடுகின்றார்கள்.

சில நாட்களுக்கு முன் ஆலய சூழலிலுள்ள மேற்படி கடையொன்றில் கசிப்பு விற்பனை செய்த ஒருவர் கைது செய்யப்பட்டதையடுத்து குறித்த கடையை சீல் வைக்கச் சென்ற நகர சபை ஊழியர் மீது தாக்குதல் நடாத்தி இருக்கின்றார்கள்.

ஆலய சூழலில் நிலவும் மேற்படி நெருக்கடிக்கு மத்தியில் தொல்லியல் திணைக்களம் ஆலயம் மீது அளிக்கும் இடையூறுகளும் நெருக்கடிகளும் கட்டுப்பாடின்றி தொடர்ந்து வருகின்றன.

16.01.1981ல் வெளியான 124ம் இலக்க தொல்பொருள் சட்டத்தின் கீழ் கோயில் அடங்கிய 372 ஏக்கர் நிலப்பகுதி தொல்பொருள் ஆய்வுப் பகுதியாக பிரகடணம் செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஆலயத்தில் எந்தவித கட்டுமானப் பணிகளையும் முன்னெடுக்கவிடாமல் தொடர்ச்சியாக தொல்லியல் திணைக்களம் நெருக்கடிகளை கொடுக்கின்றது.



ஆனால் தொல்லியல் திணைக்களம் 1971ஆம் ஆண்டு வரை படத்தின் பிரகாரம் 18 ஏக்கர் நிலம் ஆலயத்துக்கு சொந்தமானது ஏற்று கொண்டுள்ளது.

ஆனாலும் நடைமுறையில் ஒரு பக்கேற் சிமெந்து கொண்டு செல்வதானால் கூட அனுமதி பெற வேண்டும்.

எந்தப் பொருளுக்கும் விளக்கம் அளிக்க வேண்டும். அதற்கு அவர்களிற்கு திருப்தி இருந்தால் மட்டுமே அனுமதி கிடைக்கும்.

இது போதாதென்று திருக்கோணேஸ்வரம் ஆலயம் கோகர்ண விகாரை மீது கட்டப்பட்டு இருப்பதாக தொல்லியல் திணைக்கள ஆலோசகர் தொல்லியல் சக்கரவர்த்தி எல்லாவெல மேதானந்த தேரர் தனது ஆய்வுகள் (?) ஊடக சொல்லி வருகின்றார்.

பாடல் பெற்ற பழம்பெரும் சைவ மக்களின் பொக்கிசம் தொல்லியல் திணைக்களத்தின் ஆக்கிரமிப்புகளால் கேட்பாறற்று சிதைந்து வருகின்றது.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வாய்வுப் பணி ஆரம்பம்!

யூலை 05, 2024

முல்லைத்தீவு கொக்குதொடுவாய் மனிதபுதைகுழி அகழ்வு பணியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணியானது வியாழக கிழமை (04) மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



வியாழக்கிழமை (04) பிற்பகல் இரண்டு மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த அகழ்வு பணியில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன், தொல்பொருள் சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ, முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, தொல்லியல் திணைக்களத்தினர், காணாமல் போனோருக்கான அலுவலகத்தின் தலைவர் மகேஸ் கட்டுளந்த மற்றும் பணிப்பாளர் ஜெ.தற்பரன், வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர்,

மனித உரிமைகள் சட்டத்தரணிகளான எஸ்.ரட்ணவேல், ரணித்தா ஞானராசா, வி.கே.நிறஞ்சன், மற்றும் பொலிசார், விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்டவர்களும் பங்கேற்றிருந்தனர்.

இன்றைய அகழ்வு நடவடிக்கையின் ஆரம்ப கட்டமாக நாளை காலை 8.30 மணியளவில் இடம்பெற இருக்கின்ற அகழ்வு பணிகளுக்கு முன்னாயத்தமான நடவடிக்கைகளே இன்று இடம்பெற்றிருந்தது.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, நிதி ஒதுக்கீடு காலம் தாழ்த்தப் பட்டதன் காரணமாக தாமதம் ஏற்பட்டிருந்தது. இன்றிலிருந்து 10 நாட்கள் நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுவரை அகழ்ந்தெடுக்கப்பட்ட பகுதி தவிர்ந்த ஏனைய மனித எலும்புக்கூடு இருக்கும் பகுதி என அடையாளம் காணப்பட்ட இடங்கள் துப்பரவு செய்யப்பட்டதாகத் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் கடந்த 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் திகதியன்று, முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பினைப் பொருத்துவதற்காக, கனரக இயந்திரத்தின் மூலம் நிலத்தினை அகழ்ந்தபோது மனிதப் புதைகுழியொன்று இனங்காணப்பட்டிருந்தது.

இதனையடுத்து முல்லைத்தீவு நீதிமன்றம், முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி ஆகியோரின் கண்காணிப்பு மற்றும் பங்குபற்றுதல்களுடன், தொல்லியல் துறைப் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் இவ்வாறு இனங் காணப்பட்ட மனிதப்புதைகுழி இரண்டு கட்டங்களாக அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு இருகட்டங்களாக இடம்பெற்ற அகழ்வாய்வுகளின்படி இதுவரையில் குறித்த மனிதப்புதைகுழியிலிருந்து 40மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளும், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு போராளிகள் பயன்படுத்தும் இலக்கத்தகடுகள், துப்பாக்கிச் சன்னங்கள், உடைகள் உள்ளிட்ட பல தடயப் பொருட்களும் மீட்கப்பட்டிருந்தன.





அத்தோடு இரண்டாங்கட்ட அகழ்வாய்வு பணிகளின்போது குறித்த மனிதப் புதைகுழி வளாகம் விசேட ஸ்கேன் கருவி மூலம் ஆய்வு செய்யப்பட்டிருந்தது. குறித்த ஸ்கேன் கருவி ஆய்வின்மூலம் முல்லைத்தீவு - கொக்கிளாய் பிரதானவீதியின் கீழ்ப்பகுதியிலும் மேலும்பல மனித எச்சங்கள் இருப்பதும் கண்டறியப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த மனிதப்புதைகுழி அகழ்வாய்விற்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் முடிவுற்றதால் அகழ்வாய்வு பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. இவ்வாறான சூழலில் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வாய்வுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீளவும் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் மூன்றாம் கட்டத்திற்கான நிதி கிடைக்கபெற்றுள்ள நிலையில் வியாழக்கிழமை (04) ஆரம்ப கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றிருந்தது.













பொதுவாக கறுப்பு யூலை என நினைவுகூரப்படுவது,இலங்கையில் 1983 ஆம் ஆண்டு நடந்த தமிழர் விரோத படுகொலைகள், யூலை 23 முதல் யூலை 30 வரை நீடித்த கொடூரமான அரச அனுசரணையுடன் நடந்த இனப்படுகொலையாகும். வாக்காளர் பதிவுப் பட்டியலைக் கொண்டு ஆயுதம் ஏந்திய கும்பல்கள் குறைந்தது 3,000 தமிழர்களின் உயிரைப் பறித்தது, அத்துடன் 5,000 தமிழர் கடைகளை அழித்தது, 150,000க்கும் மேற்பட்ட தமிழர்களை இடம் பெயர வைத்தது. 500க்கும் மேற்பட்ட தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். பல குடும்பங்கள் உயிருடன் கொதிக்கும் தார்ப் பீப்பாய்களுக்குள் தூக்கி வீசப்பட்டார்கள், பல நூறு மக்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர். இது தமிழர்களின் முதலாவது பாரிய இடப்பெயர்வாக கருதப்பட்டது (500,000 பேர் தீவை விட்டு வெளியேறினார்கள்). அத்துடன் தமிழர் என்கின்ற இனமொன்று இலங்கையில் உள்ளது என்பதை உலகிற்கு பறைசாற்றியது.

# முல்லைத்தீவு ஊடகவியலாளர் மீது சிறீலங்கா கடல்படையால் தொடரப்பட்ட வழக்கு விசாரணைகள் ஆரம்பம்!

யூலை 05, 2024

முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் மீது கடற்படை புலனாய்வாளரால் தொடரப்பட்ட வழக்கு மேதிக விசாரணைகளுக்காக எதிர்வரும் ஒகஸ்ட் 29ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

குறித்த வழக்கானது, இன்று (04.07.2024) விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, வழக்கு தொடுனரான கடற்படை புலனாய்வாளர் வருகை தந்து நீதிமன்றில் சாட்சியளித்ததுடன் தொடர்ந்து ஊடகவியலாளர் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி வீ. எஸ். எஸ் தனஞ்சயன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் மீது முல்லைத்தீவு கோட்டாபய கடற்படை முகாமின் புலனாய்வு அதிகாரி ஒருவர் திட்டமிட்டு செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைக்காக அழைக்கப்பட்ட அவர் முல்லைத்தீவு பொலிசாரால் கடந்த 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

இதன்பின்னர், அவர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டு கடந்த சில வருடங்களாக வழக்கு இடம்பெற்று வரும் நிலையில், 2023ஆம் ஆண்டு செப்டெம்பர் 21ஆம் திகதி முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் தலைமையில் வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

அன்றும் வழக்கு தொடுனரான குறித்த கடற்படை புலனாய்வாளர் வருகை தரவில்லை. இந்நிலையில் கடற்படை புலனாய்வாளருக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளதாக பொலிசார் நீதிபதிக்கு தெரிவித்தனர்.

இந்நிலையில், கடற்படை புலனாய்வாளர் மற்றும் அவரது சாட்சி ஆகிய இருவருக்கும் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் பின்னர் இரண்டு வழக்குகள் இடப்பெற்றிருந்தன.

இருப்பினும், சில காரணங்களால் வழக்கு விசாரணைக்காக தவணை இடப்பட்டு இருந்த நிலையில் (07.04.2024) இன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 07.04.2019 அன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இருந்து வட்டுவாகல் பாலம் வரை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை நடத்தியிருந்தனர்.

இதன்போது, செல்வபுரம் பேருந்து நிலையத்தில் வைத்து ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களையும், ஊடகவியலாளர்களையும் இனம் தெரியாத நபர் ஒருவர் அச்சுறுத்தியதோடு தனது கைபேசியில் ஒளிப்படம் எடுத்துள்ளார்.

இந்நிலையில், ஆர்ப்பாட்டக்காரர்கள் அவரை அடையாளப் படுத்த முற்பட்டவேளை, ஊடகவியலாளார் சண்முகம் தவசீலன் தலையிட்டு குறித்த நபர் யார் என வினவியுள்ளார்.

இருப்பினும், அவர் அதனை மறுத்து அந்த இடத்தினை விட்டு தப்பி ஓடிய போது ஆர்ப்பாட்டக்காரர்களால் பிடிக்கப்பட்டு மீண்டும் விசாரித்ததில் தான் கடற்படை அதிகாரி என தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து, முல்லைத்தீவு பொலிசாருக்கு சம்பவ இடத்திற்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்ட போதும், அவர்கள் குறித்த இடத்திற்கு வர தாமதமாகியுள்ளது.

இந்நிலையில், கடற்படை அதிகாரியை வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள கோட்டாபய கடற்படை முகாமிற்கு அழைத்து சென்று அவர் கடற்படையினை சேர்ந்தவரா என வினவிய போது, அவர் தங்களுடைய நபர் என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.



அத்துடன், அவர் அந்த இடத்திற்கு வருகை தந்த பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இதனை தொடர்ந்து குறித்த கடற்படை அதிகாரி ஊடகவியலாளர்களை பழிவாங்கும் நோக்கில் மறுநாள் மாலை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் உண்மைக்கு புறம்பான கருத்தினை தெரிவித்து ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் தன் மீது தாக்குதல் நடத்தியதாகவும் அரச கடமைக்கு இடையூறு விளைவித்ததாகவும் கூறி முறைப்பாடு செய்துள்ளார்.

இதற்கமைய, சம்பவம் தொடர்பில், கடந்த 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் திகதி சண்முகம் தவசீலனை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்து பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது, பொலிசார் அவரை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது அவர் பிணையில் விடுவிக்கப்பட்டதோடு வழக்கு விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரி வைத்தியசாலை முன்பாக பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் போராட்டம்!

யுலை 07, 2024

சாவகச்சேரி வைத்தியசாலை முன்பாக பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் இன்றைய நாள் திங்கட்கிழமை காலை போராட்டம் நடைபெறவுள்ள நிலையில், நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை இரவோடு இரவாக பதில் வைத்திய அத்தியட்சகரை அங்கிருந்து அகற்றுவதற்கான முயற்சி எடுக்கப்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் வைத்தியசாலை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பதில் மருத்துவ அத்தியட்சகராகத் கடமையாற்றும் இராமநாதன் அர்ச்சுனாவை அங்கிருந்து இடமாற்றம் செய்ய உத்தரவிடும் சுகாதார அமைச்சகத்தின் கடிதம் நேற்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் சமன் பத்திரண நேற்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை இரவு குறித்த கடிதத்தை பதில் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனாவிடம் வழங்க முற்பட்டபோது அதனை ஏற்க மறுத்துள்ள வைத்திய அத்தியட்சகர், இது அலுவலக நேரம் அல்ல என தெரிவித்துள்ளார்.

இதேவேளை வைத்தியசாலை பதில் அத்தியட்சகரை பொலிஸ் நிலையத்திற்கு நேரில் வந்து வாக்கு மூலம் வழங்குமாறு சாவகச்சேரி பொலிசார் அழைப்பாணை வழங்கி இருந்தனர்.

தான் மட்டுமே வைத்தியசாலையில் கடமையில் நிற்பதால் தன்னால் பொலிஸ் நிலையம் வந்து வாக்குமூலம் அளிக்க முடியாது. அந்த சமயத்தில் வைத்தியசாலையில் எதாவது உயிரிழப்பு ஏற்பட்டால் தானே பொறுப்பு என பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை



வளாகத்தில் பரபரப்பான சூழல் ஏற்பட்டுள்ளது.

அந்நிலையில் வைத்தியசாலை முன்பாக கூடிய மக்கள் இரவிரவாக தமது போராட்டத்தை தொடர்ந்தார்.







"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது."

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

# முன்னாள் போராளியும் சினம்கொள் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்தவர் மர்மமான முறையில் உயிரிழப்பு!

யூலை 06, 2024

மன்னார் மந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன் பகுதியில் முன்னாள் போராளியும் மற்றும் சினம்கொள் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்தர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவமானது, 05.07.2024 நள்ளிரவு அன்று இடம் பெற்றுள்ளது.

"கம்பிகளின் மொழி பிறேம்" என அழைக்கப்படும் 42 வயதான கோபாலகிருஷ்ணன் கோகுல் பிறேம்குமார் என்ற முன்னாள் போராளி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர், நேற்றிரவு அடம்பன் வீதியின் உள்ள தனது வீட்டிற்கு முன் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந துள்ளார்.

இதன்போது, திடீரென தன்னை வாகனத்தால் மோதி விட்டுச் சென்று விட்டனர் என சத்தமிட்டுள்ளார்.

இந்நிலையில், குடும்பத்தினரின் உதவியுடன் உடனடியாக அடம்பன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இருப்பினும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அவரின் சடலம் தற்போது மன்னார் பொது வைத்திய சாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் மரணத்திற்கான காரணம் தெரிய வரும் என் பொலிசார் தெரிவித்துள்ளனர். (?)

அதே வேனை, உயிரிழந்த முன்னாள் போராளி ஒரு கால் மற்றும் ஒரு கையும் இழந்தவர் என்பதுடன் பல்துறை சார் ஆளுமை மிக்கவர் என கூறப்படுகின்றமை இங்கு குறிப்பிடத் தக்கது.



# யாழ். தென்மராட்சியில் கதவடைப்பு: சாவகச்சேரி வைத்தியசாலை முன்பாக மக்கள் போராட்டம்!

யூலை 08, 2024

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் அத்தியட்சகர் பதவியில் இருந்து வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவை இடமாற்றும் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வைத்திய சாலை முன்பாக் ஞாயிற்றுக்கிழமை இரவு ஆரம்பித்த கண்டன ஆர்ப்பாட்டம் இன்றைய தினம் திங்கட்கிழமை அதிகளவிலான மக்களின் பங்கேற்புடன் தற்போது தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவாக சாவகச்சேரி நகர்ப் பகுதிகளில் கடைகள், பொதுச்சந்தை மூடப்பட்டுள்ளது.








சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகரை மாற்றக்கோரி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தொடர்ச்சியாக நான்கு தினங்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்த நிலையில் இன்று திங்கட் கிழமை வைத்தியர்கள் வைத்தியசாலைக்கு வருகை தந்து தமது கடமைகளை ஆரம்பித்துள்ளதுடன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சமன் பத்திரணவின் கட்டுப்பாட்டில் வைத்திய சாலை இயங்க ஆரம்பித்துள்ளதாக தக வல்கள் தெரிவிக் கின்றன.

புதிய பதில் அத்தியட்சகருக்கான கடிதம் கிடைத்தவுடன் விரைவில் நியமனம் வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதியில் பெருமளவு பொலிசாரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்னேற்றத்திற்காக செயற்பட முனையும் புதிய வைத்திய அத்தியட்சகருக்கு ஏதிராக முன்னெடுக்கப்படும் சதிகளை உடைத்தெறியவும் வைத்திய சாலையின் பணிகளை உடன் வழமைக்கு திரும்ப வலியுறுத்தியும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கும் கடையடைப்புக்கும் சாவகச்சேரி பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்களால் அழைப்பு விடுக்கப்பட்டு போராட்டம் முன்னெடுக்கப் பட்டு வருகிறது.









"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவ்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது."

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

# சாவகச்சேரி ஆதர வைத்தியசாலையின் பதில் அத்தியட்சகர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா வைத்தியசாலையில் இருந்து விடைபெற்றார்!

யூலை 08, 2024

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் அத்தியட்சகர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா வைத்தியசாலை விடுதியில் இருந்து வெளியேறிச் சென்றார்.






வைத்தியசாலையில் பதில் மருத்துவ அத்தியட்சகராகத் கடமையாற்றும் இராமநாதன் அர்ச்சுனாவை அங்கிருந்து இடமாற்றம் செய்ய உத்தரவிடும் சுகாதார அமைச்சகத்தின் கடிதம் நேற்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை இரவு வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் சமன் பத்திரண பதில் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனாவிடம் வழங்க முற்பட்டபோது அதனை ஏற்க மறுத்துள்ள வைத்திய அத்தியட்சகர், இது அலுவலக நேரம் அல்ல என தெரிவித்துள்ளார்.

அதேவேளை வைத்தியரை இடமாற்றும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து வைத்தியசாலை முன்பாக நேற்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை இரவு ஆரம்பித்த கண்டன ஆர்ப்பாட்டம் இன்றைய நாள் திங்கட்கிழமை அதிகளவிலான மக்களின் பங்கேற்புடன் நண்பகல் வரையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவாக சாவகச்சேரி நகரப் பகுதிகளில் கடைகள், பொதுச்சந்தை மூடப்பட்டது.

இதேவேளை வைத்தியசாலை பதில் அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா, பொதுமக்கள் வெளியே போக சொல்லாமல் நான் வெளியேற மாட்டேன் என தெரிவித்து வைத்தியசாலையில் தொடர்ந்து இன்றைய நாள் நண்பகல் வரையில் தங்கியிருந்த நிலையில், நீண்ட இழுபறியில் பின்னர் நண்பகலுடன் வைத்தியசாலையில் இருந்து வெளியேறி சென்றுள்ளார்.

வைத்தியர் வெளியேறி சென்றதுடன் மக்கள் போராட்டமும் நிறைவுக்கு வந்தது.

அதேவேளை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகரை மாற்றக்கோரி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தொடர்ச்சியாக நான்கு தினங்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.







# காவல் துறை அதிகாரமின்றி 13 ஆவது திருத்தமா? ஏற்கமாட்டோம்!

## பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்

யூலை 08, 2024

பொலிஸ் அதிகாரமின்றி 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது குறித்துக் கலந்துரையாடிவருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கூறுவதை முற்றாக நிராகரிப்பதாகவும், அது ஒருபோதும் தமிழர் விரும்பும் அரசியல் தீர்வாக அமையாது எனவும் சுட்டிக்காட்டியுள்ள இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், இவ்வாறான கருத்துக்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் மத்தியில் அவருக்குப் பாரிய பின்னடைவையே தேடித்தரும் எனத் தெரிவித்துள்ளார்.

மறைந்த தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் பிரிக்கப்படாத ஒருமித்த நாட்டுக்குள் அரசியல் தீர்வைக் கோரியதாகவும், தற்போது அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை பொலிஸ் அதிகாரமின்றி, மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட வேறு பல அதிகாரங்களுடன் நடைமுறைப்படுத்துவது குறித்து பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி வருவதாகவும் ஞாயிற்றுக்கிழமை (07) இரா. சம்பந்தனின் இறுதிக்கிரியை நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டிருந்தார்.

இருப்பினும் ஜனாதிபதியின் இக்கருத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது எனத் தெரிவித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை பொலிஸ் அதிகாரமின்றி நடைமுறைப்படுத்துவது ஓரளவுக்கேனும் ஏற்றுக்கொள்ளத்தக்க அர்த்தமுள்ள அரசியல் தீர்வாக அமையாது எனச் சுட்டிக்காட்டினார்.

'சம்பந்தன் பிளவுபடாத, ஒருமித்த இலங்கைக்குள் அரசியல் தீர்வினைக் கோரியதாக ஜனாதிபதி கூறுகின்றார். இருப்பினும் அவர் பிளவுபடாத இலங்கைக்குள் தமிழர்களைத் தேசிய இனமாக அங்கீகரிக்கக்கூடிய, சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டி முறையிலான அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வையே கோரினார்.

மாறாக அவர் ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பகிர்வைக் கோரவில்லை. அவ்வாறிருக்கையில் பொலிஸ் அதிகாரங்களின்றி 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்துக் கலந்துரையாடிவருவதாக ஜனாதிபதி கூறுகின்றார். அது ஓரளவுக்கேனும் ஏற்றுக்கொள்ளத்தக்க அரசியல் தீர்வாக ஒருபோதும் அமையாது.

எனவே உரையில் ஜனாதிபதி வெளியிட்ட கருத்தை நாங்கள் முற்றாக நிராகரிக்கின்றோம்' எனவும் சிறீதரன் தெரிவித்தார்.

அதுமாத்திரமன்றி ஏற்கனவே மாகாணங்களுக்கான கல்வி மற்றும் சுகாதாரத்துறை சார்ந்த அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகவும், எனவே மேலும் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்படுவதை கிஞ்சித்தும் ஏற்கமுடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.



மேலும் தமிழ்மக்களை தேசிய இனமாக அங்கீகரித்து, சுய நிர்ண உரிமையை உறுதிசெய்யக்கூடிய விதத்தில், சமஷ்டி அடிப்படையிலான அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை வழங்குவது குறித்து இதயசுத்தியுடன் பேசுவதற்கு ஜனாதிபதி எம்மை அழைத்தால், அப்பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதற்கு தமிழரசுக்கட்சி தயாராக இருக்கின்றது எனவும் சிறீதரன் கூறினார்.

அத்தோடு ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் ஜனாதிபதி ஆற்றிய உரை தமிழ்மக்களின் எண்ணங்களில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கக்கூடும் எனவும், அது எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்குப் பின்னடைவை ஏற்படுத்தக்கூடும் எனவும் அவர் தெரிவித்தார்.

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# ஆனைக்கோட்டை அகழ்வாய்வு மையத்தை யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் சி. சிறிசற்குணராஜா பார்வையிட்டார்!

யூலை 09, 2024

புதியதோர் திருப்பு முனையினை இலங்கை தமிழர் வரலாற்றில் ஏற்படுத்தவுள்ள ஆனைக்கோட்டையில் 40 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் தொல்பொருள் அகழ்வாராய்ச்சி நடைபெற்று வருகிறது.

1980ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறையின் முன்னாள் பேராசிரியர்களான பொ.இரகுபதி மற்றும் கா.இந்திரபாலா, சி.க.சிற்றம்பலம் ஆகியோர் முன்னெடுத்த தொல்பொருள் அகழ்வாய்வு மற்றும் மேலாய்வுகளில் வட இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது மிகப் பெரிய பெருங்கற்கால பண்பாடு மையம் என உறுதிப்படுத்தும் வகையில் அடையாளப்படுத்தப்பட்ட தொல்பொருட் சான்றுகள் ஏராளமாக கிடைக்கப்பெற்ற ஆனைக்கோட்டை அகழ்வாய்வு மீண்டும் 40 ஆண்டுகளுக்கு பின்னர் 20.06.2024 அன்று ஆரம்பமாகியது.

புலம்பெயர் நிதிப்பங்களிப்புடனும், யாழ்பாண மரபுரிமை மையத்தின் அனுசரணையுடன் அதன் தலைவர் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இன்றைய தினம் அகழ்வாய்வு மையத்தை பார்வையிட வருகை தந்த யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா அவர்கள் ஆனைக்கோட்டை அகழ்வாய்வில் தற்போது வரை அகழ்ந்தெடுக்கப்பட்ட தொல்பொருட்களின் வரலாற்று முக்கியத்துவம் அதன் தொன்மை என்பன பற்றி பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் அவர்களுடன் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக தொல்லியல்துறையின் விரிவுரையாளர் அஜித்தா சுகந்தன் Ajiththa Suganthan (Florida State University ) அவர்கள் இவ் அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருட்களின் ஆவணப்படுத்தல் பணி பற்றியும் இது வரை கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களில் முக்கியத்துவம் வாய்ந்தவைகளை காண்பித்து துணைவேந்தருடன் கலந்துரையாடினார்.

மேலும் ஆனைக்கோட்டை அகழ்வாய்வுப் பொறுப்பதிகாரி சம்பத் கருசிங்க அவர்கள் அகழ்வாய்வில் பின்பற்றப்படும் நெறிமுறை மற்றும் இடத்தேர்வு, கலாச்சார மண்படை அடுக்குகள், அகழ்ந்தெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் என்பன பற்றியும் அவை எவ்வெவ் அடுக்குகளில் கிடைக்கப்பெற்றன என்பது பற்றியும் தென்னிலங்கை வடஇலங்கை தொல்லியல் ஆய்வுளின் முக்கியத்துவம் பற்றியும் கலந்துரையாடினார் அத்தோடு மட்



பாண்ட வனைதலுக்கு வருகை தந்துள்ள நதீர திஸாநாயக்க, மற்றும் லக்ஸ்மன் விக்கிரமசிங்க ஏனைய திணைக்கள அதிகாரிகளுடனும் கலந்துரையாடினார்.

இவ்வாய்வில் பங்கு பற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக தொல்லியல்துறையின் நான்காம், மூன்றாம், இரண்டாம் வருட மாணவர்களுடன் கலந்துரையாடிச் சென்றார்.







# ஐ.நாவின் மனித உரிமைகள் அலுவலர் லூடியானா செல்றீன் அகிலன் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி பகுதிக்கு விஜயம்!

யூலை 09, 2024

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அலுவலர் லூடியானா செல்றீன் அகிலன் முல்லைத்தீவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

அந்தவகையில் கொக்குத்தொடுவாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி அகழ்வு இடத்திற்கு இன்று (09.07. 2024) பிற்பகல் அவர் நேரடியாக சென்று பார்வையிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அலுவலர் லூடியானா செல்றீன் அகிலன் இதன்போது முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் சட்டத்தரணி வி.கே. நிரஞ்சன் ஆகியோரிடம் குறித்த புதைகுழி விவகாரங்கள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இதற்கு முன்னர் கடந்த 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதியன்று, முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பினைப் பொருத்துவதற்காக, கனரக இயந்திரத்தின் மூலம் நிலத்தினை அகழ்ந்தபோது மனிதப் புதைகுழியொன்று இனங்காணப்பட்டிருந்தது.

இதனையடுத்து முல்லைத்தீவு நீதிமன்றம், முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி ஆகியோரின் கண்காணிப்பு மற்றும் பங்குபற்றுதல்களுடன், தொல்லியல் துறைப் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் இவ்வாறு இனங்காணப்பட்ட மனிதப்புதைகுழி இரண்டு கட்டங்களாக அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு இருகட்டங்களாக இடம்பெற்ற அகழ்வாய்வுகளின்படி




இதுவரையில் குறித்த மனிதப்புதைகுழியிலிருந்து 40 மனித எலும்புக்கூட்டு தொகுதிகளும், தமீழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு போராளிகள் பயன்படுத்தும் இலக்கத்தகடுகள், துப்பாக்கிச் சன்னங்கள், உடைகள் உள்ளிட்ட பல தடயப் பொருட்களும் மீட்கப்பட்டிருந்தன.

அத்தோடு இரண்டாங்கட்ட அகழ்வாய்வு பணிகளின்போது குறித்த மனிதப் புதைகுழி வளாகம் விசேட ஸ்கேன் கருவி மூலம் ஆய்வு செய்யப்பட்டிருந்தது. குறித்த ஸ்கேன் கருவி ஆய்வின்மூலம் முல்லைத்தீவு - கொக்கிளாய் பிரதானவீதியின் கீழ்ப்பகுதியிலும் மேலும்பல மனித எச்சங்கள் இருப்பதும் கண்டறியப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த மனிதப்புதைகுழி அகழ்வாய்விற்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் முடிவுற்றதால் அகழ்வாய்வு பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. இவ்வாறான சூழலில் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வாய்வுகளுக்கான நிதிஒதுக்கீடுகள் மீளவும் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் கடந்த 04.07.2024 அன்று ஆரம்ப கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.







# மட்டு. மயிலத்தமடு, மாதவனை கால்நடை பண்ணையாளர்களின் 300 ஆவது நாள் கவன ஈர்ப்பு போராட்டம்!

யூலை 09, 2024

மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு, மாதவனை பகுதி கால்நடை பண்ணையாளர்கள் இன்று (9) செவ்வாய்க்கிழமை அமைதியான முறையில் கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.





மட்டக்களப்பு சித்தாண்டியில் மயிலத்தமடு, மாதவனை பகுதியில் பெரும்பான்மையினத்தவர்களினால் முன்னெடுக்கப்படும் மேய்ச்சல் தரை அபகரிப்பினை தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தித் தொடர்ந்து போராடிவரும் கால்நடை பண்ணையாளர்கள் தாங்கள் போராட்டம் ஆரம்பித்து 300வது நாளான இன்று இந்த கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



இன்றைய மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை பண்ணையாளர் சங்கத் தலைவர் நிமலன் தலைமையில் நடைபெற்ற இந்த போராட்டத்தில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சி இயக்கத்தின் இணைப்பாளர்களான வேலன் சுவாமிகள், அருட்தந்தை ஜெகதாஸ், எஸ். சிவயோகநாதன் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர் அருட்தந்தை லூத் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தமது மேய்ச்சல் தரை காணிகள் அபகரிக்கப்பட்டு தமது வாழ்வாதாரம் முற்றாகப் பறிக்கப்பட்டுள்ள நிலையில் அங்குள்ள அத்துமீறிய குடியேற்றக்காரர்களை வெளியேற்றுமாறு வலியுறுத்தும் வகையில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பகுதியில் உள்ள அத்துமீறிய குடியேற்றக்காரர்களை வெளியேற்றுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மாவட்ட அரசாங்க அதிபருக்குப் பணிப்புரைகளை வழங்கியபோதிலும் இதுவரையில் அவர்கள் வெளியேற்றப்படவில்லையெனவும் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மயிலத்தமடு, மாதவனை பகுதியில் பொலிஸ் காவலரண் அமைக்கப்பட்டுள்ளபோதிலும் அங்குள்ள அத்துமீறிய குடியேற்றக்காரர்களை அங்கிருந்து அகற்றுமாறு நீதிமன்றம் வழங்கிய உத்தரவுகளைக் கூட அமுல்படுத்தமுடியாத வகையில் பொலிசார் உள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியில் ஒரு கம்பு வெட்டினாலும் கைதுசெய்து வழக்கு தாக்கல் செய்யும் அதிகாரிகள் அங்கு அத்துமீறிய செயற்பாடுகளை முன்னெடுப்போர் தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லையெனவும் கவலை தெரிவிக்கின்றனர்.

மேய்ச்சல் தரை காணிப்பிரச்சினையை தீர்க்கும் வகையில் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக காணிகளை வழங்கவும் மயிலத்தமடு, மாதவனை பகுதியில் குளங்களைப் புனரமைக்கவும் வீதிகளை புனரமைக்கவும் நடவடிக்கையெடுப்பதாக தெரிவிக்கப்பட்டபோதிலும் இதுவரையில் எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லையென இங்கு பண்ணையாளர்களினால் தெரிவிக்கப்பட்டது.

நாங்கள் தனி நாட்டுக் கோரிக்கைக்காகப் போராடவில்லை எமது கால்நடைகள் மூலம் நாங்கள் வாழவேண்டும் என்பதற்காகவே 300வது நாளாகப் போராடுகின்றோம்.எமது போராட்டத்திற்கான நியாயத்தினை ஜனாதிபதி மற்றும் மகாவலி அமைச்சர்கள் ஏற்றுக்கொண்டு எமக்கான தீர்வினை வழங்குவதாக உறுதியளித்தபோதிலும் இதுவரையில் எங்களுக்கு எந்த தீர்வும் வழங்கப்படவில்லையெனக் கால்நடை பண்ணையாளர் அமைப்பின் தலைவர் நிமலன் தெரிவித்தார்.

# யாழ். நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான சிறீலங்கா விமானப்படையின் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் 29ஆம் ஆண்டு நினைவேந்தல்!

யுலை 09, 2024

யாழ்ப்பாணம் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான சிறீலங்கா விமானப் படையின் தாக்குதலின் 29 ஆம் ஆண்டு நினைவு நாள், இன்றைய நாள் மாலை சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் நினைவு கூறப்பட்டது.









சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் இன்று மாலை பங்குத்தந்தை தலைமையில் வழிபாடுகள் நடைபெற்றது. அதனை தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் மலர் தூபி சுடரேற்றி மலர் வணக்கம் செலுத்தினார்கள்.

கடந்த 1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09 திகதியன்று நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி திரு கதிர்காம முருகன் ஆலயத்திலும் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் மீது சிறீலங்கா விமானப்படையினரின் மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசியதில் 147 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

அன்று அதிகாலை வலிகாமம் பிரதேசங்களை நோக்கி எறிகணை தாக்குதல், விமான தாக்குதல்களின் உதவியுடன் சிறீலங்கா இராணுவத்தினர் முன்னேறிப்பாய்தல் (Leap Forward) எனும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர்.

தொடர் எறிகணை தாக்குதல்களால் தமது வாழ்விடங்களை விட்டு நவாலியை நோக்கி இடம்பெயர்ந்த மக்கள் நவாலி சென்ற் பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி திரு கதிர்காம முருகன் ஆலயத்திலும் தஞ்சமடைந்தனர்.

அன்றைய காலை திடீரென வந்த மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை மக்கள் தஞ்சமடைந்திருந்த தேவாலயம் மற்றும் ஆலயம் மீது வீசின.

இக் குண்டு வீச்சு சம்பவத்தில் குழந்தைகள் பெண்கள் உட்பட 147 பேர் அந்த இடத்திலேயே உடல் சிதறி பலியாகியிருந்தனர். 350க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர்.

# திருகோணமலை மூதூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தங்கநகர் பகுதயில் பெண்கள் போராட்டம்!

யூலை 10, 2024

திருகோணமலை மூதூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தங்கநகர் பகுதியில் இன்று புதன்கிழமை (10) பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்க கோரி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

இதனை கிளிவெட்டி தங்க நகர் பகுதி சமூக மட்ட அமைப்புக்கள் பொது மக்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

அண்மையில் நடேஸ் குமார் வினோதி எனும் யுவதி கொலை செய்யப்பட்டு கிணற்றினுள் சடலமாக மீட்கப்பட்டார். இதனை கண்டித்து அப் பகுதியினர் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

குறித்த கொலையினை மேற்கொண்டவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும் பிணை வழங்கக் கூடாது போன்ற விடயங்களை முன்வைத்து கவனயீர்ப்பில் ஈடு பட்டனர்.





# மன்னாரில் மீண்டும் சிறீலங்கா இராணுவ சோதனைச் சாவடி!

யூலை 10, 2024

மன்னாருக்குச் செல்லும் பிரதான பாலத்தடியில் சில வருடங்களாக காணப்பட்ட சிறீலங்கா சிங்கள இராணுவ சோதனைச் சாவடி கடந்த சில வாரங்களுக்கு முன் அகற்றப்பட்ட நிலையில் தற்போது மீண்டும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - அத்துருகிரிய பிரதேசத்தில், கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள், மன்னாருக்கு சென்று கடல் மார்க்கமாக இந்தியாவிற்குத் தப்பிச் செல்ல திட்டமிட்டுள்ளதாகப் புலனாய்வுத் துறை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற ரகசியத் தகவலையடுத்தே குறித்த சோதனைச் சாவடி மீண்டும் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது



# கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி ஏழாம் நாளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் (த.வி.பு) ஒ-3035 தகட்டிலக்கம் மீட்பு!

யூலை 11, 2024

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வாராய்ச்சியின் 7ஆவது நாளான இன்று மூன்று மனித எச்சங்கள் முழுமையாக வெளியே அகழ்ந்து எடுக்கபட்டுள்ளதுடன் தகடு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

இரண்டு கட்டங்களிலும் அகழ்ந்தெடுக்கப்பட்ட 40 மனித எச்சங்களுக்கு மேலதிகமாக மூன்றாம் கட்ட அகழ்வு பணியின் போது ஏழு மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அதிலிருந்து மூன்று உடலங்கள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் மூன்றாங்கட்ட அகழ்வாய்வின், ஏழாம் நாள் அகழ்வாய்வு செயற்பாடுகள் இன்று (11.07.2024) தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ உள்ளிட்ட குழுவினர், முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, தடயவியல் பொலிசார் உள்ளிட்ட தரப்பினரின் பங்குபற்றுதல்களுடன் இந்த ஏழாம் நாள் அகழ்வாய்வுகள் இடம்பெற்றிருந்தன.

மூன்றாம் நாளாகவும் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான அலுவலகத்தின் மனித உரிமைகள் அலுவலர் செல்ரின் அகிலன் அவர்கள் அகழ்வு பணிகளை கண்காணித்தார்.

குறித்த அகழ்வு பணியின் போது ஏழு மனித உடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் மூன்று மனித எச்சங்கள் முழுமையாக வெளியே எடுக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை மொத்தமாக 43 எலும்புக்கூட்டு தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ ஏழாம் நாள் அகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு அடையாளப் படுத்தப்பட்டுள்ள ஏழு மனித எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இன்று மூன்று எலும்புக்கூட்டு தொகுதிகள் முழுமையாக வெளியே அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது. அவ் எலும்புக் கூட்டுத்தொகுதிகளில் இருந்து பற்கள் பிரித்து எடுக்கப்பட்டு DNA பரிசோதனைக்காக சேமித்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் அவ் எலும்புக் கூட்டுத்தொகுதிகளில் இருந்து த.வி.பு ஒ-3035 இலக்கத்தகடு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் துப்பாக்கி சன்னங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.















# தமிழ் அரசியல் கைதிகளுடன் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் செல்வராசா சந்திப்பு!

யூலை 12, 2024

வெலிக்கடை மற்றும் மகசீன் சிறைகளுக்கு வியாழக்கிழமை (11) விஜயம் செய்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளை நேரில் பர்வையிட்டு கலந்துரையாடியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

வெலிக்கடை மற்றும் மகசீன் சிறைச்சாலையில் உள்ள 9 தமிழ் அரசியல் கைதிகளை நேரில் சந்தித்தேன். வெலிக்கடையில் தங்கவேலு நிமலன் (47)ஜோ.கொ.வலன்ரினோ (41)மகசீன் சிறையில் ஆனந்தவர்ணன் (அரவிந்தன்) கடந்த மார்ச் 26இல் கைது) மகசீன் சிறையில் 15 - 29 வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆனந்தசுதாகரன் ஆகியோரைப் பார்வையிட்டேன்.

அவர்களுடைய விடுதலை சம்பந்தமாக எந்தவொரு நடவடிக்கைகளும் அக்கறையுடன் முன்னெடுக்கப்படவில்லை என்ற கவலை அவர்களுக்கு அதிகமாக உள்ளது. எம்மைப்பொறுத்தவரையில் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும். அதன்கீழ் கைது செய்யப்பட்டுள்ள அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும்.

ஆனந்த வர்ணன் வழக்கினை முன்னெடுக்க முடியாத நிலைமையில் உள்ளார். அவர் வேண்டுமென்றே தடுத்து



வைக்கப்பட்டுள்ளார். அவர் உள்ளிட்டவர்களின் விடுதலைக்காக அனைவரும் குரல்கொடுக்க வேண்டும் என்றார்.

# யாழ். குடாநாட்டில் 3571 ஏக்கர் முப்படைகள் வசம்!

## யாழ்.மாவட்டச் செயலாளர் ம. பிரதீபன்

யூலை 12, 2024

யுத்த முடிந்து விட்டதாக இலங்கை அரசு அறிவித்து 14 வருடங்கள் கடந்துள்ள நிலையில் யாழ்.குடாநாட்டில் தொடர்ந்தும் 3,571 ஏக்கர் நிலம் முப்படையினரிடம் உள்ள தென இலங்கை பிரதமர் திணேஸ் குணவர்த்தனவின் கவனத்திற்கு மாவட்டச் செயலாளர் ம.பிரதீபன் சுட்டிக்காட்டியுள்ளார்.




யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த பிரதமர் திணேஸ் குணவர்த்தன தலைமையில் இன்று இடம்பெற்ற யாழ்ப்பாண மாவட்டத்திற்கான விசேட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் 2 ஆயிரத்து 624 ஏக்கர் தனியார் காணிகளும், 951 ஏக்கர் அரச காணிகளும் இன்னும் படையினர் வசம் உள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

தனியார் காணிகளில் இராணுவத்தினரிடம் ஆயிரத்து 775 ஏக்கர் நிலமும், விமானப்படையினரிடம் 660 ஏக்கர் நிலமும், கடற்படையினரிடம் 160.67 ஏக்கர் நிலமும் உள்ளதோடு காவல் துறையிடம் 28 ஏக்கருமாக குடாநாட்டில் 2 ஆயிரத்து 624 ஏக்கர் தனியார் காணிகள் படையினரிடம் உள்ளது.

அதேபோன்று அரச காணிகளில் இராணுவத்தினரிடம் 416.66 ஏக்கர் நிலமும், விமானப்படையினரிடம் 349.82 ஏக்கர் நிலமும், கடற்படையினரிடம் 179.70 ஏக்கர் நிலமும் உள்ளதோடு காவல்துறையிடம் 10.34 ஏக்கருமாக குடாநாட்டில்



951.52 ஏக்கர் அரச காணிகள் படையினர் வசம் உள்ளது.

# கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வு பகுதியில் அமெரிக்க தூதரக அதிகாரி!

யூலை 12, 2024

கொக்குத்தொடுவாய் மனிதபுதைகுழி அகழ்வுபணிகளை இலங்கைக்கான அமெரிக்க தூதரக அதிகாரிகள் பார்வையிட்டுள்ளனர்.



இது குறித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள அமெரிக்க தூதரகம் பலவந்தமாக காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களிற்கு ஆதரவை வெளியிடும் விதத்தில் முல்லைத்தீவின் கொக்குத்தொடுவாயில் மனித புதைகுழிகளை அகழும் பணிகளை தூதரக அதிகாரிகள் பார்வையிட்டனர் என தெரிவித்துள்ளது.

வெளிப்படைத்தன்மை, பதிலுக்காக காத்திருப்பவர்களின் காயங்களை ஆற்றுதல் இந்த விடயத்தை முடிவிற்கு கொண்டு வருதல் ஆகியவற்றிற்கு இந்த நடவடிக்கை ( மனித புதைகுழி அகழ்வு) முக்கியமானது என்பதை அமெரிக்கா ஏற்றுக்



கொள்கின்றது அங்கீகரிக்கின்றது எனவும் தூதரகம் தெரிவித்துள்ளது.

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# மட்டக்களப்பில் 12வது நாளாக தொடரும் வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டம்!

யூலை 13, 2024

தமது தொழில் நியமனம் தொடர்பில் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.






மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் 12வது நாளாக இன்றைய தினமும் (13) தமது பிள்ளைகளுடன் வந்து கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



மட்டக்களப்பு காந்தி பூங்காவில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத்தூபிக்கு முன்பாக பட்டதாரிகள் ஒன்றுகூடி போராட்டம் நடத்தியுள்ளனர்.

ஏனைய மாவட்டங்களை போன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கும் நியமனங்களை வழங்க அரசாங்கம் முன்வரவேண்டும் என்று இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், தமது தொழில் நியமனத்தை உறுதிப்படுத்தும் வகையில் பல்வேறு கோசங்களும் எழுப்பப்பட்டன.

"பட்டதாரிகள் எப்போதும் வீதிக்கு வருவது ஏன்", "கல்வி கொடுத்த அரசே கொள்ளிவைக்கலாமா?", "அழிக்காதே அழிக்காதே எமது எதிர்காலத்தினை அழிக்காதே" போன்ற வாசகங்கள் குறிப்பிடப்பட்ட பதாதைகளையும் போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

வருடங்கள் போகப்போக வயது போவதன் காரணமாக பின்னர் தொழில் ஒன்றை பெற்றுக்கொள்ள முடியாத நிலையும் ஏற்படும் எனவும் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியில் ஒன்பதாம் நாள் அகழ்வில் இரண்டு மனித எச்சங்களும், சைனட் குப்பியும் மீட்பு, இதுவரை 47 மனித எச்சங்கள் அகழ்வு!

யூலை 13, 2024

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் மூன்றாங்கட்ட அகழ்வாய்வின், ஒன்பதாம் நாள் அகழ்வாய்வு செயற்பாடுகள் இன்று (13.07.2024) தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வாராய்ச்சியின் 9ஆவது நாளான இன்று இரண்டு மனித எச்சங்கள் முழுமையாக வெளியே அகழ்ந்து எடுக்கபட்டுள்ளதுடன் சைனட்குப்பி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

இரண்டு கட்டங்களிலும் அகழ்ந்தெடுக்கப்பட்ட 40 மனித எச்சங்களுக்கு மேலதிகமாக மூன்றாம் கட்ட அகழ்வு பணியின் போது இன்றுடன் 47 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டு அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ உள்ளிட்ட குழுவினர் , முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, தடயவியல் பொலிசார், கிராம சேவையாளர் உள்ளிட்ட தரப்பினரின் பங்குபற்றுதல்களுடன் ஒன்பதாம் நாள் அகழ்வாய்வுகள் இடம்பெற்றிருந்தன.

நாளையதினம் விடுமுறை வழங்கப்பட்டு பத்தாம் நாள் அகழ்வாய்வு பணிகள் நாளை மறுதினம் (15.07.2024) மீண்டும்



தொடர இருக்கின்றது.

# வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆர்ப்பாட்டம்!

யூலை 13, 2024

தமிழர் தாயகத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் இன்றைய நாள் (13) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



வவுனியா பிரதான தபால் நிலையத்துக்கு அருகில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளினால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்தின் 2700 நாளான இன்றைய நாள் இந்த போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளை ஏந்தியவாறும், "எங்கே எங்கே உறவுகள் எங்கே", "கையில்



ஒப்படைக்கப்பட்ட உறவுகள் எங்கே" என்று கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




# கனடா தினத்தை முன்னிட்டு கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ வாழ்த்துக்கள் தெரிவிப்பு!

யூலை 01, 2024

கனடா தினத்தை முன்னிட்டு பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ வாழ்த்துச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார்.




அனைவருக்கும் இனிய கனடா தின வாழ்த்துக்கள் எனவும், உலகில் எங்கிருந்தாலும் அனைவருக்கும் தமது வாழ்த்துக்கள் தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காணொளி ஒன்றின் மூலம் அவர் இவ்வாறு தனது வாழ்த்துச் செய்தியினை வெளியிட்டுள்ளார்.

பழங்குடியின மக்களுடன் இணைந்து 157 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த தேசம் மலர்ந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

இது தியாகத்தின் கதை எனவும், எமது மூதாதையர்கள் பாரிய அர்ப்பணிப்புடன் இந்த தேசத்தை கட்டியெழுப்பி உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாடு அனைவருக்கும் சம அந்தஸ்தினை வழங்கி வருவதாகவும், எங்கிருந்து வந்தார்கள், எவ்வாறு வழிபாடு



செய்கின்றார்கள் என்பது பற்றிய கரிசனையின்றி அனைவரும் சமமாக மதிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

# பாலஸ்தீனிய சார்பு போராட்டக்கரருக்கு ஒன்ராரியோ நீதிபதி விடுத்த உத்தரவு!

யூலை 03, 2024

புதன்கிழமை மாலைக்குள் கனடாவின் மிகப்பெரிய பல்கலைக் கழகத்தில் உள்ள இரண்டு மாத கால முகாமை விட்டு வெளி யேறுமாறு பாலஸ்தீனிய சார்பு போராட்டக்கரருக்கு ஒன்ராரியோ நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.




ரொரான்ரோ பல்கலைக்கழகத்தின் தடைக் கோரிக்கையை ஏற்று இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

உத்தரவை மீறும் எவரையும் கைது செய்து அகற்ற பொலிசா ருக்கு அதிகாரம் உள்ளது.

ஆனால் இந்த உத்தரவு தங்கள் கோரிக்கைகளுக்காக பிரச் சாரம் செய்வதைத் தடுக்காது என்று எதிர்ப்பாளர்கள் தெரி வித்தனர்.

ரொரான்ரோ பல்கலைக்கழக மாணவி சாரா ரசிக், எதிர்ப்பாளர் களின் செய்தித் தொடர்பாளர்,

அவர் "அதிர்ச்சியடைந்து, மனமுடைந்து, ஆனால் தொடர்ந்து அழுத்தத்தை பிரயோகிக்கத் தயாராக இருப்பதாகவும்" கூறி னார்.

மேலும் பல்கலைக்கழகம் இசுரவேல் தொடர்பான முத லீடுகளை விலக்கி, சில இசுரவேலிய நிறுவனங்களுடனான உறவுகளை துண்டிக்கும் வரை போராட்டங்கள் தொடரும் என்றார்.

போராட்டக்காரர்கள் உத்தரவுக்கு இணங்கி வெளியேறுவது குறித்து முடிவு செய்யவில்லை என்று அவர் கூறினார். நீதிமன்ற தீர்ப்பை பல்கலைக்கழகம் வரவேற்று அறிக்கை வெளி





யிட்டுள்து.

"முகாமில் உள்ளவர்கள் நீதிமன்ற உத்தரவை மதித்து, நீதி மன்றம் விதித்த காலக்கெடுவிற்குள் முகாமை காலி செய் வார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்"

"அந்த காலக்கெடுவிற்குப் பிறகு முகாமில் இருக்கத் தேர்வு செய்யும் எவரும் பல்கலைக்கழகக் கொள்கை மற்றும் சட்டத் தின் கீழ் விளைவுகளுக்கு உட்படுத்தப்படுவார்கள்." என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ரொரான்ரோ பொலிசாருக்கு உதவி கோரி கடிதம் அனுப்பப்பட் டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் தலைவர் தெரிவித்தார்.

இரண்டு மாதங்களாக வளாகத்தின் புற்கள் நிறைந்த பகுதியை ஆக்கிரமித்துள்ள முகாமை பொலிஸ் அகற்ற வேண்டும் என்று பல்கலைக்கழகம் தடை உத்தரவு கோரியது குறிப்பிடத்தக்கது.

# கனேடிய வரலாற்றில் முதல்முறையாக இராணுவத் தளபதியாக பெண் நியமனம்!

யூலை 05, 2024

கனடாவின் ராணுவ தளபதியாக இருந்து வரும் வெய்ன் அயர் விரைவில் ஓய்வு பெற உள்ளார். இதையொட்டி புதிய ராணுவ தளபதியாக மூத்த பெண் இராணுவ அதிகாரியான ஜென்னி கரிக்னன் என்பவரை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நியமித் துள்ளார்.

இதன் மூலம் கனடா வரலாற்றில் இராணுவ தளபதியாகும் முதல் பெண் என்கிற பெருமையை ஜென்னி கரிக்னன் பெற் றுள்ளார். தற்போது ஆயுத படைகளின் தொழில்சார் நடத்தை மற்றும் கலாசாரத்தின் தலைவராக உள்ள ஜென்னி கரிக்னன் கடந்த 35 ஆண்டுகளாக இராணுவத்தில் சேவை புரிந்து வரு கிறார்.

2008-ம் ஆண்டில், கனடா ஆயுத படைகளின் வரலாற்றில் ஒரு போர் படை பிரிவுக்கு தலைமை தாங்கிய முதல் பெண் என்ற பெருமையை பெற்றார்.




அதைத்தொடர்ந்து, ஆப்கானிஸ்தான் மற்றும் சிரியாவில் கனடா படைகளை வழிநடத்திய ஜென்னி கரிக்னன், 2019 முதல் 2020-ம் ஆண்டு வரை, 'நேட்டோ மிஷன் ஈராக்'கை வழிநடத் தினார்.



# உலகில் அதிகளவு கடன் பெறுவோரை கொண்ட நாடுகளின் வரிசையில் கனடா மூன்றாம் இடம்!

## Desjardins

யூலை 06, 2024




* Calculated as a percentage of GDP at purchasing power parity, data from Q4 2023.
Bank for International Settlements and Desjardins Economic Studies

கனேடியர்கள் தொடர்பில் சர்வதேச ரீதியில் வெளியிடப்பட்ட அறிக்கையொன்று அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

Desjardins என்ற அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கனடியர்கள் அதிக அளவில் கடன் பெற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கடன் பெற்றுக் கொண்டவர்களில் அதிகமானவர்கள் நெருக்கடிகளை எதிர்நோக்குவதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கனேடியர்கள் அதிக அளவில் கடன் தொல்லையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் கனடாவில் வங்கி வட்டி வீதம் சிறிது அளவு குறைக்கப்பட்டு இருந்தாலும் இது கடன் பிரச்சனைக்கு தீர்வாக அமையவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டில் உலகில் அதிகளவு கடன் பெறுவோரை கொண்ட நாடுகளின் வரிசையில் கனடா மூன்றாம் இடத்தை வகித்ததாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வட்டி வீத அதிகரிப்பு காரணமாக கனடியர்களின் வருமானத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மேலும் செலவுகள் அதிகரிப்பும் கடன் பிரச்சனைக்கான பிரதான எழுத்துக்களில் ஒன்று என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

செலவு அதிகரிப்பு மற்றும் வட்டி வீத உயர்வு போன்ற ஏதுக்களினால் கனேடியர்களினால் சேமிப்பு செய்வதில் சிக்கல்கள் எதிர் நோக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் நாட்களில் வட்டி வீதம் மேலும் குறைக்கப்படும் என பல நிதி நிறுவனங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

# ஒன்ராரியோ அரசாங்கத்தில் இளம் ஈழத்தமிழ் தலைமைத்துவத்தின் பிரதிநிதித்துவம்!

யூலை் 06, 2024

அண்மையில் நடந்த ஒன்ராரியோ அமைச்சரவை மாற்றத்தில், போக்குவரத்துத்துறை இணை அமைச்சராக இருந்த விஜய் தணிகாசலம் அவர்கள், குடியிருப்புவசதித்துறை இணை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அமைச்சரவையிலுள்ள இளவயது உறுப்பினர்களில் ஒருவர் என்பதுடன், ஒன்ராரியோவின் முதல் தமிழ் அமைச்சருமாவார். இது மாநிலத்தின் ஆற்றல் மிக்க இளம் தலைமைத்துவத்துக்கான எடுத்துக்காட்டாகும்.

இவ்வேளையில், ஜூன் 27 அன்று தலைமைப் பணியாளர்களின் மாற்றங்களின்போது, சரண்யா நீலானந்தசிவம் குடியிருப்புவசதித்துறை இணை அமைச்சகத்தின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். கனடாவில் பிறந்த திறமை மிக்க இளம் ஈழத் தமிழரான சரண்யாவுக்கு முதல்வர் டக் ஃபோர்ட் (Premier Doug Ford) அவர்களால் நேரடியாக வழங்கப்பட இந்நியமனமானது, அவரின் சாதனைகளையும் இளம் ஈழத் தமிழ்த் தலைமைத்துவத்தின் வளர்ச்சியையும் எடுத்தியம்புகிறது.

சரண்யா உலக வரலாறு மற்றும் சமத்துவம் ஆகிய துறைகளில் பட்டப்படிப்பை முடித்துள்ளதுடன், சமூகத்தில் கல்விச் செயற்பாட்டிலும் கவனம் செலுத்திவந்துள்ளார். இவர் முன்னர் கனடிய தமிழ் இளையோர் ஒன்றியத்தின் (CTYA) கலை மற்றும் கலாசார பேரவையின் இயக்குநராகவும் பணியாற்றியிருந்தார்.




தாயகத்திலும் புலம்பெயர்ந்த தேசங்களிலும், ஈழத்தமிழர்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவம் மிகக் குறைவாகவே உள்ளவிடத்து, இந்நியமனங்களானது துறைசார் சாதனைகளாக மட்டுமல்ல; அவை தமிழர்களின் முன்னேற்றத்தினதும் அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்குமான குறியீடாகவும் பார்க்கப்படுகிறது. “ஒரு சமூகமாக, இளையவர்கள் தலைமையேற்று எமது குரல்கள் ஒலிக்கவும், வளமான எதிர்காலத்தை உருவாக்கவும் தமிழர்களாகிய நாம் தொடர்ந்தும் இணைந்து செயற்பட வேண்டும்” என அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்துள்ளார்.

# கனடிய பசுமைக் கட்சியின் இணைத் தலைவர் பதவி விலகினார்!

யூலை 09, 2024

கனடிய பசுமைக் கட்சியின் இணைத் தலைவர் ஜொனதன் பெட்னிலன்ட் தனது பதவி விலகினார்.

ஜொனதன், கட்சியின் மற்றுமொரு இணைத் தலைவரான எலிசபெத் மேயுடன் இணைந்து இந்தப் பதவியை வகித்து வந்தார்.

தனிப்பட்ட காரணங்களுக்காக பதவி விலகுவதாக ஜொனதன் அறிவித்துள்ளார்.

எலிசெபத் மே மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மைக் மோரிஸ் ஆகியோருடன் இணைந்து செயற்பட்டதனை கௌரவமாக கருதுவதாகத் தெரிவித்துள்ளார்.

கட்சியை மறுசீரமைப்பதற்கு பங்களிப்பு வழங்கியமை மகிழ்ச்சி அளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜொனதனின் தீர்மானம் பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் அளிப்பதாக எலிசெபத் மே தெரிவித்துள்ளார்.



# ஒன்ராரியோ மாகாணத்தில் குடும்ப மருத்துவர் இல்லாதவர்கள் எண்ணிக்கை 2.5 மில்லியனை எட்டுகிறது!

## ஒன்ராரியோ குடும்ப நல மருத்துவர்கள் கல்லூரியின் புதிய தலைவர் டாக்டர் ஜோவின் வருகீஸ்

யூலை 12, 2024

ஒன்ராரியோ மாகாணத்தில் மருத்துவர்களுக்கு பற்றாக்குறை நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மாகாணத்தில் சுமார் 2.5 மில்லியன் மக்களுக்கு குடும்ப நல மருத்துவர்களின் சேவை கிடைக்க பெறுவதில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்ராரியோ குடும்ப நல மருத்துவர்கள் கல்லூரி இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

ஆறு மாதங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட தகவல் திரட்டல்களை விடவும் தற்பொழுது இந்த எண்ணிக்கை 160, 000த்தினால் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கல்லூரியின் புதிய தலைவர் டாக்டர் ஜோவின் வருகீஸ் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.


மருத்துவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள குறைவு மக்களை பெரிதாக பாதிக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சில வேளைகளில் தடுக்கப்படக்கூடிய புற்றுநோய் போன்ற நோய்களை ஆரம்பத்திலேயே கண்காணிப்பதற்கான சந்தர்ப்பங்கள் இல்லாமல் போகும் அபாயம் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# கனேடிய நாடளுமன்ற உறுப்பினர் ஷோன் ஷென் (Shaun Chen) நோக்கி முன்வைக்கப்படும் மனு!

யூலை 05, 2024




**E-5058 மனவில் கையொப்பமிடுவது எப்படி?**
**https://www.ourcommons.ca/petitions/en/Petition/Details?Petition=e-5058**

இவ்வாறாக:

★ இலங்கைத் தீவிலுள்ள தமது ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மரபுவழித் தாயகமான தமிழீழத்தில் எழுபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக நீட்சியான இன அழிப்பை எதிர்கொண்டுவரும் ஈழத்தமிழர் தேச மக்களிற் புலம்பெயர்ந்த பெருந்தொகையானோருக்குப் புகலிடமாகக் கனடா விளங்குகிறது (என்பதாலும்);

★ இலங்கை அரசு ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அப்பட்டமாக மீறிவந்துள்ளது (என்பதாலும்);

★ அவ்வரசின் ஊக்கத்தோடு 1956 ஆம் ஆண்டு தொட்டு தமிழருக்கு எதிரான இனப் படுகொலைகள் மேற்கொள்ளப்பட ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து, அவை பெரும் படுகொலைகளாகத் தொடர்ந்து, 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஓர் இன அழிப்புப் போர் ஊடாக மெய்நடப்புத் தமிழீழம் முற்றாக அழிக்கப்படுவது ஈறாகச் சரீர (பௌதிக) இன அழிப்பு பலவேறு வழிகளில் வெளிப்பட்டுள்ளது (என்பதாலும்);

★ தமிழ் இன அழிப்பு நீட்சியான தனித்துவத் தன்மையைக் கொண்டது, ஏனெனில் இன அழிப்பின் பத்துப் படிநிலைகளும் இதில் நடந்தேறியுள்ளன, அதுவும் இன அழிப்பைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான 1948 ஆம் ஆண்டுச் சாசனத்தின் அடிப்படையில் விசாரிக்கப்படக்கூடிய ஆரம்ப நியாயாதிக்க காலம் எப்போதிருந்து ஆரம்பிக்கிறதோ அப்போதிருந்தே அவை நடைபெற்றுவருகின்றன என்பதோடு அவை (எதிர்காலத்திலும்) மீள்நிகழும் ஆபத்துக் கடுமையாக நிலவுகிறது (என்பதாலும்);

★ இன அழிப்பு என்ற குற்றச்சாட்டை ஐ.நா. விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் என்று கனேடிய நாடாளுமன்றத்தில் 2019 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் நாளன்று நிறைவேற்றப்பட்டிருந்த பிரேரணை, ஒன்ராரியோ மாகாண சட்டவாக்க அவையினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 104 ஆம் சட்டமூலம் ஆகிய இரண்டையும் இலங்கை அரசு மறுதலித்துவிட்டது (என்பதாலும்);

கீழே ஒப்பமிட்டுள்ளோராகிய கனடாவின் குடிமக்களும் வதிவிடவுரிமை கொண்டோருமான நாம் கனேடிய நாடாளுமன்றத்திடம் வேண்டிக்கொள்வது (என்னவெனில்)

**1.** கனடா தனக்குரிய இரண்டு பொறுப்புகளின் அடிப்படையில் - (முதலாவதாக, புலம்பெயர்) ஈழத்தமிழ் மரபுரிமையின் பாற்பட்ட குடிமக்களைத் தன்னகத்தே கொண்டிருக்குங் காரணத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஓர் அரச தரப்பாகவும் (இரண்டாவதாக, நேரடியாகப் பாதிக்கப்படாவிட்டாற் கூட எந்த ஓர் அரசுக்கும் பொதுவானதாயுள்ள சர்வதேசக்) கட்டாய நியமத் தரப்புக் கடப்பாட்டை நிறைவேற்றும் பொறுப்புள்ள ஓர் அரச தரப்பாகவும் - (இன அழிப்பைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான 1948 ஐ.நா.) சாசனத்தின் ஒன்பதாம் உறுப்புரை வரையறுத்துள்ள பொறுப்பின் அடிப்படையிற் செயலாற்றி தமிழ் இன அழிப்பு மீது இலங்கைக்குரிய அரச பொறுப்பை அச் சாசனம் வழங்குகின்ற முழுமையான கால நியாயாதிக்கத்தையும் (சாசனத்தின் சட்ட அமுலாக்கம் செல்லுபடியாகும் முதலாம் நாளான 1951 ஜனவரி 12 ஆம் நாள் தொடக்கம் இற்றை நாள் வரை மட்டுமல்ல மீள்நிகழும் ஆபத்தைக் கருத்திற்கொண்டு எதிர்காலக் கரிசனையையும்) உள்ளடக்கி சர்வதேச (உலக) நீதிமன்றில் விசாரிப்பதற்குரிய வழக்குத் தொடரும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்; அத்தோடு

**2.** ஆக்கிரமிக்கப்பட்ட தாயகத்திலுள்ள (ஈழத்தமிழ்) மக்களிடையேயும் (அவர்தம்) புலம்பெயர் மக்களிடையேயும் (மேற்குறித்த இன அழிப்பில் இருந்து பாதுகாக்கப்படுவதற்கான பரிகார நீதியாக) சுதந்திரமும் இறைமையுமுள்ள தமிழீழ அரசின் உருவாக்கத்தை முடிவுசெய்வதற்கான பொதுவாக்கெடுப்பு ஒன்றை சர்வதேச நிர்வகிப்புடன் நடாத்தக் கோருதல் வேண்டும்.

## PURPOSE OF SIGNING THE PETITION e-5058

**This Petition has been revised and uploaded to ourcommons.ca to comply with the House of Commons' word count limit (adherence to the submission guidelines).*

PURPOSE OF SIGNING THE PETITION e-5058

*This Petition has been revised and uploaded to ourcommons.ca to comply with the House of Commons' word count limit (adherence to the submission guidelines).

Canada is a diasporic home to largest number of Eelam Tamils, a nation of people without their own state, who fled their occupied traditional homeland, Tamileelam, in the island of Ceylon/Sri Lanka, facing protracted genocide over 75 years;

The Sri Lankan state has grossly violated the Right of Self-Determination of the Eelam Tamils with constitutionally entrenched clauses and amendments imposing *unitary system of government* and giving *foremost place* to a particular religion concentrating power over affairs and wealth of the island in the hands of the Sinhala ethnic community, as well as imposing the Sixth Amendment against the democratic aspiration of Eelam Tamils;

The State-sponsored physical genocide has manifested in various ways since 1956 from anti-Tamil ethnic pogroms, military and paramilitary conducted massacres, and finally, a genocidal war that ended in May 2009 in total annihilation of the de-facto Tamil Eelam administration, which remained committed to internationally brokered peace process since 2002;

The protracted nature of genocide is a unique feature of Sri Lanka's genocide and an overwhelming majority of Tamils perceive that all ten stages of genocide have occurred since the beginning of invocable temporal jurisdiction of the 1948 UN Convention on the Prevention and Punishment of the Crime of Genocide (the Genocide Convention) and the risk of recurrence remains also high post-2009;

The Sri Lankan State has disputed both The House of Commons motion passed on 19th June 2019 that called on the UN to investigate into allegations of genocide and the Legislative Assembly of Ontario enacted Bill 104;

**WE, THE UNDERSIGNED**, residents and citizens of Canada

**CALL UPON THE** Member of Parliament

**TO**

**Firstly, invoke Canada's responsibilities on two grounds – as an *injured State* party on behalf of its citizens of Eelam Tamil heritage and as a State party exercising its *erga omnes partes* obligation owed to the international community as a whole – to initiate proceedings against the Republic of Sri Lanka at the International Court of Justice to investigate that State's responsibility on Tamil genocide under the Genocide Convention's Article IX covering entire temporal jurisdiction period; and**

**secondly, to call for an internationally-administered referendum among the people of North and East descent in the island, in the diaspora and among the refugees in India and elsewhere, to decide on the creation of an independent and sovereign state of Tamil Eelam.**

Please do not copy, modify, or use this text without the petitioner's consent.

### Background information

**Canadian citizens of Eelam Tamil diaspora origin should urge Canada to institute case against the Republic of Sri Lanka at the International Court of Justice (ICJ) to investigate Sri Lankan State responsibility on Tamil genocide, covering temporal jurisdiction of the 1948 Genocide Convention in its entirety**

Canada is a diasporic home to the largest number of exiled Eelam Tamils, who fled genocidal onslaught in their traditional homeland, which is the northern and eastern parts of the island of Ceylon/'Sri Lanka. The homeland, which was de-facto Tamil Eelam prior to May 2009 is now Occupied Tamil Eelam.

The discourse of state formation in the island severed the legal continuity of sovereignty ties with the British Queen, who continued to be the repository of Tamils sovereignty until 1972. It unilaterally abolished even the meagre constitutional safeguards in the British-given 1947 Soulbury Constitution that had also been enacted disregarding Tamil concerns.

The unitary State of Sri Lanka has constitutionally negated Tamils their collective right of Self-Determination is the mainstream and unanimous view of the Tamils. Their democratically expressed political aspiration in 1977 for the establishment of a sovereign, secular and independent Tamil Eelam as the last-resort remedy, in the last- ever free and fair democratic election in the context of democratically exercising their self-determination, has been totally denied through the 6th Amendment to the Sri Lankan constitution since August 1983.

The Eelam Tamils, who commenced a passive resistance struggle since 1930s have been systematically subjected to a series of state-sponsored genocidal pogroms since 1956 that triggered them to seek last-resort defensive warfare as thousands fled seeking security within and outside the island. During the war, there were a series of genocidal massacres committed against Tamils by the armed military and paramilitary forces of the State. When Tamils achieved diplomatic and military parity of status with the Sri Lankan State, that State allegedly decided to genocidally annihilate the Eelam Tamils, which culminated in the genocidal war of 2009.

The widespread protests in the World capitals ended futile as the International Community failed to prevent the genocide within the Responsibility to Protect (R2P) framework. The UN's investigation into its own conduct during the last months of the war admitted "systemic failure" and concluded that the "events in Sri Lanka mark a grave failure of the UN" and recommended that the UN should in future "be able to meet a much higher standard in fulfilling its protection and humanitarian responsibilities".

However, the UN Human Rights Council based discourse in Geneva has also failed to deliver justice post-2009. There has been no meaningful transition from the root causes behind the conflict even though the armed struggle was ended through the genocidal onslaught. Cultural and structural genocide continues post-2009 with high risk of recurrence of physical genocide.

Since the systematic and protracted State-sponsored genocide against Eelam Tamils in the island manifest in various ways, it is crucial to place the acts of genocide from the very beginning of invokable temporal jurisdiction of the 1948 UN Convention on the Prevention of Genocide (hereafter be cited as the Convention) and the genocidal war in 2009 in the broader context of Ceylon/Sri Lankan States conduct towards Eelam Tamils during the last 75-year-long protracted genocide.

All the ten stages of genocide have taken place and continue to take place post-2009. The protracted nature of genocide is a uniquely unique feature of Sri Lanka's genocide. "Never again" has become "time again" in the island. Unless the State-responsibility for all acts under Article III of the Convention is properly investigated by the International Court of Justice (ICJ), there is a great danger of recurrence.

Narrowing the temporal jurisdiction to 2006-2009 without considering the protracted nature of the genocide would make it challenging to establish the intention as one would be limited to infer the intent from relevant facts and circumstances of a limited scope. In addition to reasonable inference[1], there are open and clear-cut reference to establish the definitional element of intent, which is often referred to as *dolus specialis* or *specific intent*.

[1] The International Criminal Tribunal for the former Yugoslavia (ICTY) has held that genocidal intent "may, in the absence of direct explicit evidence, be inferred from" circumstantial evidence. The International Criminal Court's (ICC's) Elements of Crimes, also states, "Existence of intent and knowledge can be inferred from relevant facts and circumstances". However, the UN Human Rights Council reports on Sri Lanka have limited such inferences only towards War Crimes and Crimes Against Humanity on crimes committed in Sri Lanka during the final phase of the war, even though the former High Commissioner of Human Rights did not rule out the interpretation of plausibile genocide based on the findings in the future."That is not something that we perceive at this stage. Had we thought that acts of genocide had been committed of course we would have raised this in the findings – that is not to say that at a subsequent stage once investigations were conducted that it implausible. But for the time being that is not something that we perceive as having allegedly happened," responded UN High Commissioner for Human Rights Zeid Ra'ad Al Hussein responding to question on genocide during OHCHR press conference on OISL Report (Geneva, 16 September 2015).

Please do not copy, modify, or use this text without the petitioner's consent.

The North-East Secretariat of Human Rights (NESOHR), which was subjected to genocidal annihilation, has extensively documented the genocidal massacres since 1956[2].

The Permanent Peoples' Tribunal (PPT) on Sri Lanka, an international opinion tribunal independent from any State or UN authority, found Sri Lanka guilty of genocide in January 2014 at its Bremen Session[3]. Apart from the crime of genocide, the Tribunal has also defined the protected group according to the Convention as the nation of Eelam Tamils.

The House of Commons has passed a motion on 19th June 2019 calling upon "the United Nations to establish an international independent investigation into allegations of genocide against Tamils committed in Sri Lanka, including during the last phase of the armed conflict in 2009". Furthermore, the Legislative Assembly of Ontario has enacted Bill 104 in 2021 proclaiming the seven-day period in each year ending on May 18 as Tamil Genocide Education Week.

The Sri Lankan State has disputed the Canadian resolution and the legislature recognition of Tamil genocide remembrance. As such, a clear dispute has already been established for the Canadian State to institute a case at the ICJ.

As the largest diasporic home country of the Eelam Tamils, Canada that has a concern for its citizens, is entitled to invoke its responsibility as an injured State as well as being entitled to invoke its obligation *erga omnes partes* as recently demonstrated by The Gambia in its case against the Myanmar State-responsibility on genocide (2022) and by South Africa in the case of Israel's crimes against Palestinians (2024). Both the cases have been accepted by the ICJ as having plausible rights to protection from genocide.

Prevention of State Responsibility under the Convention is a clearly accepted obligation stemming from the peremptory norm of general international law (jus cogens).

Professor Francis Boyle, an eminent American expert in international law at the University of Illinois College of Law, who has single-handedly won two ICJ orders for the Republic of Bosnia Herzegovina against Yugoslavia to cease and desist all acts of genocide committed against its population, has held that the genocide against Eelam Tamils must be investigated by the ICJ and that he is prepared to appear as the Chief Prosecutor. [4]

While addressing the State Responsibility at the ICJ, the most proper avenue to address the criminal responsibility would be a specifically constituted (ad hoc) International Criminal Tribunal on Sri Lanka (ICT-SL) with dedicated statutes. The International Criminal Court has limited scope of temporal jurisdiction as the ICC can only exercise jurisdiction over crimes committed after July 1, 2002 (the date that the Rome Statute went into force).

Denial of Right of Self-Determination is also widely regarded as a jus cogens norm. Canada could also initiate a separate case in the ICJ on Sri Lankan States violation of the Right of Self-Determination of Eelam Tamils.

Canada has also incorporated the obligations of the Rome Statute into its national laws when it adopted the Crimes Against Humanity and War Crimes Act (CAHWCA) on June 24, 2000.

As such it could also apply Universal Jurisdiction to prosecute any individual present in Canada for crimes listed in the CAHWCA regardless of that individual's nationality or where the crimes were committed.

However, when making representations to The House of Commons or any Canadian government authority, the Tamil diaspora activist groups should not mix jurisprudence, territorial and temporal jurisdiction and they type of courts in one and same document when initiating a particular type of action. For example, a request to initiate proceedings at the ICJ on State Responsibility at the ICJ should not be mixing criminal responsibility or universal jurisdiction. Similarly, one should also pursue ICT over ICC as both entails the route.

[2] Report by, North East Secretariat on Human Rights (NESOHR), Karadipokku Junction Kilinochchi, Sri Lanka, First Edition in Tamil - 2005, First Edition in English - 2007, Information Collected by Statistical Centre for North East (SNE)

[3] Peoples's Tribunal on Sri Lanka (PTSL), Bremen, Germany, 07-10 December 2013, Report of the findings published by the Permanent People's Tribunal (PPT) and the International Human Rights Association - Bremen (IMRV), Bremen 2014

[4] Speech at the second international conference on Tamil Nationhood and Genocide in Sri Lanka, held at Carleton University in Ottawa in May 2018.

Please do not copy, modify, or use this text without the petitioner's consent.

# தமிழக செய்திகள்



## "69 சதவீத இட ஒதுக்கீட்டுக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்பு"

### பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ்

யூலை 03, 2024

தமிழகத்தில் தற்போது 69 சதவீத இடஒதுக்கீட்டுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் அருகே காணையில் நேற்று மாலை தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ் கூறியதாவது: "தமிழகத்தில் தற்போது 69 சதவீத இட ஒதுக்கீட்டுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. கடந்த 2007-ம் ஆண்டில் உச்ச நீதிமன்றத்தில் இந்த இடஒதுக்கீட்டுக்குத் தடை கோரி வழக்குத் தொடரப்பட்டது.

அப்போது வழக்கை விசாரிக்க உச்ச நீதிமன்ற நீதிபதிகள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்கள் 69 சதவீதத்துக்கு மேல் இருக்கிறார்களா எனக் கணக்கெடுப்பு நடத்தக் கோரி உத்தரவிட்டனர். ஆனால், 2012-ம் ஆண்டில் தமிழக அரசு கணக்கெடுப்பை நடத்தாமல் தன் தரப்பு நியாயத்தை உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்தது.

இந்த நிலையில் 2021-ம் ஆண்டில் 69 சதவீத இட ஒதுக்கீட்டுக்கு தடை விதிக்கக் கோரி புதிய வழக்கு உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்டது. மகாராஷ்டிர மாநிலத்தில் மராத்தா சமூகத்தினருக்கான இடஒதுக்கீடு வழக்கு விசாரித்து முடித்த பின்னர் இந்த விசாரிக்கப்படும் என உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர்.

கோடை விடுமுறைக்குப் பின்னர் ஜூலை 8-ம் தேதி உச்ச நீதிமன்றம் மீண்டும் கூடவுள்ளது. அப்போது உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நிச்சயம் 69 சதவீத இடஒதுக்கீட்டை வழக்கை நிச்சயம் விசாரிப்பார்கள்.

தமிழகத்தில் 69 சதவீதத்துக்கு மேல் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் இருக்கிறார்களா, அதற்கான கணக்கெடுப்பை மேற்கொண்டீர்களா என நிச்சயம் நீதிபதிகள் கோருவார்கள். தமிழக அரசு அப்போது என்ன பதில் சொல்லப் போகிறது? 69 சதவீத இடஒதுக்கீட்டை இரத்து செய்ய வாய்ப்பு இருக்கிறது. இது பெரிய அநீதியாகும்.

69 சதவீத இடஒதுக்கீடு பறிபோகாமல் இருக்க, சமூக நீதி காக்கப்பட வேண்டுமெனில் சாதிவாரி கணக்கெடுப்பை மேற்கொள்ள வேண்டும். ஆனால், இதை செய்வதற்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கும், தமிழக அரசுக்கும் அக்கறை இல்லை.

பிஹார் மாநிலத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு மேற்கொள்ள அந்த மாநில உயர்நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் உறுதி செய்துள்ள நிலையில் தமிழக முதல்வருக்கு மட்டும் ஏன் அச்சம் ஏற்படுகிறது?

சாதிவாரி கணக்கெடுப்பை மேற்கொள்ள மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என முதல்வர் ஸ்டாலின் கூறுகிறார். ஆனால் அது தவறு. மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளது. மக்களும் தமிழக அரசுக்கு அழுத்தம் தர வேண்டும். 69 சதவீத



இடஒதுக்கீடு இரத்து செய்யப்பட்டால் கலவரம் வெடிக்கும். மிகப் பெரிய பிரச்சனை ஏற்படும். அந்த நிலை உருவாகாமல் இருக்க, தமிழக முதல்வர் ஜாதிவாரி கணக்கெடுப்பை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தேர்தலுக்காக அரசியல் பேசவில்லை. சமூகநீதியைக் காக்க வேண்டும் என்பதற்காக பேசுகிறேன்.

எந்த சமூகம் பின்தங்கியுள்ளது, எந்த சமூகம் மிகவும் பின்தங்கியுள்ளது, எந்த சமூகம் முன்னேறியிருக்கிறது போன்றவற்றை அறிந்து கொள்ள சாதிவாரி கணக்கெடுப்பு உதவும். எனவே உடனடியாக சாதிவாரி கணக்கெடுப்பை தமிழக அரசு நடத்த வேண்டும்" இவ்வாறு அன்புமணி தெரிவித்தார்.

## சிறீலங்கா கடற்படையின் கைதைக் கண்டித்து இராமேசுவரம் பாம்பனில் போராட்டம்!

யூலை 03, 2024

சிங்கள கடற்படையால் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 25 இந்திய மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தி, இந்தியா தமிழ்நாடு இராமேசுவரம் மீனவர்கள், போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை அதிகாலை, சிறீலங்கா கடற்படையால், நெடுந்தீவு கடற்பரப்பில், நான்கு நாட்டு படகுகளுடன் கைது செய்யப்பட்ட 25 மீனவர்களும், எதிர்வரும் 15 ஆம் திகதி வரை, யாழ்.சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்க கோரி, பாம்பன் நாட்டு படகு மீனவர்கள், காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

பாம்பன் வடக்கு மற்றும் தெற்கு மீன்பிடி துறைமுகத்தில் உள்ள, சுமார் 300-க்கும் மேற்பட்ட நாட்டுப படகுகள், கரையில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை, பாம்பன் சாலை பாலத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தி, பின்னர், மாலை வேளை, மண்டபம் ரயில் நிலையத்தில் இருந்து புறப்படும் ரயிலை



மறித்து போராட்டம் நடத்தப்படும் என, மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

## பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழ்நாட்டு தலைவர் படுகொலை!

யுலை 05, 2024

பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங். இவர் சென்னை பெரம்பூரில் வசித்து வந்தார். இந்நிலையில், வெள்ளிக்கிழமை வழக்கம்போல் ஆம்ஸ்ட்ராங் வீட்டில் இருந்துள்ளார். அப்போது இருசக்கர வாகனத்தில் அங்கு வந்த 6 பேர் கொண்ட மர்ம கும்பல், அவர் மீது சரமாரியாக அரிவாளால் வெட்டி தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த தாக்குதலில் படுகாயமடைந்த ஆம்ஸ்ட்ராங்கை மீட்ட அக்கம் பக்கத்தினர், உடனடியாக காவல் துறைக்கு தகவல் கொடுத்துள்ளனர். சம்பவ இடத்துக்கு வந்த பெரம்பூர் மற்றும் செம்பியம் பொலீசார், ஆம்ஸ்ட்ராங்கை மீட்டு கிரீம்ஸ் சாலையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். அங்கு சிகிச்சைப் பலனின்றி ஆம்ஸ்ட்ராங் உயிரிழந்தார்.

மேலும், சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட சிசிடிவி காட்சிகளை சேகரித்து பொலீசார் விசாரணையை தீவிரப்படுத்தி உள்ளனர். அசம்பாவிதச் சம்பவங்களைத் தவிர்க்க பெரம்பூர், செம்பியம் உள்ளிட்ட பகுதிகளில் போலீஸார் தீவிர பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். சென்னையில், அரசியல் கட்சியின் மாநிலத் தலைவர் ஒருவர் மர்ம கும்பலால் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம், அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



## மன்னாரைச் சேர்ந்த தாய் மற்றும் 2 குழந்தைகள் உற்பட மூவர் தமிழகத்தில் தஞ்சம்!

யுலை 06, 2024

தலைமன்னாரில் இருந்து தாய் மற்றும் 2 குழந்தைகள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை தனுஷ்கோடியை சென்றடைந்தனர்.

தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த யோக வள்ளி (வயது 34), அவரது பிள்ளைகளான அனுஜா (வயது 08), மிஷால் (வயது 05) ஆகியோர் தலைமன்னாரில் இருந்து படகில் புறப்பட்டு தனுஷ்கோடி கடல் பகுதியை சென்றடைந்தனர்.

தகவல் அறிந்த மெரைன் பொலிசார் தனுஷ்கோடி கடற்கரை பகுதியில் இருந்து விசாரணைக்காக 3 பேரையும் மண்டபம் மெரைன் பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர்.

விசாணையில் யோக வள்ளி விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை அகதி முகாமில் பிறந்தவர் என்றும், 15 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை திரும்பியவருக்கு அங்கே திருமணம் முடிந்து கணவருடன் பிரிந்து வாழ்கிறார் என்றும் தெரியந்துள்ளது.

2 குழந்தைகளுடன் இலங்கையில் வாழ முடியாத சூழலில் வெம்பக்கோட்டை முகாமில் அவரது தாயாருடன் சேர்ந்து வாழ்வதற்காக மீண்டும் தமிழகம் வந்ததாக தெரிய வந்துள்ளது.

படகு கட்டணமாக 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலுத்தி வந்ததாகவும் யோக வள்ளி தெரிவித்துள்ளார்.



விசாரணைக்கு பின்னர் 3 பேரையும் மெரைன் பொலிசார் மண்டபத்தில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் ஒப்படைத்தனர்.

# ஆம்ஸ்ட்ராங் படுகொலை தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு சரியில்லை என்பதைக் காட்டுகிறது!

## பகுஜன் சமாஜட கட்சியின் தேசிய தலைவர் மாயாவதி

யூலை 07, 2024

பெரம்பூர் செம்பியம் பந்தர் கார்டன் மாநகராட்சிப் பள்ளி மைதானத்தில் வைக்கப்பட்டுள்ள ஆம்ஸ்ட்ராங் உடலுக்கு மலர் அக வணக்கம் செலுத்துவதற்காக பகுஜன் சமாஜ் கட்சியின் தேசிய தலைவர் மாயாவதி இன்று உத்தரபிரதேசத்தில் இருந்து சிறப்பு விமானம் மூலம் சென்னை வந்தார்.

அதன்பிறகு சாலை மார்க்கமாக கார்மூலம் பெரம்பூர் வந்தடைந்தார். மாயாவதி வருகையையொட்டி பெரம்பூர் பகுதியில் பலத்த பொலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. பள்ளி மைதானத்திற்கு வந்த மாயாவதி, ஆம்ஸ்ட்ராங் மனைவி மற்றும் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

அதன்பின், ஆம்ஸ்ட்ராங் உடலுக்கு மலர்வளையம் வைத்து அக வணக்கம் செலுத்தினார். பகுஜன் சமாஜ் கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் ஆகாஷ் ஆனந்தும் அக வண்க்கம் செலுத்தினார். இதன்பிறகு, பேசிய மாயாவதி, ஆம்ஸ்ட்ராங் கொள்கை பிடிப்போடு செயல்பட்டு வந்தார்.

கட்சி அரசியலில் ஈடுபட முடிவு செய்த அவர், தேர்வு செய்த கட்சி பகுஜன் சமாஜ் கட்சியே. ஆம்ஸ்ட்ராங் படுகொலை தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு சரியில்லை என்பதை காட்டுகிறது. ஆம்ஸ்ட்ராங் படுகொலையை, தமிழக அரசு தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும். தலித்துகளின் வாழ்க்கை ஆபத்தான நிலையில் உள்ளதை இந்த சம்பவம் காட்டுகிறது. கொலைக்கு காரணமான உண்மையான குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை என்று கூறினார்.




# காவிரி படுகையில் அகழாய்வு செய்ய வேண்டும்!

## மத்திய தொல்லியல் துறை கண்காணிப்பாளர் அமர்நாத் ராமகிருஸ்ணன்

யூலை 07, 2024

காவிரிப் படுகையில் அகழாய்வு செய்தால், நிறைய தொல்லியல் எச்சங்கள் கிடைக்க வாய்ப்புள்ளதாக மத்திய அரசின் தொல்லியல் துறை கண்காணிப்பாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் கூறினார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது: கீழடி அகழாய்வில் முருகன், சிவன் உருவச் சிலைகள் கிடைக்கவில்லை. அங்கு குழந்தைகள் விளையாடப் பயன்படுத்தும் சுடுமண் பொம்மைகளே கிடைத்துள்ளன. அவற்றை மதங்களின் அடையாளமாகப் பேசுவது தவறு. அந்தக் காலத்தில் மதக் கோட்பாடுகள் கிடையாது.

கீழடி அகழாய்வுப் பரப்பை இன்னும் அதிகரித்தால், கூடுதல் வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கும். மத்திய தொல்லியல் துறை சார்பில் நடந்த கீழடி முதலாம், இரண்டாம் கட்ட ஆய்வறிக்கையை வெளியிடுவது தொடர்பாக மத்தியதொல்லியல் துறை இயக்குநரகம்தான் முடிவெடுக்க வேண்டும். கீழடி மூன்றாம் கட்ட அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்களை சென்னையில் பாதுகாப்பாக வைத்துள்ளோம். நீதிமன்றத் தீர்ப்பின்படி, தொல்லியல் துறை இயக்குநரக அதிகாரிகள் உரிய முடிவெடுப்பர்.

மதுரை மாவட்டம் கொந்தகையில் உள்ள ஈமத்தாழிகளில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புகளை டிஎன்ஏ சோதனை செய்தால், சம்பந்தப்பட்ட மனிதனின் வயதை அறிந்து கொள்ளலாம்.

இதுவரை ஈமத்தாழிகள் புதைத்த இடங்களைத்தான் ஆய்வு செய்துள்ளோம். மனிதன் வாழ்ந்த வாழ்விடப் பகுதியை ஆய்வு செய்யும்போதுதான், மனித வரலாற்றைக் கணிக்க முடியும். காவிரிப் படுகையில் அகழாய்வு செய்தால், நிறைய தொல்லியல்



எச்சங்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு அமர்நாத் ராமகிருஷ்ணன் கூறினார்.

# இராமேசுவரம் மீனவர்களை நடுக்கடலில் தாக்கி துரத்தியடித்த சிறீலங்கா சிங்களக் கடற்படை!

யூலை 07, 2024

மீன்பிடி தடைகாலம் முடிந்து கடலுக்கு சென்ற இராமேசுவரம் மீனவர்களுக்கு தொடர்ந்து சோதனை காலமாகவே இருந்து வருகிறது. 61 நாட்களுக்கு பிறகு கடலுக்கு சென்ற முதல் நாளே பாம்பன் மீனவர்கள் 3 பேர் நடுக்கடலில் படகு மூழ்கி பலியானார்கள். அடுத்தடுத்த நாட்களில் தற்போது வரை 47 மீனவர்களை எல்லை தாண்டியதாக கூறி சிறீலங்கா சிங்களக் கடற்படை சிறைபிடித்து சென்றுள்ளனர்.

அவர்களின் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டதால் வாழ்வாதாரம் இழந்து தவித்து வரும் மீனவர்களை விடுதலை செய்யக்கோரி சக மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தநிலையில் இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரத்தில் இருந்து நேற்று அதிகாலை 400-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அனுமதி பெற்று 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர்.

நள்ளிரவில் அவர்கள் கச்சத்தீவு அருகே இந்திய கடல் எல்லையில் வலைகளை விரித்து மீன் பிடித்துக்கொண்டு இருந்தனர். அப்போது அங்கு மின்னல் வேகத்தில் சிறீலங்கா சிங்களக் கடற்படைக்கு சொந்தமான 6 குட்டி ரோந்து கப்பல்களில் சிங்களக் கடற்படையினர் வந்தனர். அவர்களை பார்த்தும் பீதியடைந்த இராமேசுவரம் மீனவர்கள் வலைகளை சுருட்டிக் கொண்டு அங்கிருந்து புறப்பட தயாரானார்கள். ஆனாலும் மீனவர்களின் விசைப் படகுகளை சுற்றி வளைத்த சிங்களக் கடற்படையினர் மீனவர்கள் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தி மீன்பிடிக்க விடாமல் அந்த பகுதியில் இருந்து விரட்டியடித்தனர்.



அத்துடன் 10-க்கும் மேற்பட்ட படகுகளில் தாவிக்குதித்த சிறீலங்கா கடற்படை வீரர்கள், மீனவர்கள் பிடித்து வைத்திருந்த விலை உயர்ந்த இறால் உள்ளிட்ட மீன்களையும் பறிமுதல் செய்தனர். இதனால் பல ஆயிரம் செலவு செய்து மீன்பிடிக்க சென்ற இராமேசுவரம் மீனவர்கள் சிங்களக் கடற்படையினர் தாக்குதல் காரணமாக மீன்பிடிக்க முடியாமல் லேசான காயங் களுடன் அங்கிருந்து புறப்பட்டனர்.

சிறீலங்கா சிங்களக் கடற்படையின் தாக்குதலால் ஒவ்வொரு படகுக்கும் பல ஆயிரம் இழப்புடன் இன்று காலை பாதியில் கரை திரும்பினர். ஏற்கனவே சிறைபிடித்த மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் விடுவிக்க கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மீனவர்கள் மீது சிறீலங்கா கடற்படையினர் மீன்பிடிக்க விடாமல் தாக்கி விரட்டியடிப்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் செயலாக இருக்கிறது என்று மீனவர்கள் வேதனையுடன் கூறினர். வாளிகள் கைது செய்யப்பட வில்லை என்று கூறினார்.

www.sangathamil.ca

# தமிழ்நாட்டில் கடந்த 31 நாட்களில் 133 படுகொலைகள் நடைபெற்றுள்ளன!

## நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான்

யுலை 07, 2024

பெரம்பூர் செம்பியம் பந்தர் கார்டன் மாநகராட்சிப் பள்ளி மைதானத்தில் வைக்கப்பட்டுள்ள ஆம்ஸ்ட்ராங் உடலுக்கு நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் மலர் வணக்கம் செலுத்தினார். இதன்பின், பேசிய சீமான் கூறியதாவது:-

இப்படி ஒரு சூழல் வரும்என்று கொஞ்சம் கூட எதிர்பார்க்க வில்லை. தமிழ்நாட்டில் கடந்த 31 நாட்களில் 133 படு கொலைகள் நடைபெற்றுள்ளன.

ஒரு தேசிய கட்சியின் மாநில தலைவருக்கே பாதுகாப்பு இல்லை. சாதாரண மக்களுக்கு என்ன பாதுகாப்பு இருக் கிறது. சரணடைந்தவர்கள் தான் உண்மையான குற்றவாளிகள் என்று எப்படி நம்புவது? இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக ஆம்ஸ்ட்ராங் உடலுக்கு வணக்கம் செலுத்திய தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, மாநிலத் தலைவரை தலைநகரிலேயே கொல்ல முடியும் என்றால் கிரா மத்தில் இருப்பவர்களின் நிலையை யோசிக்க வேண்டும்? தமிழ்நாட்டில் தலித் தலைவர்களுக்கு பாதுகாப்பு வேண்டும் என்றார்.



# தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முற்றிலுமாக சீர்குலைந்து விட்டது: பாமக நிர்வாகி கொலை - பாமக நிறுவனர் இராமதாஸ் கண்டனம்!

யூலை 07, 2024

தமிழ்நாடு முழுவதும் அரசியல் கொலைகளும், கொலை முயற் சிகளும் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன. இவற் றைக் கட்டுப்படுத்த தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. இத்தகைய கொடூர நிகழ்வுகள் குறித்தெல்லாம் முத லமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு தெரியுமா? என்றே தெரிய வில்லை. அடுத்தடுத்து நடைபெற்று வரும் கொலைகளும், கொலைமுயற்சிகளும் தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு முற்றிலு மாக சீர்குலைந்து விட்டது என்பதையே காட்டுகிறது. என பாமக நிறுவனர் இராமதாஸ் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், “கடலூர் மாவட்டம் சூரப்பநாயக்கன் சாவடியைச் சேர்ந்த பாட்டாளி மக்கள் கட்சியின் நிர்வாகி சங்கர், அதே பகுதியைச் சேர்ந்த நால்வரால் கொடூரமாக வெட்டப்பட்டிருக்கிறார். பாமக நிர்வாகி மீதான இந்த கொலைவெறித் தாக்குதல் கண்டிக்கத்தக்கது. உடல் முழுவதும் காயமடைந்துள்ள நிலையில், புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள சங்கர் விரை வில் குணமடைந்து வீடு திரும்ப எனது விருப்பங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாமக நிர்வாகி மீதான தாக்குதலுக்கு காவல்துறையின் அலட் சியமும், செயலின்மையும் தான் காரணம் ஆகும். பாமக நிர் வாகி சங்கரின் சகோதரர் பிரபு என்பவர் மூன்றாண்டுகளுக்கு முன்பு அப்பகுதியைச் சேர்ந்த சிலரால் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அந்த வழக்கின் முக்கிய சாட்சியான சங்கரை நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியமளிக்கக் கூடாது என்று கொலையாளிகள் மிரட்டியுள்ளனர்.

இது குறித்து காவல் நிலையத்தில் சங்கர் தெரிவித்துள்ளார். அதன் பிறகும் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் படாததும், சங்கருக்கு பாதுகாப்பு வழங்கப்படாததும் தான் கொலை முயற்சி தாக்குதலுக்கு காரணம் ஆகும். கடலூர் வண்டிப்பாளையம் பகுதியில் அதிமுக நிர்வாகி புஷ்பநாதன் என்பவர் சில நாட்களுக்கு முன்பு தான் கொடூரமான முறையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். அதனால் ஏற்பட்ட அதிர்ச்சி மற்றும் அச்சத்திலிருந்து மக்கள் மீள்வதற்கு முன்பாகவே பா.ம.க. நிர்வாகியை கொலை செய்ய முயற்சி நடந்திருப்பது கட லூர் மாவட்ட காவல்துறையின் தோல்வியையே காட்டுகிறது.

இவ்வளவுக்குப் பிறகும் காவல்துறை அதன் தவறை ஒப்புக் கொள்ளாமல், கொலைமுயற்சிக்கு ஆளான சங்கரும், அவரை கொலை செய்ய முயன்றவர்களும் வன்னியர்கள் தான் என்று செய்திக்குறிப்பு வெளியிட்டு இந்த வழக்கின் தீவிரத்தை நீர்த்துப் போகச் செய்ய காவல்துறை முயல்வது அருவருக்கத்தக்க செய லாகும்.




சென்னையில் தொடங்கி நெல்லை வரை தமிழ்நாடு முழுவதும் அரசியல் கொலைகளும், கொலை முயற்சிகளும் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இத்தகைய கொடூர நிகழ்வுகள் குறித்தெல்லாம் முதலமைச்சர் மு.க.ஸ்டா லினுக்கு தெரியுமா? என்றே தெரியவில்லை. அடுத்தடுத்து நடைபெற்று வரும் கொலைகளும், கொலைமுயற்சிகளும் தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு முற்றிலுமாக சீர்குலைந்து விட்டது என்பதையே காட்டுகிறது.

தமிழக அரசும், காவல்துறையுன் இனியும் உறங்கிக் கொண் டிருக்காமல் தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கை பாதுகாக்க நட வடிக்கை எடுக்க வேண்டும். சங்கரை கொலை செய்ய முயன் றவர்களுக்கு சட்டப்படி கடுமையான தண்டனை பெற்றுத் தர வும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

# “கச்சத்தீவு பகுதியில் மீன்பிடிக்க அனுமதி தேவை” மத்திய மீன்வளத்துறை அமைச்சரிடம் தமிழக மீனவர்கள் கோரிக்கை!

யுலை 13, 2024

“இந்திய அரசும், இலங்கை அரசும் பேச்சுவார்த்தை நடத்தி கச்சத்தீவு பகுதியில் குத்தகை அடிப்படையில் தமிழக மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும்” என மத்திய மீன்வளத் துறை அமைச்சரிடம் விசைப்படகு மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர்.




மதுரையில் நடைபெற்ற தேசிய மீன் விவசாயிகள் கருத்தரங் கில் மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் பங்கேற்றார். அதன்பின் இன்று இராமேசுவரம் வந்த மத்திய மீன்வளத்துறை அமைச்சர், இராமேசுவரம் இராமநாத சுவாமி கோயிலில் சுவாமி தரிசனம் செய்தார். தொடர்ந்து தனுஷ்கோடி சென்று புயலால் அழிந்த நினைவுச் சின்னங்களையும், அரிச்சல் முனை கடற்கரைக்கு சென்று பார்வையிட்டார்.

அதன்பின் இராமேசுவரம் தனியார் தங்கும் விடுதியில் மத்திய அமைச்சரை, பாரம்பரிய இந்திய மீனவர் நலச்சங்க நிர் வாகிகள் சேசுராஜா, எமரிட், சகாயம் உள்ளிட்ட மீனவ சங்க நிர்வாகிகள் சந்தித்து, இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களையும், சிறைபிடிக்கப்பட்ட படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கச்சத்தீவு பகுதியில் மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும் என மனு அளித்தனர்.

அந்த மனுவில் கூறியிருப்பதாவது, “இராமநாதபுரம், புதக் கோட்டை, தஞ்சாவூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விசைப் படகுகள் பராம்பரியமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வரு கின்றனர். ஆயிரக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரமாக மீன்பிடித்தொழில் உள்ளது. பாக்ஜலசந்தி பகுதியில் மீன் பிடிக்கும் போது, இந்திய, இலங்கை கடல் எல்லைகள் அரு கருகே இருப்பது தெரியாமல் மீனவர்கள் எல்லை தாண்டிச் சென்று விடுகின்றனர்.

அப்போது இலங்கை கடற்படை தமிழக விசைப் படகுகளையும், மீனவர்களையும் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கைது செய்து சிறையில் அடைக்கிறது. மேலும் விசைப்படகுகள், வலைகளை பறிமுதல் செய்கிறது. மத்திய அரசு தலையீட்டால் மீனவர்கள் விடுவிக்கப்படுகின்றனர். ஆனால் படகு ஓட்டு நர்களை விடுவிக்காமல் 6 மாதம் முதல் 2 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதித்து இலங்கை நீதிமன்றம் உத்தர விடுகிறது.

ரூ.30 இலட்சம் முதல் ரூ.80 இலட்சம் வரையிலான விசைப் படகை பறிமுதல் செய்வதால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. கடந்த 2018 முதல் இலங்கை அரசால் 160 விசைப் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 5 மீனவர் களுக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. தற்போது ஜூன்



15 முதல் ஜூலை 11 வரை தமிழக மீனவர்கள் 74 பேர் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட் டுள்ளனர்.

எனவே பாரம்பரிய கச்சத்தீவு பகுதியில் வாரத்தில் 3 நாட்கள் குத்தகை அடிப்படையில் மீன்பிடிக்க மத்திய அரசும், இலங்கை அரசும் பேச்சுவார்த்தை நடத்தி அனுமதித்தால் தமிழக மீனவர் களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும்.

மேலும் 2021 முதல் 2023 வரை 15 விசைப்படகுகள் இலங்கை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளன. ஒன்றரை ஆண்டுகளாக மீட்புக்குழுவினர் சென்று மீட்டு வர மத்திய அரசின் அனுமதி கிடைக்கவில்லை. எனவே மீட்புக்குழுவினர் சென்று மீட்டு வர அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்” என மனுவில் கூறப்பட்டுள்ளது.

# உலக செய்திகள்

## "இசுரவேல் சிறைகளில் பாலஸ்தீன கைதிகள் இரவு, பகலாக சித்திரவதை"

### மருத்துவர் முஹம்மது அபு சல்மியா

யூலை 02, 2024

பாலஸ்தீன கைதிகள் இசுரவேல் சிறைகளில் இரவு, பகல் பாராது சித்திரவதை செய்யப்படுகிறார்கள் என்று அல்-ஷிஃபா மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் முஹம்மது அபு சல்மியா தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு அக்டோபர் 7 முதல் காசா மீதான இசுரவேலின் போரில் 37,900 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 80,060 பேர் காயமடைந்துள்ளனர். ஹமாஸ் தலைமையிலான தாக்குதல்களால் இசுரவேலில் இறந்தவர்களின் எண்ணிக்கை 1,139 என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் பல மக்கள் காசாவில் இன்னும் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பாலஸ்தீன கைதிகள் இசுரவேலின் சிறைகளில் பகல், இரவு பாராது சித்ரவதை செய்யப்படுகிறார்கள் என்று அல்-ஷிஃபா மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் முஹம்மது அபு சல்மியா தெரிவித்துள்ளார். இவர் எட்டு மாத காவலில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார். காசா மீதான இசுரவேலின் போர் தொடங்கியதில் இருந்து கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை 153 ஆக அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.

அல்-ஷிஃபா மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் முஹம்மது அபு சல்மியா இசுரவேலிய சிறையில் இருந்த தனது அனுபவத்தை பகிர்ந்துள்ளார். அவர் மேலும் கூறுகையில், "பல கைதிகள் விசாரணை அறைகளில் கொல்லப்பட்டனர். இசுரவேலிய மருத்துவர்களும், செவிலியர்களும் பாலஸ்தீன கைதிகளை அடித்து சித்ரவதை செய்கின்றனர் மற்றும் கைதிகளின் உடல்களை உயிரற்ற பொருட்களைப் போல நடத்துகிறார்கள்.



உணவு மறுக்கப்பட்ட காரணத்தால், ஒவ்வொரு கைதியும் சுமார் 30 கிலோ எடையை இழந்தனர், நாங்கள் கடுமையான சித்ரவதைக்கு உள்ளானோம். இரண்டு மாதங்களாகவே, கைதிகள் யாரும் ஒரு நாளைக்கு ஒரு ரொட்டிக்கு மேல் சாப்பிடவில்லை" என உருக்கமாக தெரிவித்துள்ளார்.

## அமைதியான முறையில் ஒன்றுகூடும் உரிமையைப் பாதிக்கக்கூடிய புதிய சட்டங்கள் சிறீலங்கா உள்ளிட்ட நாடகளில் உருவாக்கம்!!

யூலை 03, 2024

2023 ஜனவரி முதல் 2024 ஜனவரி வரையான ஒரு வருட காலத்தில் சிறீலங்கா உள்ளடங்கலாக பல்வேறு நாடுகளில் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமையைப் பாதிக்கக்கூடிய வகையிலும், அதனை மட்டுப்படுத்தக்கூடிய விதத்திலும் சட்டங்களும், வழிகாட்டல்களும் உருவாக்கப் பட்டிருப்பதாக அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமை தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் க்ளெமென்ற் நியலெற்றொஸி வோல் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 56 ஆவது கூட்டத்தொடர் அமர்வுகள் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

அதன்படி இக்கூட்டத்தொடரில் அமைதியான முறையில் ஒன்றுகூடும் சுதந்திரத்துக்கான உரிமை தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் க்ளெமென்ற் நியலெற்றொஸி வோலினால் உலகளாவிய ரீதியில் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தின் மீதான ஒடுக்குமுறைகள் மற்றும் பரிந்துரைகளை உள்ளடக்கிய 21 பக்க அறிக்கை கடந்த வாரம் சமர்ப்பிக்கப்பட்டது.

உலகளாவிய ரீதியில் சிவில் சமூக இடைவெளி மீது நிகழ்த்தப்படும் தாக்குதல்களையும், அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமைக்கு எதிராக விடுக்கப்படும் அச்சுறுத்தல்களையும் தடுப்பதற்கு அவசியமான உடனடி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குச் சகல தரப்பினரையும் ஒன்றிணையுமாறு க்ளெமென்ற் நியலெற்றொஸி வோல் அவ்வறிக்கையில் அறைகூவல் விடுத்துள்ளார்.

அதேபோன்று சர்வதேச மற்றும் பிராந்திய மனித உரிமைகள் சட்டங்களின் கீழும், பெரும்பாலான நாடுகளின் அரசியலமைப்புக்களின் ஊடாகவும் அமைதியான முறையில் ஒன்றுகூடும் சுதந்திரத்துக்கான உரிமை பாதுகாக்கப்பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டியுள்ள அவர், இவ்வுரிமையானது ஜனநாயகத்தின் முக்கிய கூறாகவும், சிவில், அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாசார உரிமைகளை வலுப்படுத்துவதற்கான உந்துசக்தியாகவும் திகழ்கிறது எனவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை 2023 ஜனவரி முதல் 2024 ஜனவரி வரையான 12 மாதகாலப்பகுதியில் அங்கோலா, பொஸ்னியா, ஹேர்ஸெகோவினா, சீனா, கிர்கிஸ்தான், நிகரகுவா, ரஷ்யா, சிறீலங்கா, சுவீடன், வெனிசூலா மற்றும் சிம்பாவே ஆகிய நாடுகளில் அமைதியான முறையில் ஒன்றுகூடும் சுதந்திரத்துக்கான உரிமையை பாதிக்கக்கூடிய வகையிலும், அதனை மட்டுப்படுத்தக்கூடிய விதத்திலும் முன்மொழியப்பட்ட மற்றும் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் தொடர்பில் தனியாகவோ அல்லது கூட்டாகவோ 26 அறிக்கைகள் மற்றும் கடிதங்களை வெளியிட்டிருப்பதாகவும் விசேட அறிக்கையாளர் க்ளெமென்ற் நியலெற்றொஸி வோல் குறிப்பிட்டுள்ளார்.

'உலகளாவிய ரீதியில் அநேக நாடுகள் ஒன்றுகூடுவதற்கான உரிமையை மட்டுப்படுத்தக்கூடிய சட்ட உருவாக்கங்களையும், வரையறை விதிப்புக்களையும் தீவிரப்படுத்தி வருகின்றன. இத்தகைய மட்டுப்பாடுகள் அதற்குரிய பிரத்தியேக சட்டங்கள் வடிவிலோ அல்லது குற்றவியல் சட்டம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் உள்ளடங்கலாக நடைமுறையில் உள்ள சட்டங்களில் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் மூலமோ விதிக்கப்படுகின்றன' என தனது விரிவான அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ள க்ளெமென்ற் நியலெற்றொஸி வோல், உலகளாவிய ரீதியில் அமைதியான முறையில் ஒன்றுகூடும் சுதந்திரத்துக்கான உரிமையை உறுதிப்படுத்துவதை இலக்காகக்கொண்டு அரசுகளும், ஏனைய தொடர்புடைய தரப்பினரும் முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றிய பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளார்.

குறிப்பாக சிவில் இடைவெளி மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களைப் பாதுகாப்பதானது தற்கால சவால்களைக் கையாள்வதில் சிவில் சமூகத்தின் வகிபாகத்தை மேம்படுத்துவதற்கு இன்றியமையாததாகும் எனவும், அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமைக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய எந்தவொரு நடவடிக்கையையும் உலகநாடுகளின் அரசாங்கங்கள் முன்னெடுக்கக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# பிரித்தானியாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆட்சி மாற்றம்: பாராளுமன்றத்திற்கு முதல் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவு!

யூலை 05, 2024

இன்று 5 ஜூலை 2024 அன்று பிரித்தானிய பாராளுமன்றத்திற்கு முதல் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டார், இது ஈழத் தமிழர்கள் அனைவருக்கும் ஒரு வரலாற்று தருணம். ஸ்ட்ராட்ஃபோர்ட் மற்றும் வோவ் எம்.பி.யான உமா குமரனுக்கு பலரும் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.



பிரித்தானியாவில் நேற்று இடம்பெற்ற பொதுத் தேர்தலில் 650 தொகுதிகளிலுள்ள 40,000க்கும் அதிகமான வாக்களிப்பு நிலையங்களில் மக்கள் வாக்களித்துள்ளனர்.

தொழிற்கட்சி பெரும்பாண்மைக்கு 326 இடங்கள் தேவை என்ற நிலையில் அவர்கள் 411 இடங்களில் வெற்றி பெற்றதன் மூலம் அவர்கள் ஆட்சி அமைக்கின்றனர்.

தொழிற்கட்சியின் தலைவர் சர் கெய்ர் ஸ்டார்மர் பிரதமராகப் பதவியேற்கிறார்.

ஆளும் கட்சியான கொன்சர்வேடிவ் கட்சி (பழமைவாதி) 120 இடங்களில் வெற்றிபெற்று படுதோல்வியடைந்துள்ளனர். கொன்சர்வேடிவ் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

லிபரல் டெமோகிரட் 71 இடங்களில் வெற்றி பெற்று மூன்றாவது இடத்தில் உள்ளது.

ஸ்கொட்டிஸ் நைசனல் பார்ட்டி 9 இடங்களில் வெற்றிபெற்று நான்காவது இடத்தில் உள்ளது.

சின்பெய்ன் 7 இடங்களில் வெற்றிபெற்று ஐந்தாவது இடத்தில் உள்ளது.




இன்டிபென்டன் 5 இடங்களில் வெற்றிபெற்று ஆறாவது இடத்தில் உள்ளது.

ரீபோர்ம் யூகே 4 இடங்களில் பெற்றிபெற்றது ஏழாவது இடத்தில் உள்ளது.

கிறீன் 4 இடங்களில் வெற்றிபெற்ற எட்டாவது இடத்தில் உள்ளது.

# ஈரானின் புதிய அதிபராக டாக்டர் பெசேஷ்கியன் வெற்றி பெற்றார்!

யூலை 06, 2024

ஈரானின் புதிய அதிபராக சீர்திருத்தவாதியான மசூத் பெசெஷ்கியன் தனது கடும்போக்கு பழமைவாத போட்டியாளரான சயீத் ஜலிலியை தோற்கடித்து தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

எண்ணப்பட்ட 30 மில்லியனுக்கும் அதிகமான வாக்குகளில் 53.3% வாக்குகளை டாக்டர் பெசேஷ்கியன் பெற்ற பின்னர் அவருக்கு ஆதரவாக வாக்கு அறிவிக்கப்பட்டது. ஜலிலி 44.3% வாக்குகளைப் பெற்றார்.

ஜூன் 28 அன்று நடந்த தேர்தலின் முதல் சுற்றில் எந்த வேட்பாளரும் பெரும்பான்மை பெறாததை அடுத்து, 40% வாக்குகள் சரித்திர ரீதியாக குறைவாகவே பதிவாகியிருந்தன.

ஈரானின் முந்தைய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மே மாதம் ஹெலிகாப்டர் விபத்தில் கொல்லப்பட்டதை அடுத்து தேர்தல் நடத்தப்பட்டது.

சீனா, இந்தியா மற்றும் ரஷ்யாவின் தலைவர்கள் அனைவரும் டாக்டர் பெசேஷ்கியானின் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.



# சமூக நீதிக்காக குரல் கொடுப்பேன்!

## பிரித்தானியாவின் புதிய நாடாளுமன்ற உறுப்பினர் உமா குமரன்

யுலை 06, 2024

சமூக நீதிக்காக குரல் கொடுப்பேன் என பிரித்தானியாவின் புதிய நாடாளுமன்ற உறுப்பினர் உமா குமரன் தெரிவித்துள்ளார்.

தேர்தல் வெற்றி தொடர்பில் உரையாற்றிய போது அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்... தொழிற்காட்சியை தெரிவு செய்தமைக்கும் எனக்கு வாக்களித்தமைக்கும் நன்றி பாராட்டுகின்றேன் என தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினராக சேவையாற்றுவதற்கு நீங்கள் எனக்கு அளித்த சந்தர்ப்பத்தை நான் ஒரு வரப்பிரசாதமாக கருதுகின்றேன், இந்தத் தொகுதி தொழிற்கட்சியின் பிறந்த இடமாகும் என தெரிவித்துள்ளார்.

ஐக்கியம் என்ற ஓர் தொனிப்பொருளில் நாம் இன்று வெற்றியை அடைந்துள்ளோம், அதனை என்னால் பெருமிதமாக கூற முடியும் எனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நான் பூரண மாக உணர்ந்து கொண்டுள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

உங்கள் சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்து மக்களுக்கு சேவையாற்றுவேன் என குறிப்பிட்டுள்ளர்.

அனேகமானவர்கள் அரசியல் எல்லோருக்கும் பொருத்தமானது அல்ல என அறிவுரை கூறினார்கள் எனினும் நான் அதனை பொய்ப்பித்து இங்கு இன்று நிற்கின்றேன் என தெரிவித்துள்ளார்.

தொழிற்கட்சி இன்று வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை பதிவு செய்துள்ளது.

இது ஒரு ஆரம்பம் மட்டுமே கடந்த 14 ஆண்டுகளாக நாம் எதிர்நோக்கிய தோல்வியிலிருந்து மீள்வதற்கு இது ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

நான் கிழக்கு லண்டனில் பிறந்தேன், நான் ஓர் தமிழ் ஏதிலிப் பெற்றோரின் பிள்ளையாவேன் எனவும், அடக்குமுறைகள் தண்டனைகள் என்பவற்றை கடந்து வந்த அனுபவம் எமக்கு உண்டு எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே நான் எப்பொழுதும் நீதியின் பக்கம் நின்று சேவையாற்றுவேன், பிரித்தானியா இரு கரங்களிலும் எனது பெற்றோரை வரவேற்று அவர்களுடைய வாழ்க்கையை மீளக் கட்டி எழுப்ப உதவியது என குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பெறுமதிகளுக்காக நான் தொடர்ந்து போராடுவேன் என உங்களிடம் உறுதிமொழி வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.



வீடமைப்பு திட்டங்கள் சமூகநீதி போன்றவற்றிற்காக குரல் கொடுக்க தயங்க போவதில்லை என தெரிவித்துள்ளார்.

பெண்கள் பகலிலும் இரவிலும் பாதுகாப்பாக வீதிகளில் நடந்து செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் எனவும் நல்ல பாடசாலைகள் அமைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

தொழிற்கட்சி எப்பொழுதும் நாட்டை ஐக்கிய படுத்துமே தவிர பிளவுபடுத்தாது, உங்கள் பிரச்சனைகள் எனது பிரச்சனைகளாகும் உங்களது சவால்கள் எனது சவால்களாகும் என உமா குமரன் தெரிவித்துள்ளார்.

# பிரான்ஸ் நாடாளுமன்ற தேர்தலில் இடதுசாரிக் கூட்டணி வெற்றி!

யூலை 07, 2024

பிரான்ஸ் நாடாளுமன்ற தேர்தலில் இடதுசாரி கூட்டணி எதிர்பாராத வெற்றியை பெற்றுள்ளது.

தீவிரவலதுசாரி கட்சியான ஆர்எல் அதிகளவு ஆசனங்களை கைப்பறக்கூடும் என எதிர்பார்ப்பு வெளியாகியிருந்தது.

இந்த நிலையில் பிரான்சில் இடதுசாரி கூட்டணி அதிக ஆசனங்களை கைப்பற்றும் நிலையில் உள்ளதை தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

ஜனாதிபதி இமானுவேல் மக்ரோனின் கட்சி இரண்டாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

அதேசமயம் முதலாவது சுற்று தேர்தல் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றதும் அதில் தீவிரவலதுசாரிகள் அதிக ஆசனங்களை கைப்பற்றியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதன்காரணமாக பிரான்சில் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் முதல்தடவையாக தீவிரவலதுசாரிகள் ஆட்சியை கைப்பற்றலாம் என்ற அச்சநிலை உருவானது.



# ரிஷி சுனக்கின் திட்டத்தை ரத்து செய்த புதிய பிரதமர் கெயர் ஸ்டார்மர்!

யூலை 08, 2024

பிரிட்டனுக்குள் வரும் அகதிகளை ருவாண்டாவுக்கு அனுப்பும் முந்தைய பிரதமர் ரிஷி சுனக்கின் திட்டத்தை ரத்து செய்வதாக பிரிட்டனின் புதிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் அறிவித்துள்ளார்.



சமீப ஆண்டுகளில் பல்வேறு வெளிநாடுகளில் இருந்து சிறிய படகு மூலம் இங்கிலாந்து நாட்டிற்குள் அதிகமானோர் வரத் தொடங்கினர்.

2021-க்கும் முன்னதாக நான்கு ஆண்டுகளில் வெறும் 299 பேர் மட்டுமே சட்டவிரோதமாக குடியேறிய நிலையில் 2022-ம் ஆண்டு 45774 பேராக அது உயர்ந்தது. இதை கட்டுப்படுத்த முன்னாள் இங்கிலாந்து பிரதமரான ரிஷி சுனக் புதிய சட்டம் கொண்டு ஒன்றை கொண்டு வந்தார்.

இந்த புதிய சட்டத்தின்படி சட்டவிரோதமாக இங்கிலாந்திற்குள் குடிபெயர்ந்தவர்கள் விமானம் மூலம் கிழக்கு ஆப்பிரிக்க நாடான ருவாண்டா நாட்டிற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

இந்நிலையில், சட்ட விரோதமாகப் பிரிட்டனுக்குள் வரும் அகதிகளை ருவாண்டாவுக்கு அனுப்பும் முந்தைய பிரதமர் ரிஷி சுனக்கின் திட்டத்தை ரத்து செய்வதாக பிரிட்டனின் புதிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் அறிவித்துள்ளார்.




# 2080ஆம் ஆண்டளவில் உலக மக்கள் தொகை 1000 கோடியை எட்டும்! ஐ.நா.

யூலை 12, 2024

எதிர்வரும் 2080ஆம் ஆண்டளவில் உலக மக்கள் தொகை 1030 கோடியை எட்டும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.


இவ் விடயம் ஐ.நா சபையினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது உலக மக்கள் தொகை 820 கோடியாக பதிவாகியுள்ளது.

இது 2080ஆம் ஆண்டாகும் போது 1030 கோடியை எட்டும் என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2080ஆம் ஆண்டில் உலக சனத் தொகை உச்சத்தை அடைந்து, அதன் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும் என்று குறிப்பிட்டுள்ளது.

தற்போது பிறக்கும் குழந்தைகள் சராசரியாக 73.3 வயது வரை உயிர் வாழ்வார்கள் என்று ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது.




# உலகின் நிலத்தடி நீருக்கும் வந்தது ஆபத்து!

யூலை 12, 2024

உலகளவில் நிலத்தடி நீரின் வெப்ப நிலை அதிகரிக்கத் தொடங்கியுள்ளதாக ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் 2.1 முதல் 3.5 டிகிரி செல்சியஸ் வரை நிலத்தடி நீரின் வெப்ப நிலை அதிகரிக்கக்கூடும் என்று அவர்கள் நடந்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் உள்ள நியூகேஸ்டில் மற்றும் சார்லஸ் டார்வின் பலக்லைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் உருவாக்கிய உலகளாவிய நிலத்தடி நீர் வெப்பநிலை மாதிரி மூலம் நடந்தப்பட்ட ஆய்வில் இது தெரியவந்துள்ளது. முக்கியமாக மத்திய ரஷியா, வடக்கு சீனா மற்றும் வட அமெரிக்கா, அமேசான் மழைக்காடுகள் ஆகிய பகுதிகளில் அதிகப்படியாக நிலத்தடி நீர் வெப்ப நிலை அதிகரிக்கக்கூடும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

உலகில் உயிர்வாழ்தலுக்கு நிலத்தடி நீர் இன்றியமையாததாக உள்ளது. வெப்பநிலை அதிகரிப்பு நிலத்தடி நீரை சார்ந்துள்ள சுற்றுச்சூழல் அமைப்புகளை கடுமையாக பாதிக்கக்கூடும்.

நிலத்தடி நீர் முக்கிய குடிநீர் ஆதாரமாக பயன்பட்டு வரும் நிலையில் இந்த வெப்ப நிலை அதிகரிப்பு அதன் பாதுகாப்பு தன்மையை சீர்குலைக்கக்கூடும். 2099 வாக்கில் உலகம் முழுவதும் உள்ள சுமார் 59 முதல் 588 மில்லியன் மக்கள் அருந்தும் நிலத்தடி நீர் அதிக வெப்பநிலை கொண்டதாக மாறியிருக்கும். அதிக வெப்பம் கொண்ட நிலத்தடி நீரில் நோய்க் கிருமிகள் வளரும் சாத்தியக்கூறுகளும் இருப்பதால் மனிதர் களின் ஆரொக்கியத்திற்கு கேடாக அமையும். ஏற்கனவே குடிநீர் தட்டுப்பாடு நிலவி வரும் பகுதிகளில் இந்த பாதிப்பு அதிகமாக இருக்கும். நிலத்தடி நீரை சார்ந்துள்ள விவசாயம், உற்பத்தி ஆகியவை பாதிக்கப்படும்.

அதிக வெப்பநிலை கொண்ட நீரில் கரைந்தநிலை ஆக்சிஜன் குறைவாக இருக்கும் என்பதால் நிலத்தடி நீரை ஆதாரமாக கொண்டுள்ள நதிகளில் உள்ள மீன்கள் உயிர்வாழமுடியாது. இதுபோன்ற பல்வேறு ஆபத்துகளை உள்ளடக்கிய நிலத்தடி நீர் வெப்ப நிலை அதிகரிப்பு புவி வெப்பமயமாதல் மற்றும் கால நிலை மாற்ற விளைவுகளை மனிதர்கள் தீவிரமானதாக எடுத்துக்கொள்ள வேண்டிய நேரம் இது என்பதை உணர்த் துகிறது.



# ஸ்காட்லாந்து கடற்கரையில் 77 பைலட் திமிங்கலங்கள் கரை ஒதுங்கி இறந்தன!

யுலை 13, 2024

ஸ்காட்லாந்தின் வடக்கு கடற்கரையில் உள்ள ஒரு தீவில் 65 பைலட் திமிங்கலங்கள் நேற்று முன்நாள் கரை ஒதுங்கி இறந்துள்ளதாக தொண்டு நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் பிரிட்டனில் சமீபத்திய காலங்களில் ஏற்பட்ட மிகப் பெரிய இழப்பாகும். ஸ்காட்லாந்தின் ஓர்க்னி தீவுக்கூட்டத்தின் சாண்டே தீவில், பிரிட்டிஷ் டைவர்ஸ் மரைன் லைஃப் ரெஸ்க்யூ (BDMLR) அமைப்பால், கடந்த வியாழக்கிழமை அன்று கரையோரத்தில் 77 பைலட் திமிங்கலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றில் 65 ஏற்கனவே இறந்துவிட்டன.

மீதமுள்ள 12 பைலட் திமிங்கலங்கள் உயிருடன் இருந்ததாக கூறப்படுகிறது. திமிங்கலங்கள் பல காரணங்களுக்காக கரையில் ஒதுங்குகின்றன. அதாவது அவை தங்கள் வழியை மறந்துவிட்டாலும் அல்லது அலைகளால் சிக்கிக்கொண்டாலும் கரை ஒதுங்கும். இதனிடையே இந்த நிகழ்வுக்கு பின்னால் எந்த ஒரு உறுதியான காரணமும் இல்லை என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

முன்னதாக ஒரு வருடத்திற்கு முன்பு இதேபோன்ற நிகழ்வு, பிரதான நிலப்பகுதியின் மேற்கில் அமைந்துள்ள மற்றொரு ஸ்காட்டிஷ் தீவான லூயிஸில் 55 திமிங்கலங்கள் இறந்து கிடந்தன என்பது குறிப்பிடத்தக்கது.









சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# "மக்கள் சமூகம் விழிப்படையும்போது விடுதலை சாத்தியமாகிறது"

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**




தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் மாபெரும் விடுதலைச் சக்தியாக எமது இயக்கம் வளர்ச்சி கண்டிருக்கிறது. ஆயுதப் போராட்ட களத்திலும் எமது விடுதலை வீரர்களே முன்னணிப்படையாக விளங்குகின்றனர். அரசியல் இலட்சியத்திலும் எமது இயக்கமே தெளிவுடனும் உறுதியுடனும் செயற்படுகிறது. வெகுசன அரசங்கிலும் மிகப் பிரபல்யம் பெற்று மக்களின் நல்லாதரவு பெற்றிருப்பதும் எமது விடுதலை இயக்கமே. எமது இயக்கத்தின் இந்த மகத்தான வளர்ச்சிகண்டு பொறாமையும் எரிச்சலும் கொண்ட தீய சக்திகள் எமது இயக்கத்திற்கு மாசு கற்பிக்கும் வகையில் மிகவும் கீழ்த்தரமான, விசமத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றன. மக்களிடமிருந்து எம்மை அந்நியமாக்கும் நோக்குடன் எமக்கு எதிராக மிகவும் அபாண்டமான பொய்ப் பிரச்சாரத்தை இவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். மக்களின் விடுதலை என்ற இலட்சியத்திற்காக இவர்கள் இயங்கவில்லை. எமது விடுதலை இயக்கத்தை அழித்துவிடும் ஒரே நோக்கத்திற்காகவே இந்த சக்திகள் செயற்படுகின்றன. இவர்களின் சூத்திரதார நட வடிக்கைகளிலும், பொய்ப் பிரச்சாரங்களிலும் ஏமாந்து போகாது விழிப்புடன் இருக்க வேண்டுமேன மக்களை நாம் கேட்டுக் கொள்கிறோம்.

ஒடுக்கப்படும் மக்கள் சமூகம் விழிப்படைந்து, புரட்சிகரப் பிரக்ஞை பெற்று, தேசியப் போராட்டத்தில் முழுமையாகப் பங்கு கொள்ளும் பொழுதே விடுதலை சாத்தியமாகிறது. மக்கள் மத்தியில் விரக்தியும் சோர்வும், குழப்பமும், நம்பிக்கையின்மையும் தோன்றும் பொழுது ஒரு தேசத்தின் போராட்டசக்தி வலுவிழக்கின்றது. இந்த அரசயில் உண்மையை விடுதலைக்கு விரோதமான சக்திகள் நன்கறிவர். ஆகவேதான் மக்களின் நம்பிக் கையைத் தளர்த்தி , விடுதலைப் பற்றை மழுங்கடித்து, உறுதிப்பாட்டை உடைத்து, உண்மையான விடுதலை இயக்கத்திலிருந்து மக்களை அந்நியப்படுத்த இந்த சதிகார சக்திகள் செயற்படுகின்றன.

*(தேசியத் தலைவரின் "எமது மகக்ளின் விடுதலைக்காக"... கருத்துத் தொகுப்பு நூலிலிருந்து)*


மரகதம்
வைரம்
முத்து
புஷ்பராகம்
மாணிக்கம்
பவளம்
வைடூரியம்
நீலம்
கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லக்ஷ்மி பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


PSP
PSP MOTORS
QUALITY USED CARS
Dealers in all kinds of used Motor Vehicles
பல வருடம் அனுபவம் கொண்ட நம்பிக்கையான ஸ்தாபனம்
தரமான பாவித்த ஜப்பானிய வாகனங்கள்
நியாயமான விலையில் கிடைக்கும்
WE'LL BUY YOUR USED VEHICLE EVEN IF YOU DON'T WANT TO BUY OURS!
T. Udayakumar
PSP MOTORS 416.871.0450
30 Old Kennedy Road Unit B Markham ON. L3R 0L6
www.pspmotors.com I info@pspmotors.com


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


Build Your Dream Home
SABESAN
உங்கள் அனைத்து வீட்டு வேலைகளிற்கும் அழையுங்கள்
We build 10,000 Sq.Ft (Minimum) warehouse from $139.00 Per Sq.Ft.
400 Kilometre per hour Wind resistance
Termite Proof
Compare Traditional Building Energy Savings
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
உங்கள் வீட்டுடன் இணைந்தபடி மேலதிக இருப்பிட வசதியை ஏற்படுத்த விரும்புகிறீர்களா? அழையுங்கள்
Sabesan
விருது பெற்ற தொழிற்துறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com



# உன் பூமி அழைக்கின்றது...!

“அன்பு நண்பா,
அதிகாலை கனவுகளுடன் - நீ
அழகு பார்த்த நிலத்தை,
தன் அகோரப்பசிக்கு இரையாக்கி...
யார் அங்கே அசைந்தவன்
அன்னிய அரக்கன்?

காற்றுடன் கதைபேசி – நீ
கைவீசி நடந்த போது
காலை வணக்கம் சொன்ன உன்
சோலை மரங்களை அழித்து
சுடுகாடாக்கி...
யார் அவன் போனவன்
பொல்லாத விரோதி?

சந்தோஷக் கனவுகளுடன் - எம்
சந்ததி வாழ்ந்த
சந்து பொந்தெல்லாம்
இரத்தமும் சகதியும் இறைத்தது யார்?
ஓ நண்பா...
எப்போதாவது கற்களில் முட்டிக் கொண்டு
கதறிய காலங்களை தவிர – நாம்
காயங்களை காணாதவர்கள்
ஆனால் கண்டோம்
பீறிடும் இரத்தங்களை
பீரங்கி வேட்டுக்கள்
சீறிடும் போது கண்டோம்!
எரிகுண்ட வீச்சில்
எம் மக்கள்
கரியுண்ட காட்சியை – எம்
இருகண்ணால் கண்டோம்!
ஆம்,
பொன் மாலை நேரங்களில்
கண்பார்த்த கருஞ்சிவப்பை – எம்
மண் மீது ஊர்மக்கள்
உடல் சிதறிய போது
இரத்தச் சிவப்பாய் கண்டோம்!

இப்படித்தான் ஒருநாளில்
இடிவிழுந்த போது – ஓர்
அழகான தேசத்தை விட்டு
அகதியான என் நண்பனே
தோற்றுப்போனது நீயும் நானும் தான்
நமது தேசமல்ல
நாம் அகரத்தை ஆரம்பித்த
அழகான மண்ணை – அந்த
அன்னிய அரக்கன்
அழிக்கவிடுவதோ?...
அங்கே பார்
மண்ணுக்காய் உயிர்கொடுக்கும்
நம் மகாத்மாக்களை
மக்களுக்காக தம் உடல் சிதறும்
மகத்தானவரை
மண் விடிவிற்காய் விதையான
மாவீரர்களை பார்!...

எம் பூமிக்கு விடிவு தரும்
புதிய சூரியர்களை பார் நண்பா!

யார் அங்கே!
மேற்கின் எல்லையை
மெதுவாய் இழுத்து மூடுங்கள்
இவர்கள் மாலையில் மறையும்
வேளைச் சூரியரல்ல – எம்
மண்ணுக்காய் வாழும்
காலச்சூரியர்!

மண்ணின் விடுதலைக்கு - இந்த
மறவர் ஈவது
விஞ்ஞான யுகத்தில்
தொட்டதும் படபடக்கும்
வெடியாயுதமல்ல நண்பா
விந்தையோ என
இவ்வுலகே வியக்கும்
விலைதிப்பில்லா
உயர் ஆயுதம்!
அந்த உன்னத் கொடையினால்
உடல் சிலிர்த்து – உன்
இனிய நிலம் மெல்ல உயிர்க்கிறது.

மரணத்தை உயிர்ப்பித்த
மாவீர மறவரினால்
நோவினை மறந்து பூமி
மெல்ல நிமிர்கிறது.

வரண்ட வயல்வெளிகள்
திரண்டு பூக்க
பட்டுப்போனவை அனைத்தும்
மொட்டு விட
எங்கள் நிலம் விடிகிறது!
ஓ நண்பா,
பூக்களையே கனவுகாணும் - அந்த
புதியயுகம் பிறக்கின்றது.

எங்கள் தேசத்தெருக்களில் எல்லாம்
தேசியகீதம் ஒலிக்கிறது
அந்த சுதந்திர இசையில்
இன்ப சுகம் பறிக்கிறது
தமிழீழப் பிரகடனம் உன்
தாய் மண்ணில் நடக்கிறது!

விடுதலை கவி ஓங்கி ஒலிக்கிறது
அந்த விண்ணுக்கே காதுகள் சிலிர்க்கிறது
அதோ
வீரதாகத்துடன்
மார்பை நிமிர்த்தி எங்கள்
புலிக்கொடி பறக்கிறது
நண்பா உன்னை அகதி என்றவன்
காது அலற
உன் முகவரியை முழக்கமிடு!
ஓடி வா நண்பனே
உற்றமும் சுற்றமும் நீ
ஓடி விளையாடிய
முற்றமும்
நலமா என்று
சுகம் கேட்கலாம்
உன் வெந்த இதயத்தின்
வேதனைக் கதை கேட்ட
வெள்ளை நண்பனுக்கு – உன்
சொந்த முகவரியைத் தந்து
புறப்படு நண்பா
உன்
பூமி அழைக்கின்றது.

நன்றி: சாந்தினி சந்திரன் - சூரியப் புதல்வர்கள் 1995




# 1983 ஆடிப்படுகொலை

**அந்த ஒரு கிழமையில்
3,000 சாதாரணத் தமிழர்கள் கொல்லப்பட்டனர்.
அவர்களின் உடமைகள், வீடுகள் சூறையாடப்பட்டு
தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.**



இவ்வருடம் தமிழ் மக்களிடம் அவர்கட்கு 1983 இல் நடந்த வற்றிற்கும் அதைத் தொடர்ந்து 25 வருடங்களாய் அர்கள் மேல் திணிக்கப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கும் நான் மன்னிப்புக் கோருகின்றேன்.

தமிழ் மக்களின் தொண்டைகளை நான் கிழிக்கவில்லை. அல்லது அவர்கட்கு மருந்து ஏற்றப்படும் குழாய்களைப் பிடுங்கி எறியவில்லை. மற்றும் தமிழ் நோயாளிகளை மருத்துவ மனையிலிருந்து துரத்தவுமில்லை. எனினும் இதர என் இனத்தைச் சார்ந்த சிங்களவர் செய்த காட்டுமிராண்டித்தனமான கொடுமைகளால் என் மனதில் குற்ற உணர்வும் அவமானமும் உருவாகியுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டவர் புரிந்து ஒரோயொரு "குற்றம்" யாதெனில் அவர்கள் தமிழராய் பிறந்ததே.

முதன் முதலாக நான் ஒரு சிங்களவன் என்று கூறிக்கொள்ள வெட்கினேன். ஒரு முழு இனமெ சர்வாதிகாரி ஜே.ஆர். ஜெயவர்த்தனவுடன் இருந்த எசமானர்களும் அவர்களால் வழிநடத்தப்பட்ட காடையர்களும் மஞ்சள் அங்கி அணிந்த காடையர்களும் நடந்துகொண்ட முறையால் ஒரு இனமே வெட்கத்திற்குள்ளானது. உலகத்திற்குச் சமாதானத்தைப் போதித்த புத்த பகவானின் புனிதத்தை மாசுபடுத்தினர் இந்த மஞ்சள் அங்கி அணிந்த காடையர்கள். (எனது தாய் ஒரு பக்திநிறைந்த பௌத்தர் அவரின் தந்தையார் பௌத்த போதனையாளரும் பௌத்தம் பற்றிய பல புத்தகங்களும் எழுதியுள்ளார்)


இந்த ஒரு கிழமையில் 3,000 சாதாரணத் தமிழர்கள் கொல்லப்பட்டனர். அவர்களின் உடமைகள் வீடுகள் சூறையாடப்பட்டு தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. ஒரு சில துணிந்த சிங்களவரின் பாதுகாப்பு இல்லாவிட்டால் மேலும் பலர் கொல்லப்பட்டிருப்பார்கள். தங்கள் உயிர்களையும், உறுப்புக்களையும் பணயம் வைத்துச் சில சிங்களவர் பல தமிழர்களுக்குப் பாதுகாப்பளித்துத் தமிழர்களைக் காப்பற்றினர். அவர்களில் பலரும் தமிழரிடம் மன்னிப்புக் கோர இருப்பார்கள். ஆனால் அதிலும் பார்க்கத் தம் உயிரைப் பணயம் வைத்துத் தமிழர் சிலரைக் காப்பாற்றியதே பெரிய மன்னிப்புக் கோரலாகும்.

## புதினங்கள்:

இந்த மனிதப் படுகொலைகள் நடந்த போது நான் அவுஸ்திரேலியாவில் இருந்தேன். அங்கு நடந்த அட்டூழியங்களைத் தொலைக்காட்சியில் தான் பார்க்க என்னால் முடிந்தது. அவற்றினை நான் பெறுப்புடனும் அவநம்பிக்கையுடனும் தான் பார்க்க முடிந்தது. பௌத்த நாடு என்று கூறிக்கொள்ளும் ஒரு நாட்டில் இப்படி பல நூற்றுக்கணக்கான காட்டுமிராண்டிகள் அரசாங்கத்திற்கு உள்ளேயும் வெளியேயும் இருக்கிறார்களே என ஏக்கத்துடன் பார்த்தேன்.

எனக்கு லண்டனிலிருந்து ஒரு தொலை பேசி அழைப்பு வந்தது. அவர் சிறந்த உயர்ந்த சிங்களவரின் ஒருவர் பெயர் வண. லக்ஸ்மன் விக்கிரமசிங்க அவர் சுகயீனமாய் வைத்தியம் பெற்றுக்கொண்டு இருந்தார். தான் உடனடியாகத் தன்னுடைய (என்னுடையவும்) தமிழர்களிடம் செல்லப்போவதாகக் கூறினார். அவர் குருநாகல் புகுதி ஆயர் ஆவார். அவர் அப்படியே தன் தேக நிலையையும் பாராது சென்றார். நான் அப்படிச் செல்லவில்லையே என வருத்தமுற்றேன். எனக்கு அந்தத் துணிவு ஏற்படவில்லை.

யேசுநாதர் என்ன செய்திருப்பாரோ அதையே அவரும் நாடு முழுவதும் இருந்த அகதிகள் முகாம்கள் அனைத்திற்கும் சென்று அங்கு அவதியுறும் அல்லல்படும் மக்களுக்கு ஆறுதல் கூறி ஆதரவு வழங்கினார். அவர் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அக்கராயன் குளத்திற்குச் சென்றார். அவருடன் என் மதிப்புக்குரிய நண்பர் டாக்டர் லூதர் ஜெயசிங்கம் மற்றும் ஆதி உத்தமரான திரு. கந்தையா கந்தசாமியும் சென்றார்கள். திரு. கந்தசாமி இனங்களுக்கிடையேயான நீதி சமத்துவ இயக்கத்தைச் சார்ந்தவர். அங்குள்ள அகதிகளுடன் அளவளாவியபின் ஆயர் ஓர் அறையில் அமர்ந்து அழுதார் என அறிந்தேன். அதற்குக் காணரம் தன் உறவினர் கூட நடந்த வன்செயலில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதால் தான் என்று கூறினாராம். (அவர் ரணில் விக்கிரமசிங்கவின் மாமனாராவர். ரணில் அப்போது ஜே.ஆர். இன் அரசாங்கத்தில் ஒரு மந்திரியாக இருந்தார்) ஆயர் 1983 ஒக்ரோபர் மாதம் 23 ஆம் திகதி காலமானார். அவர் கண்ட, கேட்ட வியடங்களால் ஏற்பட்ட மன அதிர்ச்சியிலிருந்து அவரால் விடுபட முடியாது உயிரிழந்தார்.



சிறீலங்கா இரண்டு உன்னத துறவிகளைப் படைத்திருந்தது. ஒன்று ஆயர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க (தென்பகுதிச் சிங்களவர்) மற்றது ஆயர் பஸ்தியாம்பிள்ளை தியோகுப்பிள்ளை (வடபகுதித்தமிழர்).


தவத்திரு ஆயர் லக்ஸ்மன் என்னை லண்டனிலிருந்து அழைத்தபோது சிங்களவராகிய நாங்கள் தமிழரிடம் மன்னிப்புக்கோர வேண்டும் என்று கூறினார். அதை அவர் செய்தார். நான் என் தமிழ் மனைவியிடம் மன்னிப்புக் கோரினேன்.

## மன்னிப்பு:

இறுதியான மதகுருவின் கடிதத்தில் "இதயத்திலிருந்து ஓர் அழுகுரல்" என்ற தலைப்பில் 15.10.1983 பின்வருமாறு எழுதினார். "சிங்களவராகிய நாம் வெட்கப்பட வேண்டும். ஏனெனில் நடந்தவை அறத்தை மீறிய குற்றம். சிங்களவராகிய நாங்கள் சிங்களவரால் செய்யப்பட்ட அறம்மீறிய குற்றத்திற்காக வெட்கப்படுகிறோம். நாம் அக்குற்றத்தை ஒத்துக்கொள்ளுவது மட்டுமல்ல அதற்காகத் தமிழரிடம் நாம் மன்னிப்புக்கோர வேண்டும்..."

நான் தனிப்பட்ட வகையில் மன்னிப்பைக் கோரினேன். அந்த ஒரு கிழமையாய் நடந்த அக்கிரமங்கள் என்னை உறுத்திய பின் ஒரு நாள் இரவிரவாக இருந்து ஒரு நீண்ட கடிதத்தை எழுதி என் தமிழ் மனைவியிடம் கொடுத்தேன்.

"இது ஒரு தமிழருக்கு ஓர் சிங்களவர் எழுதும் மன்னிப்புக் கடிதம்" என்று எழுதி மனைவியிடம் கொடுத்துவிட்டு நான் வேலைக்குச் சென்றுவிட்டேன். நான் வீடு திரும்பியதும் என் மனைவி "நான் அதை வாசித்துவிட்டேன் அதனை நான் என்ன செய்யலாம்?" என்று கேட்டா. அதற்கு நான் அதனைக் கிழித்துப்




போடவும் என்று கூற அவ அப்படியல்ல அதனைத் தான் வைத்திருக்கப் போவதாகக் கூறினார். அக்கடிதம் பின்னர் மிக விரிவாக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டது. அதற்கான முகவுரையை நானும் என் மனைவியும் கல்விபயின்ற சர்வகலாசாலையின் விஞ்ஞானப் பகுதியின் தலைவராய்க் கடமை புரிந்த பேராசிரியர் சி. ஜே. எலியேசர் அவர்கள் எழுதியிருந்தார்கள். அதில் “சிறீலங்கா 1983 யூலைப் படுகொலை” “மறுமொழி இல்லாத கேள்விகள்” என்பன உள்ளடங்கி இருந்தன. அதில் மேலும் அப்போது ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனவையும் அவரின் மந்திரிகளையும் நடந்த தமிழர் படுகொலைகளுக்கும் அவர்களின் சொத்துடமைகளுக்கும் நன்று திட்டமிடப்பட்டு நிறைவேற்றிய அந்தக் கொடுமைகளுக்குப் பொறுப்பு எனக் கூறி இருந்தேன். யாழில் கொல்லப்பட்ட 13 படையினருக்கும் அக் கலவரத்திற்கும் எதுவித தொடர்புமில்லை.

நான் அன்று ஏன் இன்றும் சிங்கள மக்கள் தமிழர்களுக்கு ஏற்படுத்திய அழிவுக்கு மன்னிப்புக் கேட்டாலொளிய நட்புக் கலந்த சமாதானம் வரமாட்டாதென நம்புகிறேன்.

1995 இல் யாழ்ப்பாணத்தில் நடந்த படுகொலைகளுக்கு ஒவ்வொரு பிரசையும் காரணமல்ல. அதற்குச் சனாதிபதியாகவும்? பாதுகாப்பு மந்திரியாகவும், முப்படைக்கும் தளபதியாய் இருந்த சந்திரிகா குமாரதுங்கவே பொறுப்பு. தான் செய்த அக்குற்றத்திற்கு அவர் தமிழ் மக்களிடம் மன்னிப்புக்கோரியிருக்க வேண்டும்.

தமிழர்களின் படுகொலைகள் “ஒவ்வொரு பிரசையிலும்” தங்கவில்லை. பதிலாக இரு பிரமுக குடும்பங்களான எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க (அவரின் மனைவியும், மகளும்) அடுத்து ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் அவரின் வால்பிடிகளுமே காரணகர்த்தாக்களாவார். இவர்களுடன் இப்போ மேலும் இரு சாராரைச் சேர்த்துக்கொள்ளலாம். அவர்கள் இன்னும் மிகப் பயங்கரக் கொலைக்காரர்கள். அவர்கள் ராஜபக்ச சகோதரரும் அவர்களின் கையாட்களும் அவரின் மாக்சியவாதிகளும்? மற்றும் மஞ்சள் அங்கி அணிந்த கனவான்களும் ஆகம்.

### கொலைகாரரைக் கண்டுபிடித்தல்:

நாசிக்குற்றவாளிகளை வயது பாராமல் 50 வருடங்களுக்குப் பின்னரும் தேடிக்கண்டு பிடித்து தண்டனை வழங்கப்பட்டது. எனவே 1983 யூலை கலவரத்திற்குக் காரணமாய் இருந்தவர்களைத் தேடிக்கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்தப்படாது விட்டால் எதுவித நியமுமில்லை.

அதற்கு மூல கர்த்தாக்களாயிருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன, மந்திரி சிறில் மத்தியூவும் அவரின் கையாட்களும் இப்போ இறந்திருக்கலாம் அன்றி சுவடின்றி மறைந்து இருக்கலாம். ஆனால் வேறு பலர் தம் இரத்தம் தோய்ந்த கைகளுடன் வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை இலகுவாய்ப் பிடிக்கலாம். அவர்களில் ஒருவர் எல்ல குணவன்ச தேரோ ஆகம்.

இந்த மஞ்சள் அங்கி அணிந்த காடையன் 1983 ஆடிக் கலவரத்தில் முக்கிய பங்கு வகித்தவன். இந்தப் பிக்குதான் கனத்தை மயானத்தில் நின்றோரின் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பி தமிழர் வீடுகள் வியாபார ஸ்தலங்களை எரிக்க ஊன்றுகோலாக விளங்கியவன்.

அவன் பொறளையில் கொட்டா வீதியில் உள்ள தமிழர்களின் வீட்டு விபரங்களை அரசிடமிருந்து பெற்று அவ்வீடுகளைத் தெரிவு செய்து எரிக்க உதவினான். அத்துடன் தன்து மஞ்சள் அங்கியின் இடுப்பில் ஒரு கைத்துப்பாக்கியையும் செருகிய வண்ணம் கறுவாக் காட்டு காவல்துறை அலுவலகத்திற்கு வந்து தமக்கு ஊரடங்கு சட்ட நேரத்தின்போது வெளியே உலாவும் அனுமதிப் பத்திரம் தரும்படி வற்புறுத்தினான். காடையர்கள் பெட்ரோல் மண்ணெண்ணை சகிதம் சென்று பார ஊர்தியில் தானும் உடனிருந்து சென்றான். அந்தப் படம் எனக்குக் கிட்டியது. அப்படிச் சென்றுதான் தமிழர்களைக் காட்டி எரிக்கச் செய்தான்.

இவன் இப்போ எங்கே? அப்போ அவன் பண்டாரநாயக்க நினைவு சர்வதேச மாநட்டு அரங்கின் (BMICH) முன்னால் புள்ளர் வீதியில் இருந்தான். அது ஒரு முடிக்குரிய காணி. வேறு



கலாநிதி பிறையன் செனவிரத்ன



சில பிக்குகள் போல் இவனும் முடிக்குரிய காணியை அடாவடித் தனமாகப் பிடித்து ஒரு சிறிய கட்டடம் போட்டிருந்து வந்தான். மந்திரி காமினி திசநாயக்கவுடன் மிக ஐக்கிய உறுவு பூண்டிருந் தான். அச்சிறு கட்டம் பின் அதே மந்திரியின் உதவியால் ஒரு பிரமாண்டமான கட்டடமாக உருவெடுத்தது. அக்கட்டடத்தில் தான் ஆடிக்கலவரத்தின் அனைத்துத் திட்டங்களும் தீட்டப் பட்டன.

15.01.2003 இந்தப் பிக்கு தாய் நாட்டைக் காப்பற்றும் இயக்கம் என்ற இயக்கத்தை உருவாக்கினான். அதன் மூலம் ரணில் விக் கிரம சிங்கவிற்கும் எல்.ரி.ரி.க்கும் இடையில் சமஷ்டி பற்றிப் பேசுவதை எதிர்த்தான். 1987 இல் அவசரகாலச் சட்டத்தின் கீழ் வடக்குக் கிழக்கு இணைக்கப்பட்டது. அந்தச் சட்டம் சமாதானத் துடன் காலாவதியாகிவிட்டதால் வடக்குக் கிழக்குப் பிரிக்கப்பட வேண்டும் என்று வாதாடினான்.

பின்னர் 01.10.2003 தேசிய நாட்டுப் பற்று இயக்கம் என்ற இயக்கத்தை உருவாக்கி விக்கிரமசிங்க நாட்டைப் பிழவுபடுத்தப் பார்க்கிறார் என்று கூறிவந்தான்.

இவனைப் பிடித்து நீதியின் முன் நிறுத்த என்ன தடையுள்ளது? ஒன்றுமில்லை. ஆனால் அதற்கான மனம் தான் இல்லை. அவன் இன்று புகமுடன் கொழும்பில் உலாவிவருகின்றான். அவனின் அங்கி இரத்தம் தோய்ந்துள்ளது.

இந்த வழக்கில் பலர் பதில் கூற வேண்டி இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் ஒரு மந்திரி ஆகும். அவரைத் "திரு. அ" என்று இப்போதைக்கு அழைப்போம். அவர் ஜெயவர்த்தனவின் அரசில் இருந்தவர். பல பதில்கள் கூறக் கடமைப்பட்டவர்.

வெலிக்கடை மறியல்சாலையில் 72 தமிழ் கைதிகள் இருந் தனர். 25.07.1983 இல் அவர்களில் 35 பேர் அம்மறியல் சாலையிலிருந்து இதர சிங்களக் கைதிகளால் படுகொலை செய்யப்பட்டார்கள். சனாதிபதி ஜெயவர்த்தன அவருக்குப் பரீட் சியமற்ற பொறுப்புணர்ச்சியுடன் மீதி இருந்த தமிழ்க் கைதி களை யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்ற உத்தரவிட்டார். இதனை மந்திரி அத்துலத் முதலியும் மேற் குறிப்பிட்ட மந்திரி "திரு. அ" வும் கடுமையாக எதிர்த்தார்கள்.

அப்படி இடம் மாற்றவது சிங்களவரின் கோபத்தைத் தூண்டும் என்றார்கள். அவர்கள் இருவரும் தமிழ் கைதிகள் பாதுகாப்பான இடத்திற்குச் செல்வதை விரும்பவில்லை. ஆச்சரியம் ஆச் சரியம். 27.07.1983 மேலும் 18 தமிழ்க்கைதிகள் சொல்லப் பட்டார்கள். 72 கைதிகளில் 19 பேர் மட்டும் எஞ்சி இருந்தனர். இப்போ சிங்களவர் கோபம் அடையமாட்டார்கள். ஏனெனில் முக்கால்வாசிப் பேர் கொல்லப்பட்டு விட்டார்கள்.

### செயற்பாடு:

2008 ஆம் ஆண்டு தை மாதம் நியூசிலாந்திற்கு என்னை ஒரு வழிபாட்டு ஒழுங்கில் பேசும்படி அழைத்திருந்தார்கள். அது ஒக்லண்டிலுள்ள எலிம் தேவாலயத்தில் நடந்தது. அந்த தேவா






லயத்தின் பாதிரியார் வண. பிறின்ஸ் தேவானந்தன் என்பவர் அமைதியாகப் பின்வருமாறு கூறினார்.

"நாங்கள் 20 வருடங்களாக அமைதி வேண்டி மீண்டும் மீண்டும் பிரார்த்திக்கிறோம். நாம் எவ்வளவுக்கெவ்வளவு பிரார்த்திக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு சமாதானத்தி லிருந்து தள்ளிச் செல்கிறோம். இதுவே யதார்த்தம்" அதைத் தொடர்ந்து நான் பல வருடங்களாக கேட்காத ஒன்றினைக் கூறினார்.

அதாவது,

"செயற்பாடு இல்லாத பிரார்த்தனை இறப்பிற்கு நிகர்"

அதையே நான் மன்னிப்புக் கோரலுக்கும் கூறுவேன். அது யாதெனில்

"செயற்பாடு இல்லாத மன்னிப்புக்கோரல் இறந்ததற்கு சரி" இந்தச் செயற்பாட்டைத் தான் நான் சென்ற 25 வருடங்களாகச் செய்து வருகிறேன்.

இதே சித்தாந்தம் எதிர்ப்பு ஊர்வலம் போன்ற வைக்கும் சாரும். புரட்சிக் கூட்டங்கள் 1983 ஆடிக்கலவர நினைவு நிகழ்வுகள் நடத்தப்படல் நலம்தான். ஆனால் தொடர்ந்து செயற்பாடு இல் லாத புரட்சி ஊர்வலங்கள் மரணத்திற்குச் சமம்.

நான் உங்களைச் செயலில் இறங்கும்படி தூண்டுகிறேன். தமிழ் மக்கள் பாதுகாப்பாகவும் கௌவரத்துடனும் வாழ்வதற்கு நீங்கள் வடகிழக்கில் செயற்பாட்டில் இறங்கவேண்டும்? 1983 ஆடியில் தொடங்கி இப்போது மிக மோசமான கதியில் தொடர்ந்து நடைபெற்று வரும் இனப்படுகொலையிலிருந்து தமிழர்களைக் காப்பாற்ற நீங்கள் செயற்பாட்டில் இறங்க வேண் டும் என்று வேண்டுகிறேன். வெலிக் கடைச் சிறைச்சாலையில் நடந்த மாதிரி ¾ வாசி நடந்தேறிவிட்டது. எனவே இப்போதே செயற்படுங்கள். சனநாயக சோசலிச குடியரசு என்று தன்னைத் தானே கூறிக்கொள்ளும் சிறீலங்காவின் வடகிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு "நாளை" என்பது காலம் தாழ்ந்துவிடும்.

-கலாநிதி பிறையன் செனவிரத்ன - மொழிபெயர்ப்பு: - மயில்வாகனம்

எரிமலை — யூலை, ஒகஸ்ட் 2008




# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# யூலை 1983 ஆம் ஆண்டு இனவழிப்பு




1983ம் ஆண்டு மே மாதம் பதினெட்டாம் திகதி வடமாகாணத்திலுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் நடைபெற்றது. யாழ்ப்பாணம் மாநகரசபை, வல்வெட்டித்துறை நகரசபை, பருத்தித்துறை நகரசபை, சாவகச்சேரி நகரசபை ஆகிய நான்கு உள்ளூராட்சிச் சபைகளுக்கும் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் போட்டியிட்டார்கள். இந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலைப் புறக்கணிக்கும் படி தமிழீழ விடுதலைப் புலிகள் கேட்டனர். அவர்களுடைய புறக்கணிப்பு மிகத்தீவிரமாக இடம் பெற்றது. மறுபக்கத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அப்போதைய தலைவர்களும் தீவிரமாகத் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டார்கள். தேர்தற் புறக்கணிப்பு 98விகிதம் வெற்றிபெற்றது. இதைத்தெடர்ந்து அப்போதைய ஜே.ஆர் ஜெயவர்த்தனாவுடைய அரசாங்கம் தமிழ்ப் பிரதேசங்களில் ஏற்பட்ட தலைமைத்துவ மாற்றத்தால் அதிர்ச்சியடைந்தது. தமிழ் பேசும் மக்கள் நாடாளுமன்ற மிதவாத அரசியற் தலைமையை நிராகரித்து தமிழ் தேசியவாதத்தை முழுமையாக நேசிக்கின்ற ஓர் தலைமைத்துவத்தை தெரிந்தெடுத்தமை சிங்கள ஆட்சியாளர்களுக்கு அதிர்ச்சி வைத்தியமாகவே இருந்தது. இதனால் ஜே.ஆர். ஜெயவர்த்தனா கறுப்புக் குடைகளைக் கண்டு மிரளும் கட்டாக்காலி மாடுகளைப் போல மிரண்டார். தனது படைகளைக் கட்டவிழ்த்துவிட அவர்கள் கந்தர்மடம் பகுதிகளில் வீடுகளை எரித்தனர். பொதுமக்கள் தாக்கப்பட்டார்கள் அவர்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டன. யாழ்ப்பாணத்தில் ஓர் பதட்ட மான சூழ்நிலை உருவாகியது. இந்தச் சம்பவங்கள் விரிவுபெற்று வவுனியாவிற்கும் பரவியது. அங்கும் கடைகள் எரிக்கப்பட்டன. இது பின்னர் திருகோணமலைக்கும் பரவியது. 1983 யூன் மாதம் முழுவதும் ஒவ்வொரு நாளும் திருமலையில் எங்கோ ஒரு தமிழ்க்கிராமத்தில் தமிழ் மகன் சிங்களவரால் வெட்டிப்படுகொலை செய்யப்படுகின்ற நிகழ்ச்சி மிகவும் சர்வசாதாரணமாக நிகழ்ந்துகொண்டிருந்தது.

இந்நிலையில் திருகோணமலைப் படுகொலைக்கு எதிராக 1983ஆம் ஆண்டு யூலை மாதம் 01ஆம் திகதி தமிழீழ விடுதலை அணி, யாழப்பாணப்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உள்ளிட்ட ஆறு அமைப்புக்களால் கடையடைப்பு முழு அளவில் நடத்தப்பட்டன. இந்தக் கடையடைப்பு நடைபெற்ற தினத்தன்று மாலை இரண்டு மணியளவில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்த யாழ்தேவி தொடருந்து கோண்டாவிலில் வைத்து சில தீவிரப் போக்குடைய இளைஞர்களால் தீ மூட்டி எரிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இந்தக் கதவடைப்பை ஒழுங்குபடுத்திய வைத்திய கலாநிதி எஸ்.ஏ.தர்மலிங்கம் அவர்களும் சுதந்திரன் நாளேட்டின் ஆசிரியர் கோவை மகேசன் அவர்களும் யாழ்ப்பாணம் காவற்றுறையினராற் கைது செய்யப்பட்டு கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அவர்கள் இருவரும் வெலிக்கடைச்சிறைச் சாலையில் சிறை வைக்கப்பட்டார்கள்.

இதனால் யாழ்ப்பாணத்தில் பதட்டம் ஏற்பட்டது.
இதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த சுதந்திரன் தமிழ் நாளேடும் மற்றும் சற்றடே றிவியூ ஆங்கில நாளேடும் இலங்கை அரசினால் தடைசெய்யப்பட்டன. அந்த அச்சகங்கள் சீல் வைத்துப் பூட்டப்பட்டன. அதே ஆண்டு யூலை மாதம் இருபத்துமூன்றாம் திகதி திருநெல்வேலியில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றின்போது பதின்மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதை ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுடைய அரசாங்கம் இலத்திரனியல் ஊடகங்களுக்கு ஊடாக தீவிரமாகப் பரப்புரை செய்தது. தமிழ்ப் புலிகள் பதின்மூன்று சிங்கள பௌத்த இராணுவத்தினரை யாழ்ப்பாணத்தில் கொன்று விட்டார்கள் என ஜே.ஆர் இனவாதப் பரப்புரையினைத் தூண்டிவிட்டார். இறந்த இராணுவத்தினரது உடல்களை யாழ்ப்பாணத்திலேயே அடக்கம் செய்துவிட இராணுவத்தினர் விரும்பியபோதும் அப்போதைய வர்த்தக அமைச்சர் அத்துலத் முதலியும் ஜே.ஆரும் அந்தப் பதின் மூன்று இராணுவத்தினரதும் உடல்களை கொழும்புக்கு எடுத்து வந்து சிங்கள மக்கள் மத்தியில் காட்சிப் படுத்திய பின்னர் பொறளை கனத்தை மயானத்தில் அடக்கம் செய்ய விரும்பினார்கள். இறந்த பதின்மூன்று இராணுவ சிப்பாய்களையும் கனத்தையில் அடக்கம் செய்யப்படும் என்று ஜே.ஆர் அரசு மிகப்பெரும் அளவில் விளம்பரப்படுத்தியதால் கனத்தையில் பல ஆயிரக்கணக்கான சிங்கள இனவாதிகள் குழுமினார்கள்.

இருபத்துநான்காம் திகதி மாலையே பொறளையில் இருந்த சைவ உணவகம் ஒன்று தாக்கப்பட்டது. அன்று இரவு இக்கலவரம் மருதானை, கொட்டாஞ்சேனை, வத்தளை, நீர்கொழும்பு எனப் பரவியது. மறுநாள் யூலை இருபத்தைந்தாம் திகதி இச் சம்பவம் மேலும் விசாலிப்படைந்தது. கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, கொம்பனித்தெரு, வெள்ளவத்தை, தெகிவளை, மொறட்டுவ, பாணந்துறை என கொழும்பின் தமிழர்கள் வாழும் எல்லாப் பகுதிகளுக்கும் காட்டுத்தீ போல் பரவியது. இதனால் இரண்டு நாட்களில் கொழும்பில் வாழ்ந்த பல இலட்சக்கணக்கான தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டனர்.

இதனால் பம்பலப்பிட்டி சென்.பீற்றர்ஸ் கல்லூரி, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி எனப் பல பாடசாலைகளில் இலட்சக் கணக்கான தமிழர்களுக்காக அகதி முகாம்கள் திறக்கப்பட்டன. வெலிக்க்கடை சிறைச்ச்சாலைப் படுகொலைகள். இக்கால கட்டத்தில் வெலிக்கடையில் ரெலோ இயக்கத்தின் மிக முக்கியமான தலைவர்களான குட்டிமணி, தங்கத்துரை, தேவன், ஜெகன் மற்றும் வவுனியா காந்திய இயக்கத்தைச் சேர்ந்த வைத்தியர் இராஜசுந்தரம் போன்றவர்களும் இங்கு சிறைவைக்கப்பட்டிருந்தனர். குட்டிமணி, தங்கத்துரை போன்றவர்கள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கின்போது ஆற்றிய உரை நாளேடுகளில் பிரசுரிக்கப்பட்டபோது, அது ஜனாதிபதி ஜே.ஆர், அத்துலத்முதலி, காமினி திஸாநாயக்கா, சிறில் மத்தியூ போன்ற அமைச்சர்களுக்குப் பெரும் ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் கிளறியது.

இதனால் சிறைச்சாலையில் வைத்து இவர்களது உயிருக்குத் தீங்கு விளைவிக்கும் திட்டமும் போடப்பட்டது. இதற்கென கொலை, கொள்ளை போன்ற குற்றங்களுக்காக நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்ட கொலைகாரப் படை ஒன்று தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. இந்தக் கொலைகாரப் படைக்குத் தாய்லாந்து விமானத்தைக் கடத்திச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட சேபால ஏக்கநாயக்கா தலைமை தாங்கினார். யூலை மாதம் இருபத்தைந்தாம் திகதி காலை வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு காமினி திசநாயக்காவும், அத்துலத்முதலியும் சென்று தமிழ்ச் சிறைக்கைதிகளைக் கொல்லுமாறு பச்சைக் கொடி காட்டிவிட்டுச் சென்றார்கள்.

அன்று மாலையே குட்டிமணி, தங்கத்துரை உள்ளிட்ட முப்பத்தைந்து தமிழ்க் கைதிகள் கொல்லப்பட்டனர். அவர்களைக் காப்பாற்றவோ, கொலை வெறியர்களான சிங்களக் கைதிகளைத் தடுக்கவோ சிறைச்சாலை நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதன் விளைவாக யூலை மாதம் இருபத்தேழாம் திகதி மேலும் பதினேழு சிறைக்கைதிகள் கொல்லப்பட்டனர். மொத்தமாக இரு தினங்களிலும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டிருந்த ஐம்பத்திரண்டு சிறைக்கைதிகள் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டனர்.

இதற்கு முன்பாக யூலை மாதம் இருபத்து நான்காம் திகதி திருநெல்வேலி, கந்தர்மடம்





பொதுமக்கள் சிங்கள இராணுவத்தாற் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களில் கல்விமான் கலா.பரமேஸ்வரன், அவரது மாமனார் சரவணமுத்து ஆகியோரும் உள்ளடங்குவர். இதைவிட நாடுபூராகவும் வெடித்த இச் சம்பவத்தில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்ப் பொதுமக்கள் வெட்டியும், சுட்டும் படுகொலை செய்யப்பட்டார்கள். பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் காடையார்களுடைய தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடைந்தார்கள். தமிழ் மக்களுக்குச் சொந்தமான வீடுகள், கடைகள், கட்டடங்கள், வணிக நிலையங்கள் திரைப்பட அரங்குகள் தரைமட்டமாக்கப்பட்டன. தமிழர் ஜே.ஆர் பாதிக்கபட்ட தமிழ் மக்களுக்கு எந்தவித அனுதாபமும் தெரிவிக்காமல் கடந்த சில நாட்களாக நடைபெற்ற அசம்பாவிதங்கள் சிங்கள மக்களது இயல்பான மன உணர்வுகள் எனக் கருத்து வெளியிட்டார்.

இதைத் தொடர்ந்து யூலை மாதம் இருபத்தொன்பதாம் திகதி ஒரு வெள்ளிக்கிழமை விடுதலைப் புலிகள் கொழும்புக்கு வந்துவிட்டார்கள் என்ற வதந்தி பரப்பப்பட்டது. அன்றைய தினம் மேலும் பல தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். கல்விமான் அருமைநாயகம் என்பவர் நுகேகொடையில் தனது வீட்டைப் பார்க்கப் போனபோது வெட்டிக்கொல்லப்








சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

கொழும்பில் பிரபல தொழிலதிபர் வை.ஏ.எஸ். ஞானம், மகாராஜா நிறுவனம், கே.குணரட்ணம் எனப் பல நிறுவனங்கள் பெரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகின. ரேப்பியா என்ற நிறுவனம் இச் சம்பவத்தில் சுமார் பத்தாயிரம்

பட்டார். கொழும்புப் புறக்கோட்டை காஸ் வேக்ஸ் ஸ்தாபனத்தில் வேலை செய்த தமிழ் இளைஞர்கள் பாதுகாப்புத் தேடி அந்நிறுவனத்தின் கூரைமீது இருந்தபோது அவ்வழியாக வந்த விமானப்படையினால் சுட்டு வீழ்த்தப்பட்டார்கள்.










கோடி ரூபாவிற்கு மேல் தமிழர்களுடைய சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தப்பட்டதென மதிப்பீடு செய்தது. இந்தச் சம்பவத்தின் போது ஜே.ஆர் ஜெயவர்த்தனா எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. 1983ஆம் ஆண்டு யூலை மாதம் இருபத்தேழாம் திகதி ரூபவாகினி தொலைக்காட்சியில் தோன்றிய

இச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களைக் காப்பாற்ற எந்த முயற்சியும் எடுக்காத ஜே.ஆர் ஜெயவர்த்தனாவுடைய அரசு 1983 ஆம் ஆண்டு ஆவணி மாதம் நான்காம் திகதி இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழர் போராட்டத்தை நசுக்குவதற்காக 1978ஆம் ஆண்டின் அரசியல் யாப்புக்கான ஆறாவது திருத்தச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. இதன்படி தனிநாடு கேட்டுப் போராடுதல், அதற்கு ஊக்கமளித்தல், உதவி செய்தல் என்பன போன்ற விடயங்கள் பாரதூரமான தண்டனைக்குரிய குற்றங்களாக அறிவிக்கப்பட்டன.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# யாழ் திருநெல்வேலி படுகொலை 24, 25 யூலை 1983

திருநெல்வேலி யாழ் மாவட்டத்தின் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவினுள் உள்ளடங்கும் பகுதியாகும். யாழ் நகரப் பகுதியிலிருந்து பலாலி வீதியூடாக வடக்குப்புறமாக ஏறக்குறைய மூன்று மைல் தூரத்தில் உள்ளது. இப்பிரதேசத்தில் யாழ் பல்கலைக்கழகம், யாழ் உயர்தொழிநுட்பக் கல்லூரி போன்ற உயர் கல்வி நிறுவனங்களும் அரச அலுவலகங்களும் அமைந்துள்ளன. 1983ஆம் ஆண்டு யூலை மாதம் 23 திகதி இரவு 11:45 மணியளவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினரின் வாகனம் பலாலி வீதியில், பரமேசுவராச் சந்திக்கும் திருநெல்வேலிச் சந்திக்கும் இடையில் தபாற்பெட்டிச் திருநெல்வேலிப் பகுதி, பலாலி வீதி, சிவன் அம்மன் கிராமங்களைச் சேர்ந்த மக்களின் வீடுகளுக்குச் சென்ற இராணுவத்தினர் இப்பகுதியைச் சேர்ந்த ஐம்பத்தொன்றுக்கும் மேற்பட்ட பொதுமக்களைச் சுட்டுக் கொன்றனர். பல வீடுகள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டன.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. இராமசாமி நாகராஜா – தொழிலாளி
02. நாகலிங்கம் சிவலிங்கம், – வேலை மேற்பார்வையாளர்
03. கனகரத்தினம் கிருஸ்ணானந்தம் – வியாபாரம்
04. கந்தையா சண்முகநாதன் –
05. பாலச்சந்திரன் அஜித் – சிறுவன்
06. பிலிப் அலோசியஸ் யோகராசா சந்திரசேகரம – வியாபாரம்
07. தங்கராஜா கஜேந்திரன் – மாணவன்
08. பொன்னையா பரராஜசிங்கம் – ஆசிரியர்
09. செல்வகாந்தினி – சிறுமி
10. சுப்பிரமணியம் பரமேஸ்வரன் – பிராந்திய முகாமையாளர்
11. சின்னத்தம்பி சரவணமுத்து – இளைப்பாறிய ஆசிரியர்
12. சின்னையா சதானந்தன் – கடிகாரம் திருத்துநர்
13. சீவரத்தினம் தவேந்திரன் – மாணவன
14. சண்முகநாதன் சத்தியதேவன் – விற்பனையாளர்



நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் – தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# பெருவெளி அகதிமுகாம் படுகொலை 15 யூலை 1986



திருகோணமலை கொட்டியாபுரத்திலிருந்து மட்டு நகர் நெடுஞ் சாலையில் ஏழு கி.மீ தொலைவில் மல்லிகைத்தீவுச் சந்தியுள்ளது சந்தியின் வலப்புறமாக ஒரு கி.மீ தூரத்தில் பெருவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை உள்ளது. இக்கிராமம் மல்லிகைத்தீவு கிராம சபை எல்லைக்குட்பட்ட தமிழ் மக்கள் அதிகளவு வாழும் பிரதேசமாகும்.

1985ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் இந்தப் பாடசாலை தமிழ் மக்களின் அகதி முகாமாக இயங்கிவந்தது. கிராமசபை இயங்கி வந்த காலங்களில் மல்லிகைத்தீவு கிராமசபை பெரும்பான்மை யான தமிழ்க் கிராமங்களையும், சில சிங்களக் கிராமங் களையும் உள்ளடக்கியிருந்தது. அவற்றில் தெகிவத்தை, நீலாப்பொல போன்ற சிங்களக் கிராமங்களில் இருந்த மக்களில் பலர் ஊர்காவற்படைக்கு இணைக்கப்பட்டு பணிக்கமர்த் தப்பட்டனர். இவர்கள் சிறீலங்கா இராணுவத்தினருடன் இணைந்து தமிழ் மக்கள் அழிப்பில் ஈடுபட்டனர். ஊர்காவற் படையில் அந்தந்தக் கிராமத்தவர்கள் பணியாற்றினார்கள். இவர்கள் ஆரம்பகாலங்களிலிருந்தே தமிழ் மக்களோடு ஒன்றாகப் பழகியிருந்தமையால் கிராமத்தவர்கள் சம்பந்தமாக பூரணமாக அறிந்திருந்தனர்.

15.07.1986 அன்று தெகிவத்தை, நீலாப்பொல கிராமத்திலிருந்த ஊர்காவற்படையினருடன் இராணுவத்தினர், பொலீசாரும் இணைந்து நள்ளிரவுவேளை பெருவெளி அகதிகள் முகாமைச் சுற்றியிருந்த பகுதிகளில் மறைந்திருந்தனர். முகாமைச் சூழவிருந்த பெருவெளி மணல்வெளிக் குடியிருப்புகள், இரணுவத்தினரால் முற்றாக அழிக்கப்பட்டிருந்ததால், இரவு நேரங்களில் மக்கள் நடமாடுவதில்லை, இதனால் இரவு வந்த இராணுவத்தினரின் நடமாட்டம் எவருக்கும் தெரிந்திருக்கவில்லை. பொழுது புலர்ந்து வந்து கொண்டிருந்த வேளையில் முகாமிற்குள் புகுந்த இராணுவத்தினர் சுடத்தொடங்கினர்கள். அத்தோடு தத்தமது இருப்பிடங்களுக்குக் காலையில் திரும்பிய மக்கள் மீதும் ஒளிந்திருந்த இராணுவத்தினரும் காவற்றுறையினரும் சுட்டார்கள். திகைப்படைந்த மக்கள் நாலாதிசையும் பாய்ந்து ஓடத்தொடங்கினர். பயந்தேடிய மக்களை மறைந்து நின்ற படையினர் சுட்டுக்கொன்றனர். அவ்வாறிருந்தும் பெருமளவு மக்கள் ஓடித் தப்பிக்கொண்டனர்.

குழந்தைகள், பெண்கள், மாணவர்கள் உட்பட மொத்தமாக நாற்பத்தெட்டுப் பேர் உயிரிழந்தார்கள். இருபது பேருக்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்தனர். பல பெண்கள் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டனர்.

இந்தப் படுகொலைச் சம்பவம் நண்பகல் ஒரு மணிவரை நீடித்தது. அதன் பிறகு சம்பவ இடத்திற்கு வந்த நலன்விரும்பிகளும் தொண்டர் நிறுவனங்களும் காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அப்போதிருந்த மூதூர் பிரசைகள் குழுத்தலைவர் அமரர் மு.கனகசபையும் வேறு சிலரும் அவ்விடத்திற்கு விஜயம் செய்து படுகொலை செய்யப்பட்டவர்களின் உடல்களை மூதூர் அரசினர் வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காகக் கொண்டு சென்று மறுநாள் பெருவெளி சேமக்காலையில் அடக்கம் செய்தனர்.

முருகப்பன் தங்கராஜா (பெருவெளி வட்டவிதானையார்) இது பற்றி கூறுகையில்,
“1986ஆம் ஆண்டு பெருவெளியில் அகதி முகாம் ஒன்று இருந்தது. இராணுவத்திற்குப் பயந்த மக்கள் அனைவரும் அங்கு தங்கியிருந்தார்கள். 15.07.1986 அன்றிரவு விடியற்காலை 3.00 மணியளவில் அந்த இடத்தை இரவோடு இரவாக வந்த இராணுவத்தினர் சுற்றிவளைத்தார்கள். விடிந்தவுடன் கண்ணிற்பட்ட அனைவரையும் சுட்டுக்கொன்று பல அட்டகாசங்களைச் செய்தனர். நன்கு விடிந்தவுடன் முகாம்களுக்குள் புகுந்து குடிசைகள் அனைத்திற்கும் நெருப்பு வைத்துவிட்டு அந்த வீடுகள் பத்தி எரிந்துகொண்டிருக்கும் பொழுது பொது மக்களைப் பிடித்துச் சுட்ட பின்னர் காலிலும் தலையிலும் பிடித்து எரியும் நெருப்புக்கு மேல் தூக்கி வீசினர்.

உயிரோடு இருந்தவர்களைக் கூட எரியும் நெருப்பிற்குள் தூக்கிப் போட்டார்கள். இப்படியாகக் காணும் இடமெல்லாம் எரிந்து கொண்டிருந்தது. அந்த நேரம் வெடிச்சத்தத்திற்குப் பயந்து இரண்டு மூன்று குடும்பங்கள் சேர்ந்து சில வீடுகளிற் கூடியிருந்தார்கள். அப்படியிருந்தவர்களில் ஆண்களை எல்லாம் பிடித்து அங்கிருந்தோர்க்கு முன்னாலேயே வைத்து சுட்டும் வெட்டியும் கிணற்றுக்குள் போட்டார்கள். அப்படிச் சுடப்பட்டு இறந்தவர்களின் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட சடலங்களை உழவு இயந்திரத்தில் ஏற்றிக்கொண்டுபோய் முகங்களிற்கு அசிட் ஊற்றி யாரென அடையாளங் காண முடியாதளவிற்கு அவர்களுடைய முகாம்களுக்குக் கொண்டுபோய் வைத்திருந்து விட்டு மூன்று நாட்களிற்குப் பின்னர் அச்சடலங்களை உறவினர்களுக்குக் கொடுத்திருந்தார்கள். அந்தவேளை இங்கு சுட்டுக் கொல்லப்பட்டவர்களது சடலங்களைக் கிணறுகள், மதகுகள் போன்ற இடங்களிளெல்லாம் ஆங்காங்கே இராணுவத்தினர் போடடிருந்தார்கள். எத்தனை மக்கள் இறந்தார்கள் என்பதுகூட சரிவரத் தெரியவில்லை. அந்தளவிற்கு காணுமிடமெல்லாம் சடலமாக இருந்தது.

இவற்றுள் வேறு ஊர்களிலிருந்து தொழிலிற்காக வந்தவர்களும் இறந்திருந்தர்கள். வழமையாக இராணுவத்தினர் வரும்போது வரும் திசையிலிருந்தே வெடிச்சத்தம் கேட்கும். அந்த நேரம் நாங்கள் எல்லோரும் ஓடிச்சென்று காடுகளுக்குள் ஒளிந்து கொள்வோம். ஆனால் அன்றைய தினம் வழமைக்கு மாறாக நடந்ததால்தான் பல மக்கள் அகப்பட்டுக்கொண்டார்கள். இராணுவத்தினர் சென்ற பின்னர் ஊருக்குள் சென்று பார்த்த போது யார் யாரைச் சுட்டிருக்கிறார்கள், எந்தெந்தக் கிணற்றில் சடலம் இருந்தது எனத் தெரிந்தது. அகதி முகாமில் இருந்தவர்களைத் தான் நிறையக் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள். சுடப்பட்டவர்களைத் தவிர உயிருடன் பிடித்துச் சென்றவர்களை பின்னர் முழுமையாக மனிதர்கள் மாதிரி விடவில்லை. கைகளைக் கால்களை வெட்டி நடமாட முடியாதளவிற்கு கொடுமைப் படுத்தி விட்டிருந்தார்கள்.

அந்தநேரத்திலும் ஊருக்குள் நிற்கப் பயம். திரும்பவும் இராணுவம் வரலாம் என்ற அச்சம் இருந்தது. தனித் தனிக் கிடங்குகள் வெட்டி சடலங்களைப் போட முடியவில்லை. சடலங்கள் கூட பார்க்கமுடியாதளவு அழுகிய நிலையில் இருந்ததால் பெரிய கிடங்கு ஒன்று வெட்டி அத்தனை சடலங்களையும் ஒருமித்துப் போட்டு மூடினோம். இந்த நிலையிலும் கிராமத்தை விட்டு யாரும் வெளியேற முடியாத நிலையிருந்தது. இராணுவத்தினர் கண்டால் உடனே சுட்டுவிடுவார்கள் என்ற பயம் இருந்தது. நாங்கள் யாராவது வீட்டை விட்டு வெளிக்கிட்டால் திரும்ப வந்தால்தான் வந்திருக்கிறார்கள் என்று தெரியும். இல்லாதுபோனால் எந்த முகாமில் பிடித்து வைத்திருக்கிறார்கள், எங்காவது வைத்து சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார்களா என்று எதுவும் தெரியாத நிலை இருந்தது.

இந்த முகாமிற்கு நடந்த கொடுமையைப் போல் நான் எங்கும் பார்த்ததில்லை. இதை நேரடியாகப் பார்த்தவர்களிற் சிலர் பைத்தியமாகக் கூட இருக்கிறார்கள் நாற்பத்தெட்டுப் பேர் வரை கொலைசெய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை விட உளரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாக இருக்கிறார்கள்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் – தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# தண்டுவான் படுகொலை 17 யூலை 1986

முல்லைத்தீவு - வவுனியா பிரதான வீதியில் நெடுங்கேணியிலிருந்து முல்லைத்தீவு நோக்கி ஏறத்தாழ நான்கு கி.மீ. தொலைவிலுள்ள் கிராமமே தண்டுவான் கிராமமாகும். இக்கிராமம் முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேசசெயலர் பிரிவில் அமைந்துள்ளது. தண்டுவான் கிராமத்தின் பிரதான வருமானம் விவசாயம் மூலமே பெறப்படுகிறது. இக்கிராமத்திலுள்ள மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நெடுங்கேணிக்கே செல்ல வேண்டியிருந்தது.

17.07.1986 ஆம் ஆண்டு வழமைபோல முல்லைத்தீவிலிருந்து நெடுங்கேணி நோக்கிச் சென்றுகொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தில் மக்கள் பல்வேறு பகுதிகளிலுமிருந்து பல்வேறு தேவைகளுக்காகச் சென்றுகொண்டிருந்தனர். அன்றையதினம் நெடுங்கேணிப் பிரதேசமானது சிறீலங்காவின் முன்னாள் இராணுவத் தளபதிகளில் ஒருவரான ஜெனரல் கொப்பேக்கடுவ தலைமையில் சுற்றிவளைக்கப்பட்டிருந்தது. அதற்கு சிறீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தியும் பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்தது. அதேவேளை பேருந்தில் சென்ற தண்டுவான் மக்கள் தமது இடங்களில் இறங்கியபின் நெடுங்கேணிக்குப்போக முடியாத நிலையில், ஓட்டுநர் பேருந்தைத் திருப்பி முல்லைத்தீவு நோக்கி ஓட்டிச் சென்றபோதுபேருந்தைப் பின்தொடர்ந்து சென்ற உலங்குவானூர்தி துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டதுடன், கிட்டத்தட்டதண்டுவான் பாடசாலையிலிருந்து முல்லைத்தீவு நோக்கி ஒரு கி.மீ. தூரத்தில் வைத்து பேருந்து மீது றொக்கற்தாக்குதலை மேற்கொண்டது. இத் தாக்குதலில் பேருந்து ஓட்டுநர் உட்பட பதினேழு பேர் உயிரிழந்தனர். பதின்மூன்று பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சேகு அப்துல்காதர் - விவசாயம் - 55
02. நாகமணி தட்சணாமூர்த்தி - அரச ஊழியர் - 30
03. சுப்பிரமணியம் சபாரத்தினம் - 28
04. சிவலிங்கம் விவேகானந்தம் - 17
05. குமாரசாமி வேலாயுதம்பிள்ளை - 22
06. முத்துக்குமார் கணேஸ்வரி - 35

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# மூதூர் மணற்சேனை படுகொலை 18 யூலை 1986

திருமலை மூதூரில் 1986.07.18 அன்று அதிகாலை 3.00 மணியளவில் மணற்சேனை, பெருவெளி எனும் கிராமங்களை சுற்றிவளைத்த சிறீலங்கா இராணுவத்தினர் இங்கு நாற்பத்துநான்கு பொதுமக்களைக் கைது செய்து கொண்டுசென்று சுட்டுப்படுகொலை செய்தனர். இதில் அனைவரும் உயிரிழந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் மேன்காமம், கங்குவெளி, மல்லிகைத்தீவு ஆகிய கிராமங்களிலிருந்து இராணுவத்தின் அச்சுறுத்தல், படுகொலைசம்பவம் அதிகரித்ததன் காரணமாக பாதுகாப்புத் தேடி அகதிகளாக வந்தவர்களாவர்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



# சித்தாண்டி படுகொலை 20, 27 யூலை 1990

மட்டக்களப்பு நகரத்திலிருந்து வடக்குத் திசையாக பதின்மூன்று மைல் தொலைவில் சித்தாண்டிக் கிராமம் அமைந்துள்ளது. இந்து மதத்தவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க முருகன் ஆலயம் அமைந்த இக்கிராமம் வளங்கள் நிறைந்ததும், மக்கள் செறிந்து வாழும் ஓர் இடமாகவும் உள்ளது. இங்கு வாழும் மக்களின் பிரதான பொருளாதாரம் விவசாயம் ஆகும்.

இக்கிராமத்தினை 1990.07.20 அன்று இராணுவத்தினர் முற்றுகையிட்டு, மக்கள் அனைவரையும் முருகன் ஆலயத்தினுள் அழைத்துச் சென்றனர். அவர்களில் எண்பது பொதுமக்களின் கண்கள், கைகள் என்பனவற்றைக் கட்டி எல்லைக் கிராமத்திற்கு கூட்டிச் சென்று படுகொலை செய்தனர்.

அதே மாதம் மீண்டும் இருபத்தேழாம் திகதி இப்பகுதியில் ஐம்பத்தேழு இளைஞர்களை சுற்றிவளைத்துக் கைதுசெய்து கண்களைக் கட்டி எல்லைப்புறக் கிராமத்திற்கு அழைத்துச் சென்று சுட்டுக் குழிகளிற் போட்டு எரித்தனர். 28.01.1987 அன்று இராணுவத்தினரால் கொக்கட்டிச்சோலையில் நடத்தப்பட்ட படுகொலைகள் போன்றே 1990 ஆகஸட் 20, 27ஆம் திகதிகளில் சித்தாண்டியூரிலும் மேற்கொள்ளப்பட்டது.



இரு தினங்கள் இராணுவத்தினரின் தாக்குதலில் சித்தாண்டியில் மட்டும் நூற்றுமுப்பத்தேழு மக்கள் உயிரிழந்தார்கள். தொடர்ந்தும் பல மாதங்களாக இராணுவத்தினர் சித்தாண்டிப் பிரதேசத்தினைச் சுற்றிவளைப்பதும், கைதுசெய்து மக்களைப் படுகொலை செய்வது தொடர்ந்தது.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# பரந்தன் சந்தி படுகொலை 24 யூலை 1990

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவில் A-9 வீதியை உள்ளடக்கி அமைந்திருப்பதால் பரந்தன் நகரம் முதன்மையான நகரமாக விளங்குகின்றது. மேலும் இங்கு இரசாயணத் தொழிற்சாலை அமைந்திருந்ததும் இப்பகுதி முக்கியத்துவம் பெற்றிருந்தமைக்கு முக்கிய காரணமாகும். இங்கு வாழும் மக்களின் பிரதான தொழில் விவசாயமாகும்.

இப்பிரதேசமானது 1980களிலிருந்து பல்வேறு இராணுவ நடவடிக்கைகளால் மிகவும் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசமாக இருக்கின்றது. இந்த வகையில் 24.07.1990 அன்று ஆனையிறவு சுட்டதீவு என்னுமிடத்தில் உலங்கு வானூர்தி மூலம் இராணுவத் தளபதி கொப்பேக்கடுவ தலைமையில் தரையிறக்கப்பட்ட சிறீலங்காப் படையினர் பரந்தன் பகுதியால் முன்னேறி வந்துகொண்டிருந்தவேளை, பரந்தன் சந்தியை அண்டிய பிரதேசத்தில் வீடுகளிலிருந்த பொதுமக்களைத் தாக்கினார்கள். வீடுகளிலிருந்த மக்களைச் சுட்டு வீடுகளுடன் சேர்த்து எரித்தனர். இச்சம்பவத்தில் பதின்நான்கிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தனர்.

இராணுவம் முன்னேறி வந்ததால் இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் இடம் பெயர்ந்து வேறு இடங்களிற்குச் சென்றனர். அங்கு தமது உறவுகளைக் காணாது தவித்தனர். மீண்டும் தமது சொந்த இடத்திற்கு திரும்பி வந்தபோது வீடுகளினுள் இரத்தக்கறைகள் காணப்பட்டதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். நெல்லு மூட்டைகள் அடுக்கி வைக்கும் கொட்டிலினுள் சடலங்கள் போட்டு எரிக்கப்பட்ட நிலையிலும் அரைகுறையாக எரிந்த நிலையிலும் காணப்பட்டன. அரைகுறையாகக் காணப்பட்ட சடலங்களை உறவினர்கள் எடுத்து அடக்கம் செய்தனர்.

இச்சம்பவத்தை நேரில் பார்த்ததுடன் கணவரையிழந்த மங்களேஸ்வரி தெரிவிக்கையில்,
“காலை 5.30 மணியளவில் ஆனையிறவிலிருந்து வந்த இராணுவத்தினரால் வீடுகளில் உள்ளவர்களையும் வயல்களில் வேலை செய்தவர்களையும் சுட்டும் எரித்தும் வந்தனர். இதில் எனது உறவினர் ஒருவர் பலியானார். இச்சம்பவத்தை என் கண்ணால் கண்டேன்.”

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. கந்தசாமி அழகரட்ணம் - கமம் - 24
02. கணேசபிள்ளை லிங்கேஸ்வரன் - கமம் - 20
03. பூபாலசிங்கம் கொடியரசன் - கமம் - 25
04. தங்கராசா ரவிச்சந்திரன் - கமம் - 21
05. அன்ரனி சகாதேவன் (ரகு) - கமம் - 20
06. பொன்னுத்துரை புண்ணியமூர்த்தி - தச்சுத்தெழில் - 22
07. செல்லத்துரை விக்னேஸ்வரன் - கமம் - 21
08. செலடன்ஸ்பெக் பிறிங்கேஸ்பெக் - தச்சுத்தொழில் - 19
09. சிவராசா சதீஸ்குமார் - 19
10. சங்கரப்பிள்ளை சிவகுருநாதன் - மாணவன் - 18
11. சவரிமுத்து ரஞ்சன் - கமம் - 22
12. சற்குணநாதன் ரஞ்சிதகுமார் - வியாபாரம் - 22

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# பொத்துவில் படுகொலை 30 யூலை 1990



1990ஆம் ஆண்டில் மீண்டும் யுத்தம் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து இலங்கையில் கிழக்குப் பகுதியில் இராணுவத்தினராலும் சிங்கள முசுலிம் குழுக்களாலும், ஊர்காவற் படையினராலும் நீண்டகாலமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் தாக்கப்பட்டனர்.

15.06.1990அன்று பொத்துவில் கிராமத்தில் இராணுவத்தினரும் முசுலிம் குழுக்களும் இணைந்து மேற்கொண்ட தாக்குதல்களின் காரணமாக பாதுகாப்புத் தேடிய மக்கள் இடம்பெயர்ந்து கோமாரி அகதி முகாமில் தஞ்சமடைந்தனர்.

இராணுவத்தினரதும் அரச அதிகாரிகளினதும் வேண்டுகோளையும் வாக்குறுதிகளையும் நம்பி 30.07.1990அன்று பொத்துவில் கிராமத்திற்கு மீண்டும் திரும்பி வந்து பார்த்தபோது வீடுகள் உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டிருந்ததுடன், வீடுகள் எரித்து அழிக்கப்பட்டிருந்தன. இதனால் மக்கள் தமது வீடுகளை விட்டுப் பொத்துவில் மெதடிஸ்த மகா வித்தியாலயத்தில் மீண்டும் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர்.

பொத்துவில் மெதடிஸ்த மகாவித்தியாலயத்தில் தங்கியிருந்த மக்களில் இளைஞர்கள், யுவதிகள் தமது குடும்பத்தினைக் காப்பாற்றுவதற்காக வேலைக்குச் சென்றார்கள். இவர்களில் நூற்றுமுப்பத்திரண்டு பேர் இராணுவத்தினராலும் முசுலிம் குழுக்களாலும் கைதுசெய்யப்பட்டு பொத்துவில் காவற்றுறை நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு இவர்களில் சிலர் சிலராகத் தெரிந்தெடுத்து காவற்றுறை நிலையத்திலிருந்த வெட்டவெளியில் கை கால்களைக் கட்டி உயிருடன் போட்டு எரித்தார்கள்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒரு சிலர் தப்பித்துக் கொள்ள எஞ்சியோரை 02.08.1990 அன்று பொழுது விடிவதற்கு முன்னர் ரயரில் உயிருடன் போட்டு எரித்தார்கள். இவ்வாறு இராணுவத்தினராலும் முசுலிம் குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் நூற்றுஇருபத்தைந்திற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 மூத்ததம்பி இராசநாயகம் - 33
02 இளையதம்பி கிருபாகரன் - தொழிலாளி - 39
03 இளையதம்பி கருணாகரன் - 23
04 இராஜதுரை கமலநாதன் - குழந்தை - 3
05 இராமலிங்கம் ஈஸ்வரன் - 23
06 சத்தியநாதன் பத்மநாதன் - 32
07 நாகமணி குணசீலன் - 25
08 நாமணி சிந்தாத்துரை - கடற்றொழில் - 45
09 நடராசா சவுந்தரராசா - 19
10 நல்லதம்பி பாக்கியராசா - 23
11 சன்னாசி சுப்பிரமணியம் - 34
12 கனகசபை நவராஜா - 26
13 கனகசபை கிருபைராசா - தொழிலாளி - 30
14 கனகசபை தவராசா - தொழிலாளி - 26
15 கனகரத்தினம் சின்னராசா - 52
16 கனகரட்ணம் சின்னராசா - 27
17 கந்தையா நல்லதம்பி - 33
18 கந்தையா கணேஸ் - மாணவன் - 16
19 கந்தையா தருமரத்தினம் - 32
20 கந்தையா சிவகுமார் - 27
21 கந்தையா சிவகுமரன் - 22
22 கந்தையாப்பிள்ளை சிவசுப்ரமணியம் - 26
23 கந்தையாப்பிள்ளை சிவசுந்தரன் - 26
24 கந்தன் நவரட்ணம் - 21
25 கந்தப்பன் ஆனந்தன் - தொழிலாளி - 26
26 காத்தமுத்து சுனில் - தொழிலாளி - 35
27 காளிக்குட்டி அமிர்தலிங்கம் - 27
28 கணேசபிள்ளை சந்திரன் - 36
29 கிருஸ்ணன் அழகையா - தொழிலாளி - 24
30 கண்ணாச்சி சுப்பிரமணியம் - 34
31 கணபதி பத்மநாதன் - தொழிலாளி - 25
32 கணபதிப்பிள்ளை தருமரட்ணம் - தொழிலாளி - 51
33 கணபதிப்பிள்ளை யோகநாதன் - தொழிலாளி - 20
34 கணபதிப்பிள்ளை செல்வரட்ணம் - தொழிலாளி - 35
35 கணபதிபிள்ளை தெய்வேந்திரன் - 23
36 பக்கிரி சிற்றம்பலம் - 30
37 பாலன் ஜெயானந்தம் - தொழிலாளி - 25
38 பத்மநாதன் விக்னேஸ்வரன் - தொழிலாளி - 14
39 பத்மநாதன் ரவீந்திரன் - தொழிலாளி - 40
40 ஐயப்பன் செல்வராசா - தொழிலாளி - 41
41 தர்மலிங்கம் பாஸ்கரன் - 13
42 தம்பியர் தேவசுந்தரம் - பாதுகாவலர் - 70
43 தம்பிப்பிள்ளை பூபாலப்பிள்ளை - தொழிலாளி - 32
44 தம்பிமுத்து கிருஸ்ணபிள்ளை - 52
45 தம்பிராசா இராசகுமார் - தொழிலாளி - 18
46 தம்பிராசா மனோகர் - தொழிலாளி - 38
47 தம்பிராசா தேவசுந்தரம் - தொழிலாளி - 65
48 திசாநாயக்க ஒபேசேகர - தொழிலாளி - 42
49 திசாநாயக்கா சபேசர் - மாணவன் - 19
50 திலகரட்ணம் பாரதி - தொழிலாளி - 24
51 திலகரட்ணம் லலித் - தொழிலாளி - 23
52 தங்கராசா மகேந்திரன் - தொழிலாளி - 17
53 தருமலிங்கம் இராசேந்திரன் - 26
54 தருமலிங்கம் கணேசமூர்த்தி - தொழிலாளி - 23
55 தருமலிங்கம் முத்துலிங்கம் - தொழிலாளி - 24
56 தருமலிங்கம் சந்திரன் - 21
57 தருமலிங்கம் சாந்தலிங்கம் - 23
58 மாரிமுத்து மகேந்திரன் - 18
59 மாணிக்கம் பரமசிவன் - 31
60 மாணிக்கம் தம்பிராசா - தொழிலாளி - 26
61 மாணிக்கம் செல்வராசா - தொழிலாளி - 27
62 மாணிக்கம் ரவிச்சந்திரன் - தொழிலாளி - 32
63 முத்தையா சத்தியநாதன் - 18
64 அந்தோனிபிள்ளை மகேந்திரகுமார் - 16
65 அழகையா சியாம்சேகர் - தொழிலாளி - 36
66 அருளம்பலம் வாசு - 19
67 ஆறுமுகம் இராசரட்ணம் - தொழிலாளி - 20
68 ஆறுமுகம் கணேசமூர்த்தி - மாணவன் - 19
69 ஜோசப் சிறிராமு - தொழிலாளி - 32
70 கோபால் ரமேஸ் - 20
71 கோபாலகிருஸ்ணன் பத்மநாதன் - தொழிலாளி - 26
72 கெங்காதரன் ஜெயக்குமார் - தொழிலாளி - 22
73 பொன்னன் மோசன் - தொழிலாளி - 25
74 சோமலிங்கம் விஸ்வலிங்கம் - தொழிலாளி - 42
75 செல்வராசா சுவேந்திரன் - தொழிலாளி - 20
76 செல்லத்துரை கந்தசாமி - 35
77 செல்லத்துரை சந்திரன் - 20
78 செல்லமுத்து சுப்பிரமணியம் - தொழிலாளி - 18
79 வேலாயுதம் கருணாநிதி - தொழிலாளி - 32
80 ஞானச்செல்வம் உதயகுமார் - தொழிலாளி - 18
81 சந்திரப்பிள்ளை வினாயகமூர்த்தி - தொழிலாளி - 20
82 சுந்தரராகன் தருமலிங்கம் - 21
83 சுப்பிரமணியம் இராசு - 20
84 சுப்பையா கதிர்காமநாதன் - 22
85 சுப்பையா அர்சுனன் - 26
86 சுப்பையா ஆறுமுகம் - தொழிலாளி - 39
87 சபாபதி மகேந்திரன் - வியாபாரி - 26
88 சாந்தி சற்குணம் - 40
89 சத்தியநாதன் யோகநாதன் - தொழிலாளி - 26
90 சதாசிவம் வேலுப்பிள்ளை - தொழிலாளி - 50
91 சதாசிவம் சிவலிங்கம் - தொழிலாளி - 45
92 சின்னப்பிள்ளை விஜயகுமார் - 20
93 சின்னத்துரை பத்மநாதன் - 26
94 சின்னத்துரை யோகராசா - 29
95 சின்னத்தம்பி நடராசா - 34
96 சின்னத்தம்பி சுந்தரம் - தொழிலாளி - 30
97 சின்னத்தம்பி சபானந்தம் - தொழிலாளி - 28
98 சின்னராசா தெய்வேந்திரன் - 23
99 சீனித்தம்பி கந்தசாமி - 45
100 சீனித்தம்பி சுப்பிரமணியம் - தொழிலாளி - 26
101 வடிவேல் முத்துகுமார் - தொழிலாளி - 17
102 வடிவேல் அழகநாயகம் - தொழிலாளி - 30
103 வடிவேல் தெய்வநாயகம் - தொழிலாளி - 17
104 வடிவேல் சந்திரசேகரராகன் தொழிலாளி 42
105 வண்ணமணி மணிவண்ணன் - 20
106 வீரன் இராசையா - 35
107 வீரன் புஸ்பராசா - 32
108 வீரன் செல்வராசா - 29
109 ரட் ணம் ஜெயசீலன் - 24
110 லலித் துரைராசா - தொழிலாளி - 49

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# மல்லாவி படுகொலை 24 யூலை 1996




முல்லைத்தீவு மாவட்டத்தில் யாழ்-கண்டி வீதிக்கு மேற்கே மாங்குளச் சந்தியிலிருந்து கிட்டத்தட்ட பதினைந்து கி.மீ. தூரத்தில் மல்லாவி அமைந்துள்ளது. 1996ஆம் ஆண்டில் உள்நாட்டுப் போரினால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து மல்லாவிப் பிரதேசத்தில் மல்லாவிச் சந்தியைச் சுற்றி மக்கள் செறிவாக வாழ்ந்தார்கள்.

24.07.1996 அன்று மு.ப 11:15 மணியளவில் மல்லாவிப் பகுதியில் விமானப் படையின் கிபிர் விமானங்கள் நடத்திய குண்டுத்தாக்குதலில் பத்துப் பொதுமக்கள் உடல்சிதறி உயிரிழந் தனர். பதினைந்து பேர் காயமடைந்தனர்.

24.07.1997 விமானத்தாக்குதலில் பாதிக்கப் பட்ட பா.சுகந்த்தினி கருத்து தெரிவிக்கையில்,
“சம்பவ தினமன்று எனது அப்பா கடைக்குச் செல்லும்போது சிறீலங்கா விமானம் குண்டு போட்டதில் அவருக்குக்கால் இல்லாமற் போனது. அதிலிருந்து மிகவும் கஸ்ரப்பட்டு வாழ்கிறோம். இந்தச் சம்பவத்தில் ஒன்பது பேர் இறந்தும் பலர் காயங்களுக்கு உள்ளாகியும் இருந்தார்கள். நாங்கள் ஒன்பது சகோதரர்கள். இந்நிலையில் கண்ணேலாத நிலையிலும் எனது அம்மாதான் எம்மை வளர்த்து வரு கிறார். எங்களைப் போல் நிறையப் பிள்ளைகள் சிறீலங்கா இராணுவத்தினராற் பாதிக்கப் பட்டு கஸ்ரப்பட்டு படிக்கவே வசதி இல்லாத நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். அந்தநிலையிற் தான் நாங்களும் இருக்கிறோம்.”

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சிவலிங்கம் சிந்துஜா - குழந்தை - 02
02. இராமு பாக்கியநாதன் - விவசாயம் - 21
03. தியாகராஜா பிரேமதாஸ் - விவசாயம் - 28
04. கதிரவேலு ஜனகராஜ் - விவசாயம் - 21
05. விசுவலிங்கம் செல்லம்மா - வீட்டுப்பணி - 64
06. சின்னப்பொடி கதிரவேல் - தொழிலாளி - 59
07. சுப்பிரமணியம் மணிவேல் - தொழிலாளி - 20
08. சிவலிங்கம் சந்தியா - குழந்தை - 2
09. சவரிமுத்து பாலகுமார் - விவசாயம் - 56

இச்சம்பவத்தில் காயப் பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. இளையதம்பி வரப்பிரகாசம் - 75
02. இராசையா கார்திகேயன் - 63
03. கந்தையா வேலாயுதம் - 62
04. கறுத்தான் வேலாயுதம் - 45
05. பாலகுமார் ஜசிந்தா - 26
06. பாலராசா -
07. தியாகராசா நிரோசன் - 11
08. தேசிங்கு கருணாநிதி - 40
09. சுந்தரலிங்கம் றசிதா - 22
10. சி.கணபதிப்பிள்ளை - 50
11. சின்னப்பு சுந்தரம் - 72
12. சின்னத்துரை நியூமன் - 20
13. சின்னத்துரை சசீந்திரா - 20
14. சின்னையா சிவநேசன் - 21
15. சிவபாதம் சுகன்ஜா - 22

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# அக்கராயன் அரசினர் வைத்தியசாலை எறிகணை வீச்சு - 15 யூலை 1997

கிளிநொச்சி மாவட்டத்தின் தென்மேற்கே கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவில் காட்டுவளம் நிறைந்த ஒரு கிராமமாக அக்கராயன் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராம மக்களின் பிரதான தொழிலாக விவசாயமும் கூலித் தொழிலும் உள்ளது. இங்குவாழும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வைத்தியசாலை, பாடசாலை, சந்தை, வழிபாட்டுத் தலங்கள், கடைகள், மற்றும் சேவை நிலையங்கள் போன்றன அமைந்துள்ளன.




ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து கிளிநொச்சி நோக்கி “சத்ஜெய” இராணுவ நடவடிக்கை படையினரால் மேற்கொள்ளப் பட்டது. இதனால் மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயரத் தொடங்கினார்கள். இவ் இராணுவ நடவடிக்கையினால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையும் தன்னுடைய சேவையைத் தொடரமுடியாத நிலையில் அக்கராயன் வைத்தியசாலையில் தற்காலிகமாக இயங்கத் தொடங்கியது.

கிளிநொச்சி நோக்கி முன்னேறிய படையினர் மக்களின் வாழ்விடங்கள், வழிபாட்டுத் தலங்கள், வைத்தியசாலைகள் போன்றவற்றின்மீது விமானத் தாக்குதல்களையும், எறிகணைத் தாக்குதல்களையும் மேற்கொண்டனர். கிளிநொச்சியில் முகாமிட்டிருந்த இராணுவத்தினரால் 15.07.1997அன்று இரவு 7.00 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட எறிகணைகள் அக்கராயன் வைத்தியசாலைப் பணியாளர் விடுதியின் மீதும் அதனையண்டிய பிரதேசத்திலும் வீழ்ந்து வெடித்தன. விடுதியினுள் செய்தி கேட்டுக்கொண்டிருந்த வைத்தியசாலையில் சுத்திகரிப்பாளராகக் கடமையாற்றும் கணபதியும் அவரது குடும்பத்தினரும் வைத்தியசாலை விடுதிமீது வீழ்ந்த எறிகணைத் தாக்குதலினால் உயிரிழந்தார்கள். இந்த எறிகணைத் தாக்குதலில் மூன்று பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழக்க, படுகாயமடைந்த இருவரில் ஒருவர் மல்லாவி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்தார். இவருடைய மகளான கமலவேணிக்கு கால் துண்டிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் நினைவாக வைத்தியசாலையில் கணபதி என்னும் பெயரில் மண்டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. அந்தோணி இராமன் - சுகாதார ஊழியர் - 65
02. அந்தோணி கணபதி சுகாதார ஊழியர் - 47
03. கணபதி கேதாரகௌரி - கமம் - 38
04. கணபதி உமாசங்கர் - மாணவன் - 11

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)






# கனத்த நினைவு சுமந்து 41 ஆண்டுகள்

# யூலைப் படுகொலை



தங்கத்துரை



குட்டிமணி



ஜெகன்

வெலிக்கடைச் சிறையில் இனவெறியின் கோரத் தாக்குதலுக்கு நெஞ்சுகொடுத்து, மண்ணில் வீரவிதையாகிவிட்ட தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன், நடேசதாசன், தேவன், சிவபாதம் மாஸ்ரர், சிறிகுமார் ஆகிய மாவீரர்களுக்கு


## வீர வணக்கம் செலுத்துகின்றோம்.

## கறுப்பு யூலையின் ஆண்டுகள் நீண்டன...

தாரது கொதிக்கும் தட்டினில் தமிழனைக்...
கோர வெறியுடன் கொன்றது சிங்களம்!
பாரதிர்ந்திட கத்திய மங்கையைச்
சோரவே செய்தனர் சிங்களக் காடையர்!
மண்ணினைப் பார்ப்பேன் மறையுமுன் என்றவன்
கண்ணினைக் கழற்றிக் காலால் மிதித்தனர்!
என்னத்தைச் செய்வோம் என்ற தமிழினம்
கன்னத்தில் கைவைத்துக் காத்துக் கிடந்தது!
கறுப்பு யூலையின் ஆண்டுகள் நீண்டன!
வீர விதையொன்று இம்மண்ணில் நீண்டு வளர்ந்தது!
கோரவெறியினைக் கொண்ட சிங்ளம் நின்று
திகைத்தது!
வெறுப்புடன் பார்த்த தமிழனைச் சிங்களம்
வெறித்துப் பார்த்தது,

# கறுப்பு யூலை 1983

## உயிர்த்தொழுந்த நாட்கள்



அமைதிபோல் தோற்றம் காட்டின எல்லாம்
துயின்று கொண்டிருக்கும் எரிமலை போல.
மீண்டும் காற்றில் மண் வாங்கி
மாரி மழைநீர் உண்டு
பறவைகள் சேர்ந்த செடிகொடி வித்துகள்
பூவேலைப்பாட்டுடன் நெய்த
பச்சைக் கம்பளப் பசுமைகள் போர்த்து
துயின்று கொண்டிருக்கும் எரிமலை போல
அமைதியாய்த் தோற்றியது கொழும்பு மாநகரம்.
சித்தன் போக்காய் தென்பாரதத்தில்
திரிதலை விடுத்து மீண்ட என்னை
"ஆய்போவன்" என வணங்கி
ஆங்கிலத்தில் தம் உள்ளக்கிளர்ச்சியை
மொழி பெயர்த்தனர் சிங்கள நண்பர்கள்.
கொதிக்கும் தேநீர் ஆறும் வரைக்கும்
உணவகங்களிலும்
பஸ்தரிப்புகளில் காத்திரு பொழுதிலும்
வழி தெருக்களிலே
கையை அசைக்கும் சிறு சுணக்கடியிலும்
திருமலைதனிலே படுகொலை யுண்ணும்
தமிழருக்காகப் பரிந்துபேசுதலும்
பிரிவினைக் கெதிராய்த் தீர்மானம் மொழிதலும்
இன ஒற்றுமைக்கு
பிரேரணைகளும் ஆமோதிப்பும்
இவையே நயத்தகு நாகரிகமாய்
ஒழுகினர் எனது சிங்கள நண்பர்கள்.

*

வழக்கம்போல வழக்கம்போல
அமைதியாய் திகழ்ந்தது கொழும்புமாநகரம்.
கொழும்பை நீங்கி
இருபது கி.மீ. அப்பால் அகன்று
கற்கண்டை மொய்த்த எறும்புகள் போன்று
ஆற்றோரத்து மசூதிகள் தம்மை
வீடுகள் மொய்த்த
மல்வானை என்ற சிறுகிராமத்தில்
களனி கங்கைக் கரையில் அமர்ந்து
பிரவாகத்தில் என் வாழ்வின்பொழுதை
கற்கள் கற்கள் கற்களாய் வீசி
ஆற்றோரத்து மூங்கிற் புதரில்
மனக் குரங்குகளை இளைப்பாறவிட்டு
அந்த நாட்களின் அமைதியில் திளைத்தேன்.
தனித் தனியாகத் துயில் நீங்கியவர்
கிராமமாய் எழுந்து
"இந்நாளைத் தொடர்வோம் வருக" என
பகலவனதன்னை எதிர் கொண்டிடுதல்
ஏனோ இன்னும் சுணக்கம் கண்டது.
கருங்கல் மலைகளின் "டைனமற்" வெடிகள்
பாதாள லோகமும் வேரறுந்தாட
இன்னமும் ஏற்றப் பட்டிடவில்லை
இன்னமும் அந்தக் கடமுடா கடமுடா
"கல்நொருக்கி" யந்திரஓட்டம் தொடங்கிடவில்லை
பஸ்தரிப்புகளில்
"றம்புட்டான்" பழம் அழகுறக்குவித்த
தென்னோலைக் கூடைகள் குந்திடவில்லை,
நதியினில் மட்டும்
இரவு பகலை இழந்தவர் போலவும்,
இல்லாமையின் கைப் பாவைகள் போலவும்
பழுப்புமணல் குழித்துப் படகில் சேர்க்கும்
யந்திர கதியுடைச் சிலபேர் இருந்தனர்.
எனினும் சூழலில் மனுப்பாதிப்பு
இவர்களால் இல்லை.

*

தூர மிதக்கும் ஏதோ ஒருதிண்மம்
நினைவைச் சொறியும்.
இரு கரைகளிலும் மக்களைக் கூட்டி
எழுபத்தொன்று ஏப்பிரல் மாதம்
நதியில் ஊர்வலம் போயிற்றன பிணங்கள்
இளமைமாறாத சிங்களப் பிணங்கள்.
எழுபத்தேழின் கறுத்த ஆகஸ்டில்
குடும்பம் குடும்பமாய் மிதந்து
புலம் பெயர்ந்தவைகள் செந்தமிழ்ப் பிணங்கள்
(அதன் பின்னர்கூட இது நிகழ்ந்துள்ளதாம்)
இப்படி இப்படி எத்தனை புதினம்
நேற்று என் முஸ்லீம் நண்பர்கள் கூறினர்.
வாய்மொழி இழந்த பிணங்களில் கூட
தமிழன் சிங்களன் தடயங்கள் உண்டோ!

*

கும்பி மணலுடன் கரையை நோக்கிப்
படகு ஒன்று தள்ளப்பட்டது.
எதிர்ப்புறமாக மரமேடையிலும் ஆற்றங்கரையிலும்
குளிப்பும் துவைப்புமாய்
முஸ்லீம் பெண்களின் தீந்தமிழ் ஒலித்தது.
பின்புற வீதியில்
வெண்தொப்பி படுதா மாணவமணிகளின்
இனிய மழலைத் தமிழ்கள் கடந்தன.
காலைத் தொழுகை முடிந்தும் முடியாததும்
மசூதியிலிருந்து இறங்கிய மனிதர்கள்
என்னை அழைத்தனர்.
"கலவரம்" என்று கலவரப்பட்டனர்.
இலங்கையில் கலவரம் என்பதன் அர்த்தம்
நிராயுதபாணித் தமிழ்க் குடும்பங்களை
சிங்களக் காடையும் படையும் தாக்குதல்.
சிலசில வேளை முஸ்லீம்களுக்கும்
இது நிகழ்ந்திடலாம்.
தமிழரின் உடைமை எரியும் தீயில்
தமிழரைப் பிளந்து விறகாய் வீசும்
அணுயுகக் காட்டு மிராண்டிகள் செய்யும்
கொடுமைகள் தன்னை எடுத்துச் சொல்லினர்.
பருந்தின் கொடுநிழல் தோய்ந்திடும் கணத்தில்
தாயின் அண்மையைத்
தேடிடும் கோழிக் குஞ்சாய்த் தவித்தேன்.
தமிழ் வழங்குமென் தாய்த் திருப்பூமியின்
"தூர இருப்பே" சுட்டதென் நெஞ்சில்
தப்பிச் செல்லும் தந்திரம் அறியா
மனப் பதைபதைத்தது.
தென் இலங்கை என் மன அரங்கில்
போர் தொடுத்த ஓர் அந்நிய நாடாய்
ஒரு கணப்பொழுதில் சிதைந்து போனது.

*

ஒருமைப்பாடு என்பது என்ன
அடிமைப்படுதலா?

*

இந்தநாடு எங்கள் சார்பாய்
இரண்டுபட்டது என்பதை உணர்ந்தேன்.
நாம் வாழவே பிறந்தோம்.
மரண தேவதை இயற்கையாய் வந்து
வருக என்னும் வரைக்குமிவ் வுலகில்
இஷ்டப்படிக்கு
பெண்டு பிள்ளைகள் தோழர்கள் என்று
தனித்தும் கூடியும் உலகவாழ்வில்
எங்களின் குரலைத் தொனித்து
மூக்கும் முழியுமாய் வாழவே பிறந்தோம்.

*

எமது இருப்பை
உயர்ந்தபட்சம் உறுதி செய்யும்
சமூக புவியியல் தொகுதியே தேசம்.
எங்கள் இருப்பை உறுதிசெய்திடும்
அடிப்படை அவாவே தேசப்பற்று.
நாடுகள் என்று இணைதலும் பிரிதலும்

சுதந்திரமாக
மானிட இருப்பை உறுதிசெய் திடவே.

*

இதோ எம் இருப்பு வழமைபோலவே
இன அடிப் படையில்
இந்த வருடமும் நிச்சயமிழந்தது.
நான் நீ என்பது ஒன்றுமே இல்லை.
யார்தான் யாரின் முகங்களைப் பார்த்தார்?
நாவில் தமிழ் வழங்கியதாயின்
தீயில் வீசுவார்.
பிரிவினை கோரிப் போராடும் தமிழர்
ஒருமைப்பாட்டிற்கு உழைக்கும் தமிழர்
இராமன் ஆளினும் இராவணன் ஆளினும்
நமக்கென்ன என்று ஒதுங்கிய தமிழர்
தமிழ்ப் பேரறிஞர், தமிழ்ப்பேதையர்
ஆண் பெண் தமிழர்கள்
முகத்தை யார் பார்த்தார்?
களை பிடுங்குதல் போல
தெரிவு இங்கும் இலகுவாய்ப் போனது.
“சிங்கள பௌத்தர்” அல்லாதவர்கள்
என்பதே இந்த தெரிவு.
கத்தோலிக்க சிங்களர் தம்மை
கழுத்தறுக்கும் கடைசி நிலைவரை
இணைத்துக் கொள்க
தற்போதைக்கு முஸ்லீம் மக்களைத்
தவிர்க்க என்பதே அடிப்படைத் தந்திரம்.
மசூதியை விட்டுத் தொழுகையின் நடுவே
இறங்கி வந்த மனிதர்கள் என்னை
எடுத்துச் சென்றனர்
ஒளித்து வைத்தனர்.
என்ன குற்றம் இழைத்தனன் ஐயா?
தமிழைப் பேசினேன் என்பதைத் தவிர்த்து
என்ன குற்றம் இழைத்தனன் ஐயா?
தமிழைப் பேசினேன் என்பதைத் தவிர்த்து
அவர்க்கும் எனக்கும் வேறுபாடேது?

*

நேற்றுப் பௌர்ணமி.
முட்டை உடைப்பதே பௌர்ணமி நாளில்
அதர்மமென் றுரைக்கும்
பௌத்த சிங்கள மனிதா சொல்க!
முட்டையை விடவும் தமிழ் மானிடர்கள்
அற்பமாய்ப் போனதன் நியாய மென்ன?

*

இரத்தம் தெறித்தும் சாம்பர் படிந்தும்
கோலம் கெட்ட காவி அங்கியுள்
ஒழுங்காய் மழித்த தலையுடன் நடக்கும்
இதுவோ தர்மம்?
ஏட்டை அவிழ்க்காதே
இதயத்தைத் திறந்து சொல்.
முட்டையை விடவும் தமிழ் மானிடர்கள்
அற்பமாய்ப் போனதன் நியாய மென்ன?

*

வன வாசத்தில்
இல்லாதது போன்ற இருப்பில்
கொதிப்புடன் சில நாட் கழிந்தது.
எங்கே எங்கே எமது தேசம்?
எமது இருப்பைத் தனித்தனியாகவும்
எமது இருப்பை அமைப்புகளாகவும்
உறுதிப்படுத்தும் புவிப் பரப்பேது?
இலங்கை அரச வானொலி சொன்னது
“அகதிகள் முகாம்களில் பாதுகாப்பாக
பாதிக்கப்பட்ட தமிழர்கள் உள்ளனர்.”
அகதிகள் முகாமே எங்கள் தேசமாய்
அமைதல் கூடுமோ?
இலங்கை அரசின் வானொலி சொன்னது
“அகதிகளான தமிழர்கள் தம்மை
பாதுகாப்புக்காய்
வடக்குக் கிழக்குப் பகுதிகள் நோக்கி
அனுப்பும் முயற்சிகள் ஆரம்ப மென்று.”
கப்பல்கள் ரயில்கள் பஸ் வண்டிகளில்
வடக்குக் கிழக்காய்ப் புலம் பெயர்கின்றோம்.
எங்கே எங்கே எம்தாய் நாடு?
எங்கே எங்கே,
நானும்நிமிர்ந்து நிற்கவோர் பிடிமண்?
நாடுகளாக இணைதலும் பிரிதலும்
சுதந்திரமாக நம் சமூக இருப்பை
உயர்ந்தபட்சம் உறுதி செய் திடவே.
இங்கு இப்பொழுதில்,
நான் நீ என்பது ஒன்றுமேயில்லை
பிரிவினை வாதிகள்
ஒருமைப்பாட்டையே உரத்துப் பேசுவோர்
காட்டிக் கொடுப்பவர்
அரசின் ஆட்கள்
கம்யூனிஸ்டுகள் பூர்சுவாக்கள்
யார்தான் முகத்தைப் பார்த்தாரிங்கு.
எமது நிலவுகை இப்படியானதே.
எங்கெம் நாடு எங்கெம் அரசு?

எங்கு எம்மைக் காத்திடப் படைகள்?
உண்டா இவைகள் உண்டெனில் எங்கே?
இல்லையாயின் ஏன் இவை இல்லை?

*

மசூதிகளாலே இறங்கி வந்து
என்னை எடுத்துச் சென்ற மனிதர்கள்
பொறுத்திரு என்றனர்.
விகாரைப் புறமாய் நடந்துவந்த
காட்டுமிராண்டிகள்
இன்னும் களைத்துப் போகவில்லையால்
அஞ்சி அஞ்சித்
தலைமறைந் திருத்தலே தற்போது சாத்தியம்.
இதுவே தமிழன் வாழ்வாய்ப் போகுமோ?

*

அப்படியாயின்
இதைவிட அதிகம் வாழ்வுண்டே சாவில்!
நிலவரம் இதுவெனில்
நாங்கள் எங்கள் தாய்நாட்டில் இல்லை:
அல்லதெம் தாய்நாடு எம்மிட மில்லை.
சாத்தியமான வாழ்வை விடவும்
அதிகம் வாழ்வு சாவினில் என்றால்
எங்கள் இளைஞர் எதனைத் தெரிவார்?

*

முஸ்லீம்போல தொப்பி யணிந்து
விடுதலை வீரனைக் கடத்தி வருதல்போல்
கொழும்புக் கென்னைக் கொண்டு வந்தனர்.
விடுதலை வீரனைப் போல்வதை விடவும்
விடுதலை வீரனாய் வாழ்வதே மேலாம்.

*

கொழும்பில் தொடர்ந்தஎன் வன வாசம்
கொடிது கொங்கிறீற் வனம் என்பதனால்,
அமெரிக்க நண்பன் ஒருவனின் வீட்டில்
என்னைப் பதுக்கி வைத்தனராயின்
சொல்க யார்தான் இந்த நாட்டில்?
அந்நியன்கூட இல்லை போலும்!
அந்நியனாகவும்,
ஏதுமோர் நாட்டின மாதல் வேண்டுமே!
அமெரிக்க நண்பரும் ஜப்பான் தோழியும்
இஷ்டம் போல அளந்தனர் கொழும்பை
காட்டு மிராண்டிக் கைவரிசைகளின்
பாதகக் கணங்களைப்
புகைப்படச் சுருளில் பதித்துக் கொண்டனர்.
அங்கு என் வாழ்வின் பெரியபகுதி
பூனைகளோடும், பறவைகளோடும்!

*

வானொலி எனக்கு ஆறுதலானது
பாரதத்தின் கண்களாக
தமிழகம் விழித்து
உலகை உசுப்பும் ஓசையைக் கேட்டேன்.
சுரங்கமொன்றுள் மூடுப்பட்டவர்
தலைக்குமேலே நிலம் திறபடும்
துளைப்பு ஓசை செவிமடுத்தது போல்
புத்துயிர் பெற்றேன்.
உலகம் உள்ளது, உலகம் உள்ளது.
உலகின் வலிய மனச் சாட்சியினை
வியட்னாம் போரின் பின்னர் உணர்ந்தேன்.
காட்டு மிராண்டிகள் திடுக்குற
எழுந்தது எங்கும் உலக நாரீகம்
இந்த நாட்டில் எனக்கிடமில்லை,
இந்த உலகில் எனதிடமுள்ளது.
ஆயின்,
எங்கென் நாடு? எங்கென் நாடு?

*

வானொலிப் பெட்டியை வழமைபோல் திறந்தேன்
வழமை போலவே
ஒப்பாரிவைத்தது தமிழ் அலைவரிசை.
இனவெறிப் பாடலும் குதூகலஇசையும்
சிங்கள அலையில் தறிகெட எழுந்தது.
இதுவே இந்த நாட்டின் யதார்த்தம்
சிறைச் சாலையிலே கைதிகளான
எங்கள் நம்பிக்கை ஞாயிற்றின் விதைகள்
படுகொலைப்பட்ட செய்தி வந்தது
கிளாரினட் இசையின் முத்தாய்ப்போடு.
யாரோ எவரோ அவரோ இவரோ
அவஸ்தையில் இலட்சம் தலைகள் சுழன்ற
அந்தநாட்கள் எதிரிக்கும் வேண்டாம்
பாண்டியன் வாயிலில் கண்ணகியானது
சன்னதம் கொண்ட எனது ஆத்மா.
மறுநாட் காலை அரசு நடத்தும்
“தினச்செய்தி” என்னும்
காட்டு மிராண்டிகளின் குரலாம் தினசரி
“பயங்கர வாதிகள் கொலை” என எழுதி
எமது புண்ணில் ஈட்டி பாய்ச்சியது.

குற்றம் என்ன செய்தோம் சொல்க!
தமிழைப் பேசினோம்.
இரண்டாம் தடவையும் காட்டும்ராண்டிகள்
சிறையுட் புகுந்தனர் கொலைகள்விளுந்தன்
கிளாறினட் இசையுடன் செய்தியும் வந்தது.

*

உத்தமனார்,
காட்டுமிராண்டித் தனங்களைத் தொகுத்து
உத்தியோக தோரணையோடு
“சிங்கள மக்களின் எழுச்சி” என்றார்
தென்னை மரத்தில் புல்லுப் புடுங்கவே
அரசும் படையும் ஏறிய தென்றார்.
உலகம் உண்மையை உணர்ந்து கொண்டது.

*

துப்பாக்கிச் சன்னமாய் எனது ஆத்மாவை
ஊடுருவியது,
விமலதாசனின் படுகொலைச் செய்தி.
ஒடுக்குதற் கெதிராய் போர்க்களம் தன்னில்
பஞ்சமர்க்காகவும்,
தமிழைப் பேசும் மக்களுக்காகவும்,
உழைப்பவர்களுக்காகவும்
“ஒருநல்ல கிறிஸ்தவனாய் இறப்பேன்” என்பாய்
இப்படி நிறைதுன் தீர்க்க தரிசனம்.
விடுதலைப் போரின் மூலைக்கல்லாய்
உன்னை நடுகையில்,
ஒருபிடி மண்ணை அள்ளிப் போடுமென்
கடமை தவறினேன் நண்ப,
ஆயிரமாய் நீ உயிர்த்தே எழுக!

*

“அடக்கினேன்
எழுபத்தொன்றில் கிளர்ச்சியை நானும்
பிரிவினைப் போரை வேரறுத்திடுதல்
ஏன் இவ்வரசுக்கு இயலவில்லை?”
சிறிமா அம்மையார் திருவாய் மலர்ந்தார்.
“நரபலியாகத் தமிழ் இளைஞரை
வீடுவீடாக கொன்று குவிப்பீர்”
மறைபொருள் இதுவே-
மீண்டும் இளைஞரின் இரத்தம் குடிக்க
மனம் கொண்டாரோ,
காறி உமிழ்ந்தேன்.

*

வீட்டினுள் ஜன்னலால் புகுந்த றைபிள்
கலா பரமேஸ்வரனைக் காவு கொண்டதாம்
“அப்பாவி” என்று
முகத்தில் எழுதி ஒட்டிவைத்திருக்குமே! -
முகத்தை யார் பார்த்தார்.....
இப்படியாக ஐம்பது தமிழர்கள் யாழ்ப்பாணத்தில்-
முத்தமிட்டனர், செம்மண் பூமியை
பஸ்தரிப்புகளில் தேநீர்ச் சாலையில்
வழி தெருக்களில்
ஒருமைப்பாட்டை உரத்துப் பேசிய,
சிங்கள நண்பரை எதிர்பார்த்திருந்தேன்.
முற்போக்கான கோஷங் களோடு
கொழும்பு நகர வீதியை நிறைத்த
சிவப்புச் சட்டைச் சிங்களத் தோழரின்
முகங்களைத் தேடிய படிக்கு,
வீதிப்பக்கமாய் மொட்டை மாடியில்
கால்கடுக்க நெடுநாள் நின்றேன்.
எங்கே மறைந்தன ஆயிரம் செங்கொடி?
எங்கே மறைந்தன ஆயிரம் குரல்கள்?
கொடிகள் மட்டுமே சிவப்பாய் இருததா?
குரலல்மட்டுமே தோழமை இருந்ததா?
நான் உயிர்பிழைத்தது தற்செயலானது! -
முகத்தை யார் பார்த்தார்?

*

பரிதாபமாக என்முன் நிற்கும்
சிங்களத்தோழர் சிறுகுழுவே கலங்கிடல் வேண்டாம்.
உங்கள் நட்பின் செம்மைச் செழிப்பில்
சந்தேகம் நான் கொண்டிடவில்லை.
தற்போ துமது வல்லமை தன்னில்
நம்பிக்கை கொள்ள ஞாயமும் இல்லை.

*

சென்று வருக,
எனது உயிர்தப்பும் மார்க்கத்தில்
நின்று கதைக்க ஏதுபொழுது? என்றாலும்,
பின்னொருகால் சந்திப்போம்
தத்துவங்கள் பேச...

*

தமிழர் உடைமையில்
கொள்ளை போனதும் எரிந்ததும் தவிர்த்து

# 41 ஆண்டுகள் கடந்தபோதும் எம் நினைவில்




**லெப். செல்லக்கிளி** - புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான இவர் புகழ்பெற்ற திருநெல்வேலித் தாக்குதலில் வீரச்சாவை அனைத:துக்கொண்டவர்.

**லெப். சீலன்** - ஆரம்பகாலந்தொட்டு இயக்க வளர்சிக்காக தலைவருக்கு உறுதுணையாக இருந்த சீலன் புலிகளின் தாக்குதற் படையணியின் முதலாவது தளபதியாவார். மீசாலையில் சிங்களப் படையினரின் முற்றுகையில் காயப்பட்டு தப்பமுடியாத நிலையில் தன்னைச் சுட்டுவிட்டு ஆயுதத்தோடு தப்பும்படி சக தோழனுக்கு கட்டளையிட்டு புலிகளின் வீர மரபு ஒன்றிற்கு வித்திட்டு வீரச்சாவடைந்தார்.

**ஆனந்த்** - விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினரான ஆனந்த் மீசாலையில் சிங்களப்படையினரின் முற்றுகையில் காயப்பட்டு தப்பமுடியாத நிலையில் மூத்த தளபதி சீலனின் வழியில் தன்னையும் சுட்டுவிட்டு ஆயுதத்தோடு தப்புப்படி சக தோழனுக்கு கட்டளையிட்டு புலிகளின் வீர மரபினை பின்பற்றி வீரச்சாவடைந்தார்.



**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**




'Based on the true story of a doctor
who served in the killing fields of Sri Lanka”
July 27th 2024 at 1:00PM
at Woodside Cinema
முள்ளிவாய்க்கால்
இனவழிப்பின்
சாட்சியம்
Dr. T. Varatharajah in
The Lamp of Truth
பொய்யாவிளக்கு


JATHU RENOVATION
Free!
ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free
Estimate!
Call today
$50 OFF
Let us help with...
● Replacement (Door & Windows)
● Custom Door & Windows
● Front Door & Patio Door
● Garden Door
● Door & Windows Re-Caulking (Important)
● Painting Doors & Windows
● Basement Separate Entrance Door
● Home Painting
● Spotlights installation
● California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# ஆனைக்கோட்டையில் நடைபெறும் தொல்லியல் ஆய்வு!

## பூர்வாங்க அறிக்கை

09.07.2024

இலங்கையின் பூர்வீகக் குடியிருப்பு மையங்கள் பற்றி தென்னாசிய தொல்லியலாளர்களால் அறியப்பட்ட இடங்களில் ஒன்றாக ஆனைக்கோட்டை காணப்படுகிறது.

இதற்கு முக்கிய காரணம் 1980 ஆம் ஆண்டு பேராசிரியர் ரகுபதி அவர்களால் அடையாளப்படுத்தப்பட்டு பின்னர் பேராசிரியர் இந்திரபாலா, பேராசிரியர் சிற்றம்பலம், பேராசிரியர் கிருஷ்ணராஜா பல்கலைக்கழக நூலகராக இருந்த ஆ.சிவனேசசெல்வன் ஆகியோரும் மற்றும் பொருளியல், புவியியல், தமிழ்த்துறை ஆசிரியர்கள்தும் மாணவர்களதும் பங்களிப்போடு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக 2300 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த இரண்டு மனித எலும்பு கூடுகளும் அதன் ஒரு எலும்புக்கூட்டின் தலை மாட்டுப்பகுதியில் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்ட முத்திரை மோதிரம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டன.

ஆனால் அந்த அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து தொல் பொருட்களையும் 1988 ஆம் ஆண்டு நாம் முழுமையாக இழந்துவிட்டோம். கண்டுபிடிக்கப்பட்ட இடத்தை பார்வையிடுவதற்கு பிறர் வருகின்ற போது பெருமையோடு காட்டக் கொள்ளக்கூடிய அளவுக்கு ஆனைக்கோட்டையின் அகழ்வு இடம் கருத்தில் கொள்ளக்கூடியதாக இன்று வரை இருக்கவில்லை.

இந்த நிலையில் தான் 1980 களின் பின்னர் பலரால் ஆனைக்கோட்டையில் அகழ்வு செய்யப்பட வேண்டும் என்று விரும்பி இருந்தாலும் அந்த விருப்பம் 44 ஆண்டுகளுக்கு பின்னர் இப்பொழுதுதான் நடைமுறைக்கு வந்துள்ளது.

1980 களில் இலங்கையில் மட்டுமின்றி தென்னாசியாவிலும் அகழ்வாய்வுக்குரிய நவீன தொழில் நுட்ப வசதிகள் இருக்கவில்லை.







இப்பொழுது நவீன தொழில் நுட்பவசதிகள் பல மாற்றங்களோடு வளர்ச்சி அடைந்துள்ளன. அந்த வசதிகள் அனைத்தையும் நாம் பயன்படுத்துகிறோம் என்று பெருமை கொள்ளாவிட்டாலும் முடிந்த அளவு நவீன வசதிகளையும் வாய்ப்புகளையும் பயனபடுத்தி யாழ்ப்பாணத்தில் ஒரு விஞ்ஞான பூர்வமான மிகப்பெரிய ஒரு அகழ்வாராய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதில் நாம் திருப்தி அடைய இடம் உண்டு.



ஆனைக்கோட்டையில் இந்த அகழ்வாராய்ச்சியானது 20.06.2024 இல் சம்பிரதாய பூர்வமாகத் தொடங்கிய பொழுது அதனை முக்கியப்படுத்தி ஊடகங்கள் பலவற்றில் செய்திகள் வெளிவந்தன. ஆனால் இரண்டு வாரங்கள் கழித்தும் அங்கு என்ன நடக்கிறது என்ற கேள்வி பலருக்கு எழுகின்ற அதே நேரத்தில் ஒன்றும் கிடைக்கவில்லை. அதனால் தான் ஊடகங்களில் அது பற்றிய செய்திகள் வெளியிடப்படவில்லை என்ற விமர்சனங்களும் வருகின்றன.

இந்த நிலையில் இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பிருந்து பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொது நலன் விரும்பிகள், ஆர்வலர்கள் எனப்பலரும் அங்கு வருகை தந்திருக்கின்றார்கள். அவர்கள் அங்கு வந்து சில புகைப்படங்களை எடுத்து தமது முக நூல்களில் பதிவேற்றம் செய்திருக்கிறார்கள் எனினும் நாங்கள் எங்களுடைய செய்திகளை இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

அதற்கு முக்கிய காரணம் இலங்கைத் தொல்லியல் சட்டத்தில் ஓர் அகழ்வாய்வுக்கு அனுமதி வழங்குகின்ற பொழுது, பன்னிரண்டுக்கும் மேற்பட்ட நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. இந்த நிபந்தனைகள் பொதுவானவை. அதில் ஒரு நிபந்தனை அகழ்வாய்வு முடிந்து அதன் பெறுபேறுகள் சரியாக ஆவணப்படுத்துவதற்கு முன்னர் அதுபற்றிய செய்திகளை வெளியிடக் கூடாது என்பதாகும்.

நாங்கள் ஒரு தொல்லியல் ஆய்வாளர் என்ற வகையில் தொல்லியல் கட்டுப்பாடுகளுக்கு கட்டுண்டு நடக்கும் பொருட்டு. நாங்கள் இதுவரை செய்திகளை வெளியிடவில்லை.

எனினும் அங்கு என்ன நடைபெறுகிறது என்பதை பொது மக்கள் தெரிந்து கொள்வதும் அதை இட்டு ஊடகவியலாளர்கள் மிகுந்த ஆர்வத்தோடு கேள்வி எழுப்புவதும் விசாரணை செய்வதும் எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. அவற்றை ஓரளவு பூர்த்தி செய்யும் வகையில் சில விடயங்களை இங்கே நாங்கள் குறிப்பிடக் கூடியதாக இருக்கிறது.

இதுவரை ஆனைக்கோட்டையில் ஏறத்தாள 9 அடிக்கு மேல் 11 கலாச்சார மண்ணடுக்குகள் கண்டறியப்பட்டுள்ளன. நாலாவது கலாச்சாரமண்ணடுக்கில் பெறுமதியான பல தொல்பொருள் சான்றுகள் வருகின்றன. அந்தத் தொல்பொருள் சான்றுகளை தொடர்ந்து அகழ்வு செய்யப்படுகின்ற போது ஆனைக்கோட்டையில் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட ஆதி இரும்புக்கால அல்லது பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதை உறுதி செய்யக் கூடியதாக இருக்கும்.

அது மட்டுமல்லாமல் முன்னைய ஆய்வுகளில் கிடைக்காத அரியவகையான பல சான்றாதாரங்களும் கிடைக்கின்றன. இதில் அயல் நாடுகளுக்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையிலான தொடர்புகளையும் உறவுகளை அறியக் கூடிய சான்றுகளும் காணப்படுகின்றன.

இந்த நிலையில் ஆனைக்கோட்டையில் கிடைக்கின்ற சான்றுகளை வைத்து பார்க்கும் போது, 1970களில் விமலா பேக்லி என்ற பெஞ்சில்வேனிய பல்கலைக்கழக அரும்பொருள் ஆய்வாளர் கந்தரோடையில் அகழ்வு செய்த போது அவற்றின் கண்டுபிடிப்புகளை வைத்து கந்தரோடையில் வாழ்ந்த பூர்வீக மக்கள் தமிழகத்தில் இருந்து வந்திருக்கலாம் அல்லது இங்கு வாழ்ந்த மக்கள் தமிழகத்து மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கலாம்.

இந்த பண்பாட்டுக்குரிய மக்கள். கந்தரோடையிலிருந்து புத்தளம் வரை பரவி வாழ்ந்திருக்கலாம் என்று ஒரு கருத்தை முன்வைத்தார்.

அந்தக் கருத்தை எமது அகழ்வுகள் மேலும் உறுதி செய்கின்ற

அதே நேரத்தில், இந்த பண்பாட்டுக்கு முன்னரும் மக்கள் வாழ்ந்து இருக்கலாம் என்ற ஒரு சமிக்ஞை அல்லது சில ஆதாரங்கள் கிடைக்கின்ற வாய்ப்பு உண்டு.

தொடர்ந்தும் நாங்கள் அகழ்வு செய்யும் பொழுது தான் அவற்றை உறுதிப்படுத்தலாம். இந்த அகழ்வின் போது கண்டறியப்பட்ட சில மாதிரிகளை நாங்கள் நவீன காலக்கணிப்புக்கு உட்படுத்த இருக்கின்றோம்.

அந்தக் காலக் கணிப்புகள் மூலம் ஆனைக்கோட்டையின் பூர்வீக - தொன்மையான நாகரிகம் எப்போதிருந்து வளர்ந்து வருகிறது என்ற உண்மைகள் வெளிவரும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

அகழ்வாய்வு முடிந்து ஓரிரு வாரங்களுக்குள் நாங்கள் அறிக்கையாக நூலாக தொல்லியல் திணைக்களத்துக்கு சமர்ப்பிப்போம். அங்கு கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து ஆதாரங்களுக்குமான உண்மைகளை மக்களுக்கும் ஊடகங்களுக்கும் தெரியப்படுத்துவோம்.

அதுவரை இந்த அகழ்வு பற்றி அங்கு கிடைத்த ஆதாரங்கள் பற்றி நாங்கள் வெளியிடுவது தொல்லியல் சட்ட விதிகளுக்கு முரணானது என்பதனால் அதை நாங்கள் மதித்து இந்த அகழ்வை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றோம்.

புலம்பெயர் நிதிப்பங்களிப்புடனும், யாழ்பாண மரபுரிமை மையத்தின் அனுசரணையுடன் இவ் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது குறிப்பாக 2019ம் ஆண்டு யாழ்ப்பாணம் வருகை தந்த 1980 ஆய்வுகளின் பங்கெடுத்தவரான வரலாற்றுத்துறையின் விரிவுரையாளராக அப்போதிருந்த சுப்பிரமணியம் விசாகன் தற்போது இலண்டனில் வசிப்பவர் இவ்விடத்தில் மீண்டும் ஓர் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் இவ்விடம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தை முன்வைத்தார் தற்போது இவ் எண்ணம் நிறைவேறி வருவதைக் காணலாம்.

இவ்வாய்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக தொல்லியல் துறையின் நான்காம், மூன்றாம், இரண்டாம் வருட மாணவர்கள் மற்றும் யாழ்ப்பாண, தென்னிலங்கை தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் விரிவுரையாளர்கள் ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப்பலரும் ஆர்வத்துடன் பங்கு பற்றி வருகின்றனமை மகிழ்ச்சி அளிக்கின்றது.

நன்றி

வாழ்நாள் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்
தொல்லியல் வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

நன்றி: ஈழத்து வரலாறும் தொல்லியலும் - முகநூல்













விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு
437.345.4203


முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை
13வது ஆண்டாக நடாத்தும்
ஊட்டும் கரங்கள்
தமிழும் இசையும்
இராப்போசன விருந்தும்
இன்பத் தமிழ்ப் பேச்சு
சிறப்புச் சொற்பொழிவாளர், தமிழ் கூறும்
நல்லுலகின் தன்னிகரற்ற பேச்சாளர், சொல்லின்
செல்வி, மொழி அரசி, , பேராசிரியை
பர்வின் சுல்தானா
நட்சத்திரா இசைக்குழுவின் இசையில்
Zee தமிழ் சரிகமப புகழ்
கோபாலகிருஷ்ணன்
கனேடிய தமிழ்ப் பாடகர்களுடன் இணைந்து வழங்கும்
இன்னிசை மாலை
அன்பளிப்பு
$150 VIP
$100
70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்க்கு மட்டும்
$75
யூலை 28, 2024
ஞாற்றுக்கிழமை - 5:30PM
METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)
தொடர்புகளுக்கு
ஈழநாடு பரமேஸ்
416-841-9600
eelanadu1993@gmail.com


"श्रीलंका में व्यवस्थित जातिसंहार चल रहा है, हम इसे बर्दाश्त नहीं कर सकते हैं या हम मूक दर्शक नहीं हो सकते हैं"।
-1983 में
ब्लैक जुलाई दंगों के दौरान
भारत की प्रधानमंत्री माननीया इंदिरा गाँधी
"It is a Systematic genocide going on in Sri Lanka We cannot tolerate it or we cannot be a Silent spectator"
Indira Gandhi
Prime Minister of India
July-1983.

# சம்பந்தருக்குப் பிறகு?

13.07.2024



சம்பந்தர் எதை விட்டுச் சென்றிருக்கிறாரோ அங்கிருந்துதான் அடுத்த கட்டம் தொடங்கும். சம்பந்தர் எதை விட்டுச் சென்றிருக்கிறார்?

சம்பந்தர் சிதறிப்போன்தன் பலத்தைத் தானே உணராத ஒரு தமிழ்ச் சமூகத்தை விட்டுச் சென்றிருக்கிறார்.

சம்பந்தரின் வழி தமிழ் மக்களுக்கு எதைப் பெற்றுத் தந்திருக்கிறது என்பதனை இரண்டு தளங்களில் ஆராயலாம். முதலில் அனைத்துலக அளவில். இரண்டாவதாக உள்நாட்டுக்குள்.

அனைத்துலக அளவில் சம்பந்தர் தமிழ்மக்களின் மெய்யான பலம் எது என்பதைக் கண்டுபிடித்திருக்கவில்லை. தமிழ் மக்களின் துயரங்களுக்கெல்லாம் எது காரணமோ அதுதான் தமிழ் மக்களின் மெய்யான பலமும். அதுதான் தமிழ் மக்களின் புவிசார் அமைவிடம். அந்த அமைவிடம் காரணமாகத்தான் இனப்பிரச்சினை பிராந்தியமயப்பட்டது. பின்னர் பூகோளமயப்பட்டது. அந்த அமைவிடம் காரணமாகத்தான் திம்புவிலிருந்து ஒஸ்லோ வரையிலும் பேச்சு வார்த்தைகள் நடந்தன. அந்த அமைவிடம் காரணமாகத்தான் ஈழத்தமிழர்கள் பேரரசுகளின் இழுவிசைகளுக்குள் சிக்கிக் கிழிபடும் மக்களாக மாறியிருக்கிறார்கள். எனவே எது ஈழத் தமிழர்களின் துயரங்களுக்கெல்லாம் ஊற்றுமூலமாக இருக்கின்றதோ அதையே வெற்றிக்குரிய அடிப்படையாக மாற்றுவதில் சம்பந்தர் வெற்றி பெறவில்லை. அவர் ஈழத் தமிழ் அரசியலை பெருமளவுக்கு சர்வதேச மயநீக்கம் செய்வதிலும் பிராந்திய மயநீக்கம் செய்வதிலும் ஆர்வமாகக் காணப்பட்டார்.

இந்தியாவிடம் போனால் சிங்களமக்கள் கோபிப்பார்கள் என்று கருதி இந்தியாவின் அழைப்பை நிராகரித்தார்.அதுபோலவே ஜநாவில் பரிகார நீதியை கேட்க அவர் விரும்பவில்லை. அதாவது இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியை. அவர் கேட்கவில்லை. மாறாக நிலை மாறு கால நீதியைத்தான் சம்பந்தர் ஆதரித்தார். அதற்குரிய ஜநாவின் தீர்மானத்தில் அவர் பங்காளியாகவும் இருந்தார். ஆனால் “6 ஆண்டுகளாக ஒரு பரிசோதனையை செய்தோம் அதில் தோல்வி அடைந்து விட்டோம்” என்று சுமந்திரன் 2021ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து கூறினார். எனவே பரிகார நீதியும் இல்லை; நிலைமாறுகால நீதியும் இல்லை. இப்பொழுது ஜநாவில் ஒரு பலவீனமான சான்றுகளைச் சேகரிக்கும் அலுவலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இதுதவிர புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்களால் இயன்றதைச் செய்து இனப்படுகொலைக்கு எதிரான நீதியைக் கோரும் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேறியிருக்கிறார்கள். குறிப்பாக கனடாவில் குறிப்பிட்ட செல்லக்கூடிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால் அவற்றை எல்லாம் அடுத்தடுத்த கட்டத்துக்கு வளர்த்துச்செல்லத் தேவையான ஒரு அரசியல் தலைமைத்துவத்தை தாயகத்தில் இருந்து சம்மந்தர் வழங்கத் தவறினார். அதனால் அவர் இனப்பிரச்சினையை உள்நாட்டுக்குள் சுருக்க விரும்பிய சிங்களபௌத்த அரசுக் கட்டமைப்புக்குத் துணைபோனார் என்பதுதான் சரி. அதாவது சர்வதேச அளவில் சம்பந்தர் தமிழ் மக்களின் அரசியலை குறிப்பிடத்தக்க அளவுக்கு தோற்கடித்து விட்டார். இனப்பிரச்சனை எனப்படுவது சாராம்சத்தில் ஒரு அனைத்துலகப் பிரச்சினைதான். அதற்கு அனைத்துலகத் தீர்வுதான் உண்டு. உள்நாட்டுத் தீர்வு கிடையாது. எனவே இனப்பிரச்சினையை அதன் சர்வதேச, பிராந்தியப் பரிமாணங்களில் இருந்து வெட்டி எடுப்பது என்பது தமிழ் மக்களைத் தோற்கடிப்பதற்குச் சமம். சம்பந்தர் அதைத்தான் செய்தார்.

உள்நாட்டில் அவர் என்ன செய்தார்? யாழ்ப்பாணத்தில் அவருடைய இறுதி நிகழ்வு அதற்குச் சான்று. நூற்றுக்கணக்கானவர்கள்தான் அதில் பங்குபற்றினார்கள். அவருடைய கட்சி அவரை ஒரு முதுபெரும் தலைவர் என்று அழைக்கின்றது. ஆனால் ஒரு முதுபெரும் தலைவரின் பூதவுடல் எடுத்துவரப்பட்ட வழிநெடுக மக்கள் காத்திருந்து மலர் தூவவில்லை. அதுமட்டுமில்லை, அவருடைய கட்சித் தொண்டர்கள்கூட ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தவில்லை. அதைவிட முக்கியமாக, சம்பந்தரின் பூத உடல் அடுத்த நாள் விமானத்தில் எடுத்துச் செல்லப்படுவதற்கு இடைப்பட்ட இரவில் தந்தை செல்வா கலையரங்கில் ஓர் அறையில் விடாது சுற்றும் விசிறிகளின் கீழே அனாதையாக வைக்கப்பட்டிருந்தது என்ற செய்தி. அது மிகத் தோல்விகரமானது. சில கட்சி உறுப்பினர்கள் அந்த அறைக்கு வெளியே நின்று இருக்கலாம். ஆனால் ஒரு முதுபெரும் தலைவரின் உடல் ஓர் இரவு முழுவதும் அனாதையாக விடப்பட்டிருந்தமை என்பது சம்பந்தரின் அரசியல் தோல்வியை காட்டுகின்றது.

பொதுவாக ஊரில் ஒரு கிராமவாசி இறந்தால், இரவில் அந்த உடலைத் தனியே விட மாட்டார்கள். அந்த உடலுக்கு அருகே யாராவது உறங்குவார்கள். ஒரு குத்துவிளக்கு அல்லது மெழுகுதிரி கால்மாட்டில் தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கும். யாராவது தேவாரம் பாடுவார்கள் அல்லது ஜெபம் பண்ணுவார்கள். இடைக்கிடை பெண்கள் ஒப்பாரி வைப்பார்கள். ஆனால் சம்பந்தருக்கு தந்தை செல்வா கலையரங்கில் இவை எவையும் இருக்கவில்லை. சம்பந்தரின் தோல்வியை மதிப்பிட அது ஒன்றே போதும்.

நவீன தமிழ் அரசியலில் ஆகக்கூடிய ஆசனங்களைப் பெற்ற ஒரு கூட்டணி அவருடைய கையில் கொடுக்கப்பட்டிருந்தது. 22 ஆசனங்கள். ஆனால் கடந்த 15 ஆண்டுகளிலும் அந்த ஆசனங்களின் தொகை குறைந்து இப்பொழுது மொத்தம் 13 ஆசனங்கள். அவைகூட சம்பந்தரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கவில்லை. முதலில் ஆயுத மோதல்கள் முடிந்த கையோடு சம்பந்தர் கூட்டமைப்பைப் புலி நீக்கம் செய்தார். அதன்பின் படிப்படியாக சர்வதேச நீக்கம், பிராந்திய நீக்கம் செய்தார். கஜேந்திர குமார் அணி வெளியேறத்தக்க சூழ்நிலைகளை ஏற்படுத்தினார். அடுத்த கட்டமாக ஆயுதப் போராட்ட மரபில் வந்த பங்காளிக் கட்சிகள் விலகிப் போகக்கூடிய நிலைமைகளை அவருடைய பட்டத்து இளவரசர் ஏற்படுத்தினார். முடிவில் தமிழரசுக் கட்சி மட்டும் மிஞ்சியது. இப்பொழுது அதுவும் இரண்டாக உடைந்து நீதிமன்றத்தில் நிற்கின்றது. அதுமட்டுமல்ல, அவருடைய காலத்தில் கிழக்கில் வடக்கை எதிர்த்துக்கொண்டு தெற்குடன் கைகோர்க்கும் ஒரு கட்சி மேலிருந்து விட்டது. மேலும் கடந்த ஜனவரி மாதம் நடந்த கட்சித் தலைவருக்கான தேர்தலின்போது யாருக்கு செயலாளர் பதவி கொடுப்பது என்ற விவாதங்களில் திருகோணமலையா? மட்டக்களப்பா? எது உண்மையாகக் கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்துவது? என்ற ஒரு விவாதமும் எழுந்தது. அதாவது சம்பந்தரின் காலத்தில் கிழக்கில் உப பிரதேசவாதம் ஒன்றும் உற்பத்தி செய்யப் பட்டது. ஆயின், சம்பந்தர் தமிழரசியலை எங்கே கொண்டு வந்து விட்டிருக்கிறார்?

இந்த தோல்வி எங்கிருந்து வந்தது? சம்பந்தரின் அரசியல் வழியின் விளைவு அது.சிங்கள மக்களைப் பயமுறுத்தககூடாது என்று அவர் உறுதியாக நம்பினார். ஆனால் தமிழ் மக்களின் பயங்களை; கூட்டுக் காயங்களை; கூட்டுத் துக்கத்தை கூட்டு மனவடுக்களை அவர் பொருட்படுத்தவில்லை. ஆயுத மோதலுக்கு பின்னரான ஒரு சமூகத்தில் கூட்டுக் காயங்களுக்கும் கூட்டுத் துக்கத்துக்கும் கூட்டச் சிகிச்சையாக அமையவில்லை ஒரு அரசியலை் பண்புரு மாற்ற அரசியலை முன்னெடுத்திருக்க வேண்டிய ஒரு தலைவர் அவர். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை. செய்யத் தேவையான அரசியல் உள்ளடக்கம் அவரிடம் இருக்கவில்லை.

2009 மே மாதம் தோற்கடிக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் ஒரு விளைவுதான். அது மூல காரணம் அல்ல. மூல காரணம் இன ஒடுக்கு முறைதான். அதாவது இலங்கைத்தீவின் இனப்பல் வகைமையை ஏற்றுக்கொள்ளாமை. யுத்த வெற்றிகளின் மூலம் மூலகாரணம் மேலும் வீங்கித் தடித்தது. அது யுத்த வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்ற விரும்பவில்லை. மாற்றவும் முடியாது. ஏனென்றால் அது ஓர் இனப்படுகொலை.

போரில் வெற்றி பெற்ற ராஜபக்சக்கள் யுத்த வெற்றியை அடிப்படையாக வைத்து ஒரு கட்சியைக் கட்டி எழுப்பினார்கள். அதன் மூலம் யுத்த வெற்றிவாதத்துக்கு தலைமை தாங்கினார்கள். யுத்த வெற்றி வாதம் எனப்படுவது நாட்டைத் தொடர்ந்தும் பிளவுண்ட நிலையிலே பேணுவதுதான். வென்றவர்களும் தோற்றவர்களுமாக நாடு தொடர்ந்து பிளவுண்டிருக்கும். இவ்வாறு யுத்த வெற்றிவாதிகள் நாட்டைப் பிளவுண்ட நிலையில் பேணும்பொழுது தோற்கடிக்கப்பட்ட தரப்பின் தலைவராகிய சம்மந்தரோ “பிளவுபடாத இலங்கைக்குள்பிரிக்கப்பட முடியாத இலங்கைக்குள்” என்று மந்திரம் போல சொல்லிக் கொண்டு, சிங்கள மக்களின் பயங்களைப் போக்குகிறோம் என்று புறப்பட்டு, இறுதியிலும் இறுதியாக யுத்த வெற்றிவாதிகளால் தோற்கடிக்கப்பட்டார்.

யுத்தவெற்றி வாதம் எனப்படுவது, சிங்கள பௌத்த இனவாதத்தின் 2009க்கு பின்னரான “அப்டேட்டட் வேர்சன்”தான். யுத்தவெற்றி வாதமானது தொடர்ந்து ஒடுக்கு முறைகளையும் ஆக்கிரமிப்பையும் முன்னெடுத்துக் கொண்டிருக்க, அதாவது நாட்டைப் பிளவுண்ட நிலையிலே தொடர்ந்தும் பேண, சம்பந்தாரோ நேசக்கரம் நீட்டிக் கொண்டிருந்தார். முடிவில் யுத்த வெற்றி வாதம் சம்பந்தரின் வழியைத் தோற்கடித்தது. அவருடைய விசுவாசத்துக்கு பரிசாக எதிர்க்கட்சித் தலைவரின் மாளிகையை இறக்கும் வரை அவருக்கு வழங்கியது.

இப்படித்தான் சம்பந்தர் தோற்கடிக்கப்பட்டார். தென்னிலங்கையோடு தன்னை சுதாகரித்துக் கொள்வதற்காக அவர் வகுத்த வழியின் விளைவாக கூட்டமைப்பு உடைந்தது. முடிவில் அவருடைய தாய்க்கட்சியும் உடைந்து விட்டது. சம்பந்தர் தோற்றுப் போனார். தோல்வியுற்ற ஒரு தலைவராகத்தான் அவர் இறந்து போயிருக்கிறார். அவருடைய உடல் யாழ்ப்பாணத்தில் தனித்து விடப்பட்டிருந்த அந்த இரவிலிருந்து எதிர்காலத் தலைவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

எனவே இப்பொழுது தொகுத்துப் பார்க்கலாம். சம்பந்தர் தமிழ் மக்களைச் சிதறடித்து விட்டார். தமிழ் மக்களின் அடிப்படைப் பலங்களைப் பொருத்தமான விதங்களில் கையாளத் தவறி, தமிழ் மக்களைத் தனிமைப்படுத்தியிருக்கிறார். முடிவில் தானும் தனிமைப்பட்டுப் போனார். எனவே சம்மந்தருக்கு பின்னரான தமிழ் அரசியல் என்பது, சம்பந்தர் சிதறடித்தவற்றை சேர்த்துக் கட்டுவதுதான். சம்பந்தர் தமிழ் மக்களின் எந்தெந்த பலன்களைச் சிதறடித்தாரோ, அவற்றை எல்லாம் மீண்டும் ஒன்றிணைப்பதுதான். எந்தெந்த கட்சிகளை சிதறடித்தாரோ, அவற்றை எல்லாம் ஒன்றாக்குவதுதான். சம்பந்தருக்கு பின்னரான தமிழ் அரசியல் என்பது ஒன்று திரட்டும் அரசியலாக இருந்தால்தான் அது அதன் கடந்த 15 ஆண்டு கால தோல்வியின் தடத்திலிருந்து வெளியே வரலாம்.

இங்கேதான் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற தெரிவு  கால முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடந்தால், அதில் தமிழ் மக்களுக்கு ஒரே ஒரு தீர்க்கதரிசனமான தெரிவுதான் உண்டு. ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவது.ஒரு பொது நிலைப்பாட்டின் கீழ் தமிழ் மக்களை ஒன்றாக்குவது. சம்பந்தரின் வழியிலிருந்து விலகி வருவதென்றால் அதைவிட வேறு வழி இல்லை. சிதறடிக்கப்பட்டவற்றை ஒன்று சேர்ப்பது. பொழுது ஒரு புதிய மக்கள் இயக்கம் தோன்றியிருக்கிறது.

நன்றி: நிலாந்தன்







மண்ணை இரு கைகளாலும் குழைத்து வீட்டைச் சுற்றி வரிசையாகக் கட்டிய வரிச்சுகளுக்கிடையே வைத்துக் கொண்டிருந்த வசந்தன்,நெற்றியால் வழிந்த வியர்வையை துடைத்துபடி வானத்தை அண்ணார்ந்து வார்த்தான். சுற்றிலுமாக இருண்டிருந்தது. மண் கையை வழித்து விட்டபடி மெதுவாக எழுந்து நின்றான். அதிக நேரம் இருந்தபடியால், நாரிகொரித்ததுகூட இப்போது, அவனுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. இப்போது நினைக்கும்போதும் அவனுக்குச் சிரிப்பாக இருந்தது. இப்டியெரு வாழ்வு வருமென்று அவன் கனவிலும் நினைககவில்லை. வீட்டில் இருந்து கிணற்றடிக்குப் போவதென்றால்கூட கல்லுப்பதித்த நிலம். காலில் மண் படாமல் வாழ்ந்த அந்த வாழ்க்கை அர்த்தமுள்ளதா? நினைத்துப் பார்க்க அவனுக்குக் குழப்பமாக இருந்தது.

காட்டு விறகு சீராக எரிந்து கொண்டிருந்தது. சந்தோசமாக சமைத்துக் கொண்டிருந்த அம்மாவும், தங்கையும் எவ்வாறு இந்த மாற்றத்தை ஏற்றுக்கொண்டார்கள்? அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. நனைவுகள் அவர்கள் மனதை சுடவில்லையா? எத்தனை வசதியான வாழ்க்கை எவ்வாறு தூக்கியெறிய மனம் இடங்கெடுத்தது. அருகில் ஏதோ சிறகு அடிக்கும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அதே மணிப்புறா அன்றொரு நாள் பூவரச மரத்தில் கட்டிய கூட்டை செண்பகத்திடம் பறி கொடுத்துவிட்டு சோகமே உருவெடுக்க நின்றது. இன்றும் அவலத்துடன் அங்குமிங்கும் பறந்தது. என்வாக இருக்குமென்று பார்ப்பதற்காக எழுந்தவனின் கண்களில் தென்பட்டது மரத்தில் கீழ் உடைந்து கிடந்த முட்டையும் பிய்த்தெறியப்பட்ட கூடும். அவனுக்குத் தெரியும் மீண்டும் நல்லதொரு இடம் பார்த்து கூடு கட்டத் தொடங்குமென்று.

அம்மாவிடம் கூறிக்கொண்டு குளத்தடிக்கு போவதற்காக வெளிக்கிட்டான். துவாயை எடுத்துத் தோள்களில் போட்டவன் குளக்கட்டுப் பக்கமாக நடக்கத் தொடங்கினான். அல்லி இலைகளிடையே நீந்திக் கொண்டிருந்த சிறகைகள் இரண்டு சடசடவென இறகை அடித்தபடி வேகமாக வானில் எழுந்து பறந்தது. பட்டமரத்தில் அமர்ந்திரந்த நீர்க்காகம் ஒன்று சிறக இரண்டையும் விரித்து வைத்துக்கொண்டு அலகால் சீர்படுத்திக் கொண்டிருந்தது. அருகில் இருந்த பற்றைக்குள் இருந்த கீரி ஒன்று பதறியடித்துக்கொண்டு வீதியைக் கடந்து ஓடியது. இவை எல்லாவற்றையும் ரசித்துக்கொண்டே வந்தவனுக்கு “சுள்” எனக் காலில் ஏதொ கடிக்க “வெடுக்” என காலைத் தூக்கியவனுக்கு, பிறகுதான் தெரிந்தது கட்டெறும்பு வரிசையில் காலை வைத்துவிட்டோமென்று.

முன்பெல்லாம் எறும்பு வரிசையைக் கண்டால் “ஸ்பிறேயரில்” மண்ணெண்ணை எடுத்து அடித்துவிடுவான். இப்போது அவ்வாறு எண்ணத்தோன்றவில்லை. எறும்புகளைப் பார்க்க ஆச்சரியமாகத்தான் இருந்தது. யார் இவர்களிற்குச் சொல்லிக் கொடுத்தது. நிரை குலையாமல் வரிசையாகச் செல்லுங்கள் என்று. திடீரென அவனுக்கு ஆர்வம் ஏற்பட நிரை எங்கே செல்கின்றது என்று பார்க்க அதன் பின்னே சென்றான். முன்னால் சென்ற எறும்பு அங்கும் இங்கும் ஓடி பாதை காட்டியபடி சென்றது. பின்னால் செல்பவை தங்களின் முட்டைகளை சுமந்தபடி சென்றுகொண்டிருந்தன. எறும்பு வரிசை அருகில் கிடந்த பனையோலைக்குள் சென்றதும்.

அங்குமிங்கும் கலைந்தோடத் தொடங்கியது. என்னவென்று பார்ப்பதற்கு குனிந்தவனுக்கு அப்போதுதான் அதனுள் ஒழிந்திருந்த ஓணான் தென்பட்டது. நாக்கை நீட்டி நீட்டி ஒவ்வோர் எறும்பாக அது உணவாக்கிக் கொண்டிருந்தது. உள்ளுணர்வை ஏதோ ஒன்று தாக்க “சூய்” என்று கலைத்தான். சர சர என ஓணான் பற்றைக்குள் ஓடி மறைந்தது. பின்புதான் யோசித்தான், ஓணான் அரைகுறை வயிற்றோடு ஓடியிரக்குமே என்று. ஒன்று வாழ வேண்டுமானால் மற்றொன்று அழியத்தான் வேண்டுமா? அவனுக்கு குழப்பமாக இருந்தது. மெதுவாக எழுந்து குளத்தடியை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

******

முற்றத்து வேலியில் படர்ந்திருந்த அவரையின் பூக்களில் தேங்கியிருந்த பனி நீர் சொட்டுச் சொட்டாக நிலத்தில் வீழ்ந்து கொண்டிருந்தது. மண் திண்ணையில் அமர்ந்திருந்தபடி. தான் செய்த சிறிய தோட்டத்தை ரசித்துக் கொண்டிருந்தான் வசந்தன். வானில் ஏதோ இரையும் சத்தம் கேட்டது. என்னவென்று பார்ப்பதற்கு திண்ணையால் எழுந்து சென்று வானத்தை அண்ணார்ந்து பார்த்தான். காற்றைக் கிழித்தபடி இரண்டு “கிபிர்” விமானங்கள் ஒன்றன்பின் ஒன்றாகச் சென்று கொண்டிருந்தன. சிறது நேரத்தில் எங்கோ குண்டு வெடிக்கும் சத்தங்கள் தொடர்ச்சியாக் கேட்டன. “கிளிநொச்சிப் பக்கமாகத்தான் இருக்கும்” தனக்குள் கூறிக்கொண்டான்.


குசினிக்குள் இருந்துகொண்டு அம்மா புலம்புவது கேட்டது. அவவும் என்ன செய்வா பாவம். அப்பாவை இழந்த துயர், வீடுவாசல் இழந்த துயர், தொடர்ச்சியான துயர்கள். அவனுக்கே சலிப்பாகத் தான் இருந்தது. மெல்ல எழுந்து கிணற்றடிப் பக்கமாகச் சென்றான். ஒரு வாரத்திற்கு முன் நட்ட தேசிக்கன்றைக் காணவில்லை. களைகள் மூடிவிட்டது. குனிந்து களைகளைப் பிடுங்கினான். தேசி இலைகளை ஏதோ ஒரு புழு அரித்துக் கொண்டிருந்தது. சிறிய தடியொன்றை எடுத்து அவைகளை அகற்றினான். ஒரு தேசிக் கன்று வளரவே இத்தனை தடைகள் என்றால்?

தான் வாழ்ந்த சமுதாயத்தின் பிழைகள் தெரிந்தது. ஏன் பிறந்தோமென்று தெரியாமல் சாகும் அவலம் புரிந்தது. எதையெதையோ தேடி இழந்துவிட்ட நாட்கள் தெரிந்தது. இச் சமுதாயம் போராடக் கற்றுக் கொடுக்கவில்லை. எப்படியாவது பொருள் தேடத்தான் கற்றுக்கொடுத்தது.

காட்டுப் பக்கம் ஏதோ ஒரு மிருகம் அவலமாக அலறியது. கோடாரியால் காய்ந்த முதிரை மரத்தை தறித்துக்கொண்டிருந்த வசந்தன், கோடாரியை மரத்தில் சாய்த்துவிட்டு வெட்டிய குற்றி மேல் ஏறி அமர்ந்தான். போட்டிருந்த “வெனியன்” வியர்வையால் ஊறி, உடம்புடன் ஒட்டிக்கொண்டிருந்தது. தன் உடலும், மனமும் வன்னிக்கு வந்ததில் இருந்து ஏதோ மாற்றம் ஏற்பட்டிருந்தது அவனுக்குப் புரிந்தது. முன்பெல்லாம் ஏதோ ஒரு சோர்வான சிந்தனையே மனதை வட்டமிட்டுக் கொண்டிருக்கும். இப்போது அப்படியல்ல. எப்போதும் தெளிந்தபடியே மனம் இருக்கிறது. ஏனெனில் அவன் இயற்கையைப் புரிந்து கொண்டவன்.

வெட்டிய முதிரை விறகை சுமந்துகொண்டு வீட்டிற்குச் செல்லும் ஒற்றையடிப் பாதையில் இறங்கி நடக்கத் தொடங்கியவன் கண்களில், வீதியால் மக்கள் பொருட்களுடன் செல்வது தெரிந்தது. விறகை அருகில் போட்டவன், கைகளால் மேலில் பட்டிருந்த தூசுகளைத் தட்டியபடி நிமிர்ந்தான். “தம்பி, கிளிநொச்சிக்கு ஆமி வந்துட்டுதாம் நீங்கள் இன்னும் வெளிக்கிடேல்லையே?” என்றபடி இவனுடைய பதிலை எதிர்பார்க்காமல் முத்தையாக் கிழவர் சென்று கொண்டிருந்தார்.


நாங்களும் புறப்படுவோம் என்று நினைத்தபடி திரும்பியவனுக்கு, வாசலில் சோகத்துடன் நிற்கும் தாயும் தங்கையும் இவனையே பார்த்துக்கொண்டிருப்பது தெரிந்தது. அவர்களைப் பார்த்துப் பெருமூச்சுக்கலந்த சிரிப்புடன் வேய்ந்திருந்த ஓலைகளைக் கழற்றத் தொடங்கினான். எங்கிருந்தோ பறந்துவந்த மணிப்புறா கூரையில் அமர்ந்து அங்கும் இங்கும் பார்த்துவிட்டு முள்வேலியில் படர்ந்திருந்த அவரைக்கொடிக்குள் பறந்து சென்று புகுந்தது. வசந்தனின் காதுகளில் புறாக்குஞ்சுகள் கீச்சிடும் சத்தம் கேட்டது. அவனது முகத்தில் புன்னகை கோடிட்டது. இம்முறை மணிப்புறா செம்பகத்திடம் வென்று விட்டது.



\- களத்தில் 30.07.1997

உலக வணிகம் ULAGA VANIKAM

# 2025



# LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY



## உலக வணிகம் ULAGA VANIKAM

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல
அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள்
செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு
நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை
பெருகச் செய்யும். அது உங்கள் வணிக
முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது
உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

**தொடர்புகளுக்கு 437.345.4203**

# சம்பந்தர்: "பேசுவம்"

06.07.2024



சம்பந்தரின் மரணம் ஈழத்தமிழ்ச் சூழலில் எவ்வாறு பார்க்கப்படுகிறது என்பது ஈழத்தமிழர்களின் கூட்டு உளவியலின் வெளிப்பாடு என்றே கூறவேண்டும். அவருடைய பூதவுடல் யாழ்.நகரப் பகுதிக்கு அருகே வைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் நகரம் வழமைபோல இயங்கியது. அதன் ஒலிபெருக்கிகளில் சினிமாப் பாடல்கள் இசைக்கப்பட்டன. நகரம் ஏன் துக்கிக்கவில்லை?

சமூகவலைத்தளங்களில் ஒருபகுதி அவரை கௌரவமாக அஞ்சலித்தது. இன்னொருபகுதி கேவலமாக நிந்தித்தது. அது தமிழ் அரசியல் பண்பாட்டின் வீழ்ச்சியையும் காட்டியது. நவீன தமிழ்அரசியலில் குறிப்பாக சமூக வலைத்தளங்களின் காலத்தில் மீம்ஸ்களின் காலத்தில், அதிகம் கீழ்த்தரமாக நிந்திக்கப்பட்ட ஒரு தலைவராக சம்மந்தரைக் கூறலாம். அவருடைய இறப்பின் பின் அவரைப்பற்றி வரும் குறிப்புக்கள் பெரும்பாலும் அதைத்தான் காட்டுகின்றன

2009க்கு பின்னரான கொந்தளிப்பான ஒரு மனோநிலையின் விளைவுகளே அவை. இக்கொந்தளிப்பான கூட்டு உளவியலுக்குத் தலைமைதாங்கி ஈழத்தமிழரசியலை ஒரு புதிய பண்புருமாற்றத்தை நோக்கிச் செலுத்த வேண்டிய தவிர்க்கப்படவியலாத ஒரு பொறுப்பை காலம் அவருடைய கைகளில் கொடுத்தது. ஆனால் அதை அவர் எவ்வாறு கையாண்டார் என்பதை இப்பொழுது அவரை அஞ்சலித்தும் நிந்தித்தும் வரும் குறிப்புகள் நமக்கு உணர்த்துகின்றன.

ஈழத் தமிழர்களின் நவீனவரலாற்றில் நீண்டகாலங்கள் தலைமைப் பொறுப்பில் இருந்தவர்கள் இருவர். ஒருவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர். மற்றவர் சம்பந்தர். இருவருமே ஒப்பீட்டளவில் நீண்டகாலம் தமிழ்மக்களின் அரசியலை நிர்ணயித்தார்கள். குறிப்பாக சம்பந்தர் 2009க்குப்பின்னிருந்து கடந்த 15ஆண்டுகளிலும் தமிழ் அரசியலின் தவிர்க்கப்பட முடியாத முதிய தலைவராகக் காணப்பட்டார்.

அவருக்கு பின்வரும் முக்கியத்துவங்கள் உண்டு. முதலாவதாக அவர் ஒரு மூத்த தலைவர். இரண்டாவதாக அவர் கிழக்கை மையமாகக்கொண்டு எழுச்சிபெற்ற தலைவர். மூன்றாவதாக, அவர் நீண்டகாலம் தமிழ்மக்களின் அரசியலை தீர்மானித்தவர்களில் ஒருவர்.

அவருடைய நம்பிக்கைகளை பொறுத்தவரை சம்பந்தர் ஆயுதப் போராட்டத்தில் முழுஅளவு ஆதரவாளர் அல்ல. குறிப்பாக விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது கடுமையான விமர்சனங்களை கொண்டிருந்தார். எனினும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பொழுது அவர் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டார். தன்னை சுகாகரித்துக்கொண்டார். ஆனால் அதற்காக அவர் ஆயுதப் போராட்ட வழிமுறையை ஏற்றுக்கொண்டார் என்று பொருள் அல்ல. அதனை ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரான கடந்த 15 ஆண்டுகளிலும் அவருடைய வழி எதுவென்று தொகுத்துப் பார்த்தால் தெரியவரும்.

## சம்பந்தரின் வழி எது?

ஆயுதப்போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின் இலங்கை இனப் பிரச்சினைக்கு தீர்வு என்று சிந்தித்தால் அதாவது பிரிவினை அல்லாத வேறு எந்த ஒரு தீர்வைப்பற்றிச் சிந்தித்தாலும் அதற்கு சிங்களமக்களின் சம்மதம் அவசியம் என்று சம்பந்தர் நம்பினார். எனவே சிங்களமக்களை எப்படி அரவணைப்பது? அவர்கள் மனதில் இருக்கும் பகையுணர்வை, அச்சங்களை முற்கற்பிதங்களை எப்படி நீக்குவது? என்றும் அவர் சிந்தித்தார். ஆயுதப் போராட்டம் சிங்களமக்களை பகை நிலைக்குத் தள்ளிவிட்டது என்றும் அவர் நம்பினார். எனவே சிங்கள மக்களை பகை நிலைக்குத் தள்ளாத ஓர் அரசியல் வழியை அவர் கடைப்பிடித்தார். சிங்கள மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தீர்வைக் கண்டுபிடிப்பது என்று அவர் தீர்மானித்தார். அதை நோக்கியே கட்சியைச் செலுத்தினார்.

அதனால்தான் முதலில் கஜேந்திரகுமார் அணியை வெளியே விட்டார். அதனால்தான் சுமந்திரனை உள்ளே கொண்டு வந்தார். அதனால்தான் விக்னேஸ்வரனையும் உள்ளே கொண்டுவந்தார்.

2015ல்நிகழ்ந்த ஆட்சிமாற்றத்தில் சம்பந்தரின் பங்களிப்பு இருந்தது. அந்த ஆட்சி மாற்றத்தின் விளைவாக உருவாக்கப்பட்ட ரணில்-மைத்திரி அரசாங்கம் ஐநாவின் 30/1 தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது. நிலைமாறுகால நீதிக்கான அத்தீர்மானத்தின் பிரகாரம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான கட்டமைப்பு சார் மாற்றங்களைச் செய்ய வேண்டியிருந்தது. அதன்படி நாடாளுமன்றம் ஒரு சாசனப் பேரவையாக மாற்றப்பட்டு, ஒரு புதிய யாப்பை உருவாக்குவதற்காக ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. சம்மந்தர் அதில் முழுமையாக ஒத்துழைத்தார். அதுவரையிலும் இருந்த எல்லா யாப்புகளும் தமிழ்மக்களின் பங்களிப்பின்றி உருவாக்கப்பட்டவை என்பதனால், தமிழ்மக்களின் பங்களிப்போடு ஒரு புதிய யாப்பை உருவாக்க வேண்டும் என்றும் அவர் கனவு கண்டார். அதை நம்பித்தான் தமிழ்மக்களுக்கு ஒவ்வொரு பெருநாளின் போதும் வாக்குறுதிகளை வழங்கினார்.

அதுமட்டுமல்ல, மன்னாரில் நடந்த "தடம் மாறுகிறதா தமிழ் தேசியம்?" என்ற ஒரு கருத்தரங்கில், ஆயர்களின் முன்னிலையில், அவர் அந்த நம்பிக்கையை எப்படி வெளிப்படுத்தினார் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அதில் உரையாற்றிய நான் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டினேன். மூன்றாவது தரப்பு ஒன்றின் கண்காணிப்பு இன்றி, மூன்றாவது தரப்பு ஒன்றின் நெருக்குதல் இன்றி சிங்களபௌத்த அரசுக் கட்டமைப்பானது, இனப்பிரச்சினையைத் தீர்க்க முன்வராது என்று நான் அந்த உரையில் சுட்டிக்காட்டினேன். ஆனால் சம்பந்தர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. தலையை சாய்த்து மண்டைக் கண்ணால் என்னைப் பார்த்தபடி சொன்னார்... "சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதம் ஒரு தீர்வைத் தராது என்பது ஒரு வறண்ட வாதம் ஒரு வறட்டு வாதம்" என்று.

யாப்புருவாக்க முயற்சிகள் ஓர் இடைக்கால வரைபுவரை முன்னேறின. அந்த இடைக்கால வரைபை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து விவாதித்தபொழுது அதில் டிலான் பெரேரா ஆற்றிய உரையை இங்கு சுட்டிக்காட்டலாம். அது சம்பந்தரின் அரசியல் வழியை மிகக்கூர்மையாக வெளிப்படுத்தும் ஓர் உரை. "சம்பந்தரின் காலத்திலேயே ஒரு தீர்வைக் காணவேண்டும். அவரைப் போல விட்டுக்கொடுக்கும் ஒரு தமிழ்த் தலைவர் இனி வர மாட்டார்" என்று டிலான் உரையாற்றினார். அதுதான் உண்மை. ரணில் மைத்திரி அரசாங்கத்தோடு இணைந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஒரு புதிய யாப்பை உருவாக்குவதற்காக சம்பந்தர் அடியொட்ட வளைந்து கொடுத்தார். விளைவு என்ன?

யாப்புருவாக்க முயற்சிகளை அதன் பெற்றோரில் ஒருவராகிய மைத்திரிபால சிறிசேனவே 2018ல் காட்டிக்கொடுத்தார். சம்பந்தரின் கனவு கலைந்தது. அவர் தமிழ் மக்களுக்கு வழங்கிய எல்லா வாக்குறுதிகளும் பொய்த்துப்போயின. சிங்கள மக்களுக்கு நம்பிக்கை வரும் வரையிலும் விட்டுக் கொடுப்பதன் மூலம், ஒரு தீர்வைப் பெறலாம் என்ற அவருடைய நம்பிக்கை தோற்கடிக்கப்பட்டது. அந்த நம்பிக்கை மட்டும் தோற்கடிக்கப்படவில்லை. அதன் விளைவாக கட்சி அதுவரையிலும் வகித்து வந்த ஏகபோகத்தை இழந்தது. அடுத்த தேர்தலில் கட்சியின் வாக்குகள் சிதறின. அதுமட்டுமல்ல, கட்சியே இப்பொழுது சிதறிவிட்டது.

அவருடைய தலைமைத்துவத்தின் கீழ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும் சிதறவில்லை. தமிழரசுக் கட்சியே இரண்டாக உடைந்துவிட்டது. எனவே இப்பொழுது தொகுத்துப்பார்க்கலாம். கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தர் கடந்த 15 ஆண்டுகளிலும் எதைச் சாதித்தார் என்று பட்டியலிடலாம்...

முதலாவதாக, சிங்கள மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க முற்பட்டு அதில் தோல்விகண்டார். அதாவது வரலாறு அவருக்கு வழங்கிய பெறுமதியான ஆண்டுகளை அவர் பொருத்தமான விதத்தில் பயன்படுத்தவில்லை. ஆயுதப் போராட்டத்திற்கு பின்னரான தமிழரசியலில் பண்புரு மாற்றத்துக்கு தலைமை தாங்க அவரால் முடியவில்லை. இரண்டாவதாக, சிங்கள மக்களுக்கு அதிகம் விட்டுக் கொடுத்ததன் மூலம் அவர் எதையுமே பெற முடியவில்லை. மாறாக, தான் தலைமை தாங்கிய கூட்டின் சிதைவுக்கும் அதனால் காரணமாக அமைந்தார்.

ஈழத் தமிழர்களின் நவீன அரசியல் வரலாற்றில் அதிக ஆசனங்களை கொண்டிருந்த ஒரு காலத்தில் அந்தக் கூட்டுக்கு அவர் தலைமை தாங்கினார். ஆனால் கடந்த 15 ஆண்டுகளிலும் கூட்டு உடைந்துடைந்து சிறுத்துக்கொண்டு வந்து இப்பொழுது தமிழரசுக்கட்சியாக சிறுத்து விட்டது. இப்பொழுது தமிழரசுக் கட்சியும் இரண்டாக உடைந்துவிட்டது. தமிழ்த் தேசிய பிரதிநிதித்துவம் 22 ஆசனங்களில் இருந்து 13 ஆசனங்கள் வரையிலும் உடைந்துபோனமை மகா தோல்வி.

அதுபோலவே தன்னுடைய சொந்தத் தொகுதியிலும் அவர் தொடர்ச்சியாகப் பெற்றுவந்த வாக்குகளை பட்டியலிட்டுப் பார்த்தால் அதில் படிப்படியாக வீழ்ச்சியைக் காணலாம். இப்பொழுதிருக்கும் நிலையில் திருக்கோணமலையில் தமிழரசுக் கட்சிக்குப் போட்டியாக மற்றொரு தமிழ்த்தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சி களமிறங்கினால் இம்முறை சம்பந்தர் பெற்ற ஆசனம் அடுத்த முறை கிடைக்குமா என்பது சந்தேகம்தான். சிலசமயம் சம்பந்தரின் அனுதாப வாக்குகள் கிடைக்கக்கூடும்.

இவ்வாறு, தான் தலைமை தாங்கிய கூட்டுக்குள்ளும் ஒரு தலைவராக தோல்வியடைந்து, தனது சொந்த தேர்தல் தொகுதியில், தனது தாய்ப்பட்டினத்தில், தன்னுடைய ஆதரவுத் தளத்தை படிப்படியாகத் தேய விட்டதில் தோல்வியுற்று, தான் அங்கம் வகிக்கும் மூத்த கட்சிக்குள்ளும் ஒரு தலைவராக அவர் தோல்வியடைந்து விட்டார்.

ஒரு தலைவர் தன் வாரிசுகளாகக் களமிறக்கும் அரசியல்வாதிகள் அந்த தலைவரின் பெயரை வரலாற்றில் ஸ்தாபிப்பவர்களாக அமையவேண்டும். ஆனால் சம்பந்தர் கொண்டு வந்த சுமந்திரனோ அல்லது விக்னேஸ்வரனோ அவ்வாறு இருக்கவில்லை. விக்னேஸ்வரன் சம்பந்தரின் வழி தவறு என்று கூறி அவரிடமிருந்து விலகிச் சென்றார். சுமந்திரன் சம்பந்தரின் பட்டத்து இளவரசர் போல காணப்பட்டார். ஆனால் கட்சிக்குள் தேர்தலை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த பொழுது அவர் சம்பந்தரை பொதுவெளியில் அவமதித்தார். தன்னுடைய வாரிசினாலேயே அவமதிக்கப்படும் ஒரு தலைவராக சம்மந்தர் அவருடைய இறுதிக் காலத்தில் காணப்பட்டார்.

அவருடைய தாய்க் கட்சி நீதிமன்றத்துக்கு இழுக்கப்பட்டபொழுது அதைத் தடுக்கும் சக்தியற்றவராக அவர் இருந்தார். சாதாரணமாக ஒரு குடும்பத்தில் பிணக்கு என்று வரும்பொழுது மூத்தவர்கள் அதைத் தீர்த்து வைப்பார்கள். கட்சிக்குள்ளும் அப்படித்தான். எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முது தலைவர்கள் பிணக்குகளைத் தீர்த்துவைப்பார்கள். ஆனால் மிக மூத்த தலைவராக அவருடைய சொல்லை அவருடைய வாரிசே கேட்கவில்லை. விளைவாக கட்சி நீதிமன்றத்தில் நிற்கிறது. அது மட்டுமல்ல அவருடைய சொந்த தேர்தல் தொகுதியில் தன்னை மதியாமல் நியமனங்கள் செய்யப்படுகின்றன என்ற பொருள்பட அவர் ஒரு முறைப்பாட்டைச் செய்யுமளவுக்கு பலவீனமாக காணப்பட்டார். சம்பந்தரின் சுமார் இரண்டு தசாப்த கால தலைமைத்துவத்தை மதிப்பிட இது ஒன்றே போதும். அவர் தன்னுடைய தாய்க் கட்சியைச் சிதைய விட்ட ஒரு தலைவர். அவரால் எப்படித் தேசத்தைத் திரட்டியிருக்க முடியும்?

எனவே சம்பந்தரின் கடந்த சுமார் இரண்டு தசாப்த கால தலைமைத்துவத்தை தொகுத்துப் பார்த்தால் கிடைக்கும் விடை என்ன? திருகோணமலையைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவ மத குரு, அவர் ஒரு முக்கியமான சமூக அரசியல் செயற்பாட்டாளர், சில ஆண்டுகளுக்கு முன் என்னிடம் கேட்டார், "சம்பந்தர் இறந்தால் அவருடைய கல்லறையில் என்ன வார்த்தையைப் பொறிக்க வேண்டும்?" என்று. "என்ன வார்த்தை" என்று நான் கேட்டேன். அவர் சொன்னார் "பேசுவம்" என்று போடலாம்.

நன்றி: நிலாந்தன்




## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# இலங்கை அரசு எப்போது ஐ.நா. உறுப்புரிமைக்குள் கொண்டுவரப்பட்டதோ அப்போதிருந்தே அமெரிக்க வெளியுறவுக் கொள்கை ஈழத்தமிழர் அரசியல் அபிலாசைக்கு முரணாகச் செயற்பட ஆரம்பித்துவிட்டது!

## ஈழத்தமிழர் சுயாட்சிக் கழக நிறுவனர் அனந்தி சசிதரன்

06.07.2024



வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை நடாத்தும், பேரவைத் தமிழ் விழாவில் ஈழத்தமிழர்களின் பிரதிநிதியாக கலந்துக் கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் அதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்த தெரிவித்த அவர், "ஈழத்தமிழர் தேசிய விடுதலைப் போராட்டம் பற்றியும், அதை அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை எவ்வாறு பாதித்து வந்துள்ளது என்பது பற்றியும், அதிலும் குறிப்பாக அமெரிக்காவில் வாழுகின்ற தமிழர்கள் அனைவருக்கும் இது தொடர்பான அடிப்படைப் பொறுப்பு எவ்வாறு உள்ளது என்பது பற்றியும் எனது உரை அமைகிறது.

### இன அழிப்பு

இன அழிப்புக்கும் ஆக்கிரமிப்புக்கும் உள்ளாகியுள்ள ஈழத்தமிழர் தாயக மக்களின் குரலாக எனது உரையை இங்கு முன்வைக்கிறேன். இது விடுதலைக்காக உயிர் கொடுத்த, தமது உறவுகளை ஆகுதியாக்கிய மக்களின் ஏகோபித்த அரசியல் அபிலாசையின் குரல்.



2009 ஆம் ஆண்டு இன அழிப்புப் போரின் முடிவின் போது எனது கணவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியற் பொறுப்பாளர்களில் ஒருவராக நீண்டகாலம் செயற்பட்டவருமான எழிலன் அவர்களை எனது கண்ணுக்கு முன்னால் எமது மூன்று சிறிய பெண் குழந்தைகளுக்கு முன்னால், பொது மன்னிப்பு வழங்கப்படும் என்று இலங்கை இராணுவம் அறிவித்த பின்னர் அவர்களிடம் கையளித்தோம்.

அதுவும் ஒரு மதத் தலைவரான மதிப்புக்குரிய பிரான்ஸிஸ் அடிகளாரின் தலைமையில எழிலனும் அவர் போன்ற இன்னும் பலரும் ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு முறையில் கையளிக்கப்பட்டார்கள். ஆனால், இன்று வரை அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்தவில்லை, எந்த ஒரு சர்வதேச விசாரணையும் வெளிப்படுத்தவில்லை.

இந்தப் பின்னணியிலே, நீதிக்கான எனது பயணத்தை ஆரம்பித்தேன். அதன் விளைவாகவே எமது மக்களின் ஒரு பிரதிநிதியாக பெருந்தொகையான மக்களின் வாக்களிப்போடு 2013 ஆம் ஆண்டில் வட மாகாண சபையின் தேர்தலில் தெரிவாகினேன். வட மாகாண சபையில் ஓர் அமைச்சராகவும் சிறிது காலம் கடமையாற்றினேன்.

### நீதிக்கான பயணம்

வட மாகாண சபையின் அங்கீகாரத்தோடு எனது நீதிக்கான பயணத்தை தொடர்ந்து மேற்கொண்டேன். மாகாண சபையின் காலம் 2018 ஆம் ஆண்டோடு முடிவுக்கு வந்ததும் உடனடியாக அதைக் கலைத்துவிட்ட இலங்கை அரசு ஆறு ஆண்டுகள் கழிந்து இன்று வரை அதற்கான தேர்தலை நடாத்தவில்லை.

இந்தச் சூழலில் நீதிக்கான எனது பயணம் பல வழிகளில் தொடர்ந்துகொண்டிருக்கிறது. என்னைப் போன்ற அனைவரின் குரலாகவும் எனது குரலை இங்கு நான் முன்வைக்கிறேன்.




உயிர் கொடுத்தவர்கள் அனைவரின் குரலாகவும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அனைவரின் குரலாகவும் எனது குரல் வெளிப்படுகிறது.

அமெரிக்காவின் சுதந்திர நாளை ஒட்டிய விடுமுறையில் இன்றைய இந்த நிகழ்வு இங்கு நடந்துகொண்டிருக்கிறது. பிரித்தானிய ஏகாதிபத்தியப் பேரரசிடம் இருந்து பிரிந்து சுயாதீனமாக இயங்கப் போவதாக சுதந்திரப் பிரகடனத்தை (Declaration of Independence) 248 ஆண்டுகளுக்கு முன்னர் 1776 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நான்காம் நாள் வெளியிட்டார்கள்.

அந்தச் சுதந்திரப் பிரகடனத்தின் பின்னரும் பிரித்தானிய காலனித்துவத்துக்கு எதிரான அமெரிக்கப் புரட்சி 1783 ஆம் ஆண்டு வரை தொடர்ந்தது. 1787 ஆம் ஆண்டு அமெரிக்காவின் அரசியலமைப்பு (Constutution of the United States) உருவானது. 1791 ஆம் ஆண்டு மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட உரிமைகளின் சட்டவரைவு (Bill of Rights) என்று குறிப்பிடப்படும் பத்து சட்டத்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

இந்த மூன்று அடிப்படைகளான சுதந்திரப் பிரகடனம், அரசியலமைப்பு, பத்துத் திருத்தங்கள் இணைந்து அமெரிக்க மக்களின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் வரையறுத்துள்ளன.

### ஈழத்தமிழர்களின் போராட்டம்



இந்தச் சுதந்திரப் பிரகடனத்தைப் போல ஈழத்தமிழர் போராட்டத்தில் 1976 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் தந்தை செல்வாவின் தலைமையில் முன்வைக்கப்பட்டது தான் வட்டுக்கோட்டைத் தீர்மானம். இந்தத் தீர்மானம் 1977 ஆம் ஆண்டில் மக்களின் ஜனநாயக ஆணையைப் பெற்றது. இந்த அடிப்படையிலேயே ஈழத்தமிழர்களின் போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது.

1977 ஆம் ஆண்டு ஈழத் தமிழர்கள் தங்களுக்கான அரசியலமைப்பை உருவாக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தபோது அவர்கள் மீது இனப் படுகொலைத் தாக்குதல் கட்டவிழ்த்து விடப்பட்டது.



கறுப்பு யூலை 1983

அரசியலமைப்பை உருவாக்க இயலாதவாறு ஆறாம் சட்டத்திருத்தம் என்ற ஒன்றை 1983 ஆம் ஆண்டு தனது ஆக்கிரமிப்பு ஒற்றையாட்சி அரசியலமைப்புக்குள் கறுப்பு ஜூலை இனப் படுகொலையின் அடுத்த கட்டமாக கொண்டு வந்து ஈழத்தமிழர்களின் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்று இலங்கை அரசு பிரகடனம் செய்தது.

ஆயுதப் போராட்டத்தின் ஊடாக நடைமுறை தமிழீழ அரசு கட்டமைக்கப்பட்டு சர்வதேச அனுசரணையோடு பேச்சுவார்த்தை நடைபெற்றபோது ஈழத்தமிழர்களுக்கான பில் ஒவ் றைற்ஸ் என்பதன் ஆரம்ப முயற்சியாக வட கிழக்கு மனித உரிமை செயலகத்தின் சாசனம் (Human Rights Charter) உருவாக்கப்பட்டது.

ஆனால், இன்றுவரை சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தமக்கான சுயாட்சியை உருவாக்க முடியாமல் ஈழத்தமிழர்கள் இன அழிப்பின் பல விதமான வடிவங்களுக்கு உட்படுத்தப்பட்டு சீர்குலைக்கப்பட்டுள்ளார்கள்.

எங்களின் தாயகம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஈழத்தமிழர்கள் மீதான இந்த இன அழிப்பை நியாயப்படுத்த பயங்கரவாதம் என்று அதை இலங்கை அரசாங்கம் பிரகடனம் செய்த 1980 களின் ஆரம்பத்திலேயே அமெரிக்காவின் அன்றைய அதிபரான ரொனால்ட் ரீகனும் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை இலங்கையின் அப்போதைய அதிபர் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுடன் இணைந்து பயங்கரவாதம் என்று வர்ணித்தார்.



## அரசியல் அபிலாசை

உலகத்தின் புதிய ஏகாதிபத்திய அரசாக வளர்ந்துவிட்ட அமெரிக்கா தனது மூதாதையர்கள் 200 ஆண்டுகளுக்கு முன்னர் ஏகாதிபத்திய காலணித்துவத்துக்கு எதிராகப் போராடிய அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தினதும் அதன் அடிப்படைகளையும் மறந்து, தனது ஏகாதிபத்திய நலன்களை மட்டும் சிந்தித்துச் செயற்பட ஆரம்பித்துவிட்டது என்பதற்கு இது உதாரணம்.

1984 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் நாள் அமெரிக்க அதிபர் ஜெயவர்த்தனவுடன் இணைந்து ஈழத்தமிழர் போராளிகளை பயங்கரவாதிகள் என்று பேசியதை ரீகன் நூலகத்தில் இன்றும் நீங்கள் காணொளியில் காணலாம்.

2001 ஆம் ஆண்டு இரடைக் கோபுரத் தாக்குதலுக்குப் பின்னர் அல்ல, பல வருடங்களுக்கு முன்னரே, இலங்கை அரசு எப்போது ஐ. நா. உறுப்புரிமைக்குள் கொண்டுவரப்பட்டதோ அப்போதிருந்தே அமெரிக்க வெளியுறவுக்கொள்கை ஈழத்தமிழர் அரசியல் அபிலாசைக்கு முரணாகச் செயற்பட ஆரம்பித்துவிட்டது.

ஏன் தமிழர்களின் ஜனநாயக முடிவில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் பயங்கரவாதமாக அமெரிக்காவுக்குத் தோன்றியது? ஏன் ஜனநாயகத்துக்கே விரோதமாக அமைக்கப்பட்டுள்ள இலங்கை அரசியலமைப்பை ஆசியாக் கண்டத்திலேயே வயதில் மூத்த ஜனநாயகம் என்று அமெரிக்க அரசு தொடர்சியாகச் சொல்லிவருகிறது என்ற கேள்விகள் மிக முக்கியமானவை.

1989 ஆம் ஆண்டில் பேர்லின் சுவர் விலக்கப்பட்டதோடு அமெரிக்காவின் தலைமையிலான ஒரு துருவ உலக ஆட்சி பலப்பட்டிருந்தது. அதற்கு முன்னரே இந்தியாவால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எதுவும் பலனளிக்காமற் போய், திம்புவில் 1985 ஆம் ஆண்டில் தமிழ்த் தரப்பு ஒன்றிணைந்து வெளிப்படுத்திய நிலைப்பாட்டுக்குப் பின்னர், அந்த நிலைப்பாட்டில் தெளிவாகச் செயற்பட்டுக்கொண்டிருந்த தரப்பான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இந்தியா போரில் ஈடுபட்டதும் அதே 1989 காலப் பகுதிதான்.

## இந்தியாவின் முயற்சிகள்

1989 ஆம் ஆண்டுக்கு முன்னரே இந்தியாவின் முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை என்பதை வலியுறுத்தவும், அதுமட்டுமல்ல அதற்குத் தமிழ்த் தரப்பு முன்வைத்த நிலைப்பாடும் திம்புவில் வெளியாகிவிட்டது என்பதை நினைவுபடுத்தவும் மட்டும் இதை நான் குறிப்பிடவில்லை.



1989 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 2009 ஆம் ஆண்டு வரையான இருபது ஆண்டுக் காலத்தில் அமெரிக்கா தலைமையிலான உலக ஓட்டத்தில், தமிழீழப் போராட்டம் தொடர்பான பேச்சுவார்த்தையும் அது முடக்கப்பட்ட இன அழிப்புப் போரும் நடந்தேறியது என்பதை நினைவுபடுத்துவதற்காக பேர்லின் சுவர் உடைந்த 1989 ஆம் ஆண்டை இங்கு குறிப்பிட்டுப் பேச ஆரம்பிக்கிறேன்.



பேர்லினில் சுவர் உடைந்த 1989 ஆம் ஆண்டில் இருந்து எந்த ஆண்டு வரை அமெரிக்காவின் தலைமையிலான ஒரு துருவ அரசியல் நடைபெற்றதோ, அந்தக் காலத்தில் தான் நாம் ஒரு தேசமாகத் திரட்சியடைந்திருந்தபோதும், இராணுவ அரசியல் பலச் சமநிலையைக் கண்டிருந்தபோதும், ஒரு நடைமுறை அரசையே நடாத்தியபோதும், முப்படைகளைக் கொண்டு இயங்கும் நிலைக்குச் சென்றிருந்தபோதும், சர்வதேச அனுசரணையுடன் பேச்சுக்களை நடாத்தும் நிலைக்கு உயர்ந்திருந்தபோதும், 2009 ஆம் ஆண்டில் அமெரிக்கா உள்ளிட்ட நாற்பது நாடுகளின் துணையுடன் இலங்கை ஒற்றையாட்சி அரசு ஓர் இன அழிப்புப் போரை நடாத்தி எம்மை அழித்தது.

1989 ஆம் ஆண்டில் எம்மை இந்தியாவின் ஊடாக அழிக்க இலங்கை அரசுக்கு இயலாது போனது. 2009 ஆம் ஆண்டில், நாம் வளர்ந்திருந்தபோதும், அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், சீனா, ரஸ்யா, இஸ்ரேல், ஏன் உக்ரைன் உள்ளிட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகளின் உதவியோடு இலங்கை என்ற ஒரு சிறிய நாட்டின் அரசால் எம்மை அழிக்க முடிந்தது என்றால், அது சாத்தியமாவதற்கு ஒரே ஒரு அடிப்படைக்காரணம் அப்போதிருந்த ஒரு துருவ உலக அரசியல் என்பது அமெரிக்காவில் இருக்கக்கூடிய உங்கள் அனைவரின் விருப்பத்துக்கும் ஆற்றலுக்கும் கசப்பான ஒரு செய்தியாகும்.



## இரண்டு வல்லாதிக்க சக்திகள்

இந்தச் செய்தியை மறைத்துவிட்டும், மறந்துவிட்டும், வேறு சாட்டுகளை எமக்கு நடந்த இன அழிப்புக்கு காரணமாகத் தேடுவதில் அர்த்தமில்லை. ஆகவே, அமெரிக்கா தலைமையிலான ஒரு துருவ உலக ஒழுங்கில் இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்டு நாம் அழிக்கப்பட்டோம், எமது நடைமுறை அரசு அழிக்கப்பட்டது என்பது மறுக்கமுடியாத உண்மை.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான அடுத்த இருபது ஆண்டுகளில், அதுவும் 2029 ஆம் ஆண்டுக்கு இன்னும் ஐந்து ஆண்டுகளே இருக்கின்ற 2024 ஆம் ஆண்டில் நாம் ஒரு துருவ உலக ஒழுங்கு உடைந்து பல துருவ உலக ஒழுங்கு விரைவாக உருவாகிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.



அருகில் இருக்கும் பிராந்திய வல்லாதிக்கமாக எந்த அளவுக்கு இந்தியாவுக்குப் பொறுப்பிருக்கிறதோ, அதையும் விட அதிகமான பொறுப்பு அமெரிக்காவுக்கு ஈழத்தமிழர் இன அழிவு தொடர்பாக இருக்கிறது. இந்த இரண்டு வல்லாதிக்க சக்திகளும் 2009 ஆம் ஆண்டுக்கு அடுத்து வந்த இதுவரையான 15 ஆண்டுகளில் தமது பொறுப்பைத் தட்டிக்கழித்து வருகின்றன.

இரண்டு தரப்புகளும் தான் தவறுகளுக்குக் காரணம் என்றும், இரண்டு தரப்புகளையும் போர்க்குற்றங்களிலும், மானுடத்துக்கு எதிரான குற்றங்களிலும் சமப்படுத்திவிட்டு தமது பொறுப்பை இந்தியாவும் அமெரிக்காவும் தட்டிக்கழித்துவிடுகின்றன.

இந்தப் பொறுப்பைக் கேள்விக்கு உள்ளாக்கி, வல்லாதிக்கங்கள் தமது நலனை முன்வைத்துச் செயற்பட்டபோது எமக்கு இழைத்த அநீதியின் பாற்பட்ட பொறுப்பை அவர்களுக்கே நினைவுபடுத்தி, ஈழத்தமிழர்களுக்கான சர்வதேசப் பொறுப்புக்கூறலை நிறுவ வேண்டிய பொறுப்பு அமெரிக்காவில் இருக்கும் தமிழ்க் குடிமக்கள் அனைவருக்கும் அதிகமாக உள்ளது என்பதைப் பாதிக்கப்பட்ட தாயக மக்களின் பிரதிநிதியாக நான் இங்கு எடுத்துக் கூறக் கடமைப் பட்டுள்ளேன்.

ஆகவே, அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்குள் அமெரிக்காவில் இருக்கும் ஈழத்தமிழர்கள் மட்டுமல்ல அனைத்துத் தமிழர்களுக்குமான கடமை என்ன என்பதைப் பற்றிய சிந்தனை அமெரிக்காவில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் அவசியமாகிறது. அடிப்படையானது. இலங்கையிலே, தேர்தல் அரசியல் மூலம் எமது உரிமைகளை வென்றெடுத்துவிட இயலாது.

## முக்கியமான வேண்டுகோள்

இலங்கை ஒற்றையாட்சி அரசியலமைப்பு அவ்வாறு வடிவமைக்கப்பட்டு எம்மீது திணிக்கப்பட்டுள்ளது. வடமாகாண சபையிலே இன அழிப்புக்கான சர்வதேச நீதி கோரிய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினோம்.

இது ஒன்று தான் கடந்த 15 ஆண்டுகாலத் தேர்தல் அரசியலில் எம்மால் செய்யக்கூடியதாக இருந்த ஒரே ஒரு உருப்படியான காரியம். நான் 2009 ஆம் ஆண்டுக்குப் பின், பாதிக்கப்பட்ட மக்களின் குரலாக, அரசியலுக்கு வந்தேன். எமது கோரிக்கைகளை எந்தெந்தச் சர்வதேச மட்டங்களுக்கு எல்லாம் எடுத்துச் செல்லவேண்டுமோ அங்கெல்லாம் சென்று எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையாக இருக்கட்டும், மக்கள் தீர்ப்பாயமாக இருக்கட்டும், தமிழ் மக்கள் முன்னெடுக்கும் மாநாடுகளாக இருக்கட்டும் எங்கும் எமது குரலை ஆங்கிலம் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் முன்வைத்து வந்துள்ளேன்.

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு என்னை நீங்கள் அழைத்தபோது இந்தச் சந்தர்ப்பத்தில் என்ன செய்தியை நான் சொல்லவேண்டுமோ அதைச் சொல்வதற்கான ஒரு வாய்ப்பாக இது அமையும் என்று கருதியே நான் அழைப்பை ஏற்று இங்கு வந்துள்ளேன்.

தங்கள் அனைவருக்கும் இந்த அழைப்புக்கு நன்றி தெரிவிக்கும் அதேவேளை, குறிப்பாக அமெரிக்கா வாழ் தமிழ் மக்களுக்கு ஈழத்தமிழர்கள் அனைவரின் சார்பாகவும் இரண்டு முக்கியமான வேண்டுகோள்களை முன்வைக்கிறேன்.

முதலாவது, 1976 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்டு 1977 ஆம் ஆண்டில் ஈழத்தமிழர்களின் மக்கள் ஆணையைப் பெற்றுவிட்ட சுயநிர்ணய உரிமையின் பாற்பட்ட ஈழத்தமிழர்களின் விடுதலைக்கான அரசியல் அபிலாசையை ஜனநாயக ரீதியாக எடுத்துச் செல்வதற்கு வேண்டிய சர்வதேச மத்தியஸ்தத்தோடும் கண்காணிப்போடும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தாயகத்திலும், புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்கள் மத்தியிலும் நடாத்தப்படவேண்டிய பொதுவாக்கெடுப்பு என்ற கோரிக்கைக்காக அமெரிக்கா வாழ் தமிழர்கள் தமது பொறுப்பை உணர்ந்து செயலாற்றவேண்டும் என்ற வேண்டுகோள்.

## சர்வதேச நீதி

இரண்டாவது, ஈழத்தமிழர் மீது 1948 ஆம் ஆண்டில் இருந்தே மேற்கொள்ளப்பட்டுவரும் பண்பாட்டு, கட்டமைப்பு இன அழிப்பு உட்பட்ட 1956 ஆம் ஆண்டில் இருந்து 2009 ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட பௌதிக இன அழிப்பு உட்பட்ட, 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரும் தொடருகின்ற பண்பாட்டு, கட்டமைப்பு இன அழிப்பு தொடர்பாகவும், மீண்டும் நடைபெறக்கூடிய




பௌதிக இன அழிப்பு தொடர்பான ஆபத்து 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரும் எந்த வித பொறுப்புக்கூறலுக்கும் உள்ளாக்கப்படாமல் நீடிக்கப்படுவதால், இவை அனைத்தையும் உள்ளடக்கிய சர்வதேச நீதி தொடர்பான வேண்டுகோள்.

முதலாம் வேண்டுகோள் சுயநிர்ணய உரிமையின் பாற்பட்ட பொதுவாக்கெடுப்பு, இரண்டாவது வேண்டுகோள் இன அழிப்புக்கான இலங்கை அரசின் பொறுப்பை சர்வதேச நீதிமன்றில் விசாரணைக்கு உள்ளாக்கவேண்டும் என்ற வேண்டுகோள். இவை இரண்டும் சர்வதேச நீதியின் அப்பாற்பட்டவை.


இவை இரண்டும் இன்றிய வேறெந்த வேண்டுகோள்களும் கோரிக்கைகளும் வெறும் கண்துடைப்பாகவே வெளிப்படும். இந்த வகையில் தமிழ்நாட்டு அரசின் காலஞ்சென்ற முதலமைச்சர் ஜெயலலிதா தமிழ்நாட்டு சட்டசபையில் 2013 ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம் நாள் அன்று நிறைவேற்றிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானமும், ஈழத்தில் வடமாகாண சபையில் நான் இணைந்து நிறைவேற்றிய இன அழிப்புக்கான சர்வதேச நீதியைக் கோருகின்ற தீர்மானமும் இந்த இரண்டு அடிப்படைகளோடும் நேரடியாகத் தொடர்புள்ளவை.

## தமிழ் அடையாளம்

இவற்றை முன்னெடுப்பதற்கு அமெரிக்காவின் பத்துச் சட்டத் திருத்தங்களில் தலையான முதலாம் சட்டத்திருத்தம் (First Amendment) என்பதைப் பற்றுக்கோடாகக் கொண்டு, அமெரிக்க அரசின் தவறான வெளியுறவுக்கொள்கையால் ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை மாற்றியமைக்கும் பொறுப்பு அமெரிக்க மக்களுக்கு உள்ளது என்பதை நினைவுபடுத்தும் வகையிலும் செயலாற்றவேண்டும்.

இந்த இரண்டு வேண்டுகோள்களையும் வட அமெரிக்கத் தமிழர்கள் தமது தமிழ் அடையாளத்தின் அடிப்படை சார்ந்த பொறுப்பாக எடுத்துக் கொண்டு அர்த்தமுள்ள வகையில் செயற்படவேண்டும் என்பது ஈழத்தமிழர்களின் எதிர்பார்ப்பு என்பதை இங்கு நினைவுபடுத்தி, இந்த வாய்ப்பைத் தந்த அனைவருக்கும் நன்றி கூறி அமைகின்றேன்” என்றார்.









# கறுப்பு யூலை 1983

சிங்கள ஒளிப்பட வல்லுநர் சந்திரகுப்த அமரசிங்க,
இந்த தமிழ் இளைஞன் கொல்லப்படுவதற்குச் சற்றுமுன் எடுத்த ஒளிப்படம்.
நிர்வாணமாக்கப்பட்ட இளைஞனைச் சுற்றி சிரித்து நடனமாடும் சிங்களவர்கள்.



இடம்:
பொரளை பேருந்து தரிப்பிடம்.